

சிறுவர்களுக்கான
திருவிளையாடற் புராணக் கதைகள்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

சிவபெருமானின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் சைவச் சிறார்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கில் இதை எழுதுகிறேன். அறுபத்துநான்கு திருவிளையாடல்களில் ஒரு சிலவற்றை மட்டுமே மக்கள் அறிந்துள்ளனர். ஏனையவை மறைபொருளாகவே தற்கால இளைஞர்களுக்கு உள்ளன. ஆறுமுகநாவலர் எழுதிய திருவிளையாடற்புராணம் அவர் எழுதிய கலை மொழிநடையில் உள்ளது. காலமாற்றம் மொழியில் பல வேறுபாடுகளைப் புகுத்தியுள்ளது. முன்பு தமிழ்நூல்களில் வடமொழிக் கலப்பு மட்டும் இருந்தது. இப்போது பல மொழி பேசுவோர் வாழ்வதால் அம் மொழிகள் ஒவ்வொரு மொழிகளிலும் புகுந்து தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

பழைய தமிழ் இலக்கணத்தமிழ், இலக்கணத்தை முழுமையாகக் கற்றவர்கள் எழுதுவார்கள். இலக்கணத்தை முழுமையாகக் கற்றவர்கள் வாசிப்பார்கள். சாதாரண மக்களின் மொழியே தற்போது எழுத்து மொழியாகி மக்களை கவர்ந்து வருகிறது. அந்த மொழியில் இலக்கணப்பிசகு ஏற்படாதவண்ணம் தனித்தமிழில் நான் எழுதி வருகிறேன். தேவையில்லாத பொருளை வாங்காதது போல விளக்கமில்லாத மொழிகளால் உருவாக்கப்படும் நூல்களையும் வாசிக்கமாட்டார்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் திருவருட்பயன் என்ற நூலில் காட்டு மிருகங்களைப் பழக்கப்பட்ட மிருகங்களின் உதவியுடன் பிடித்தல் வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதை எழுத்திலும் பின்பற்றினால் தான் எழுத்து முழுமை பெறும். அதற்காகச் சிறுவர்களுக்கு விளங்கக் கூடிய மொழியில் எழுதுகிறேன். அது வெற்றியைத் தருகிறது. இந்நூலை எழுதும்படி வேண்டிக் கொண்ட இந்து கலாச்சார அமைச்சின் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். சைவசமய வளர்ச்சியில் மிகுந்த பற்றும் அக்கறையும் கொண்ட அவர் பழைய சைவசித்தாந்த நூல்களையெல்லாம் தேடித் தேடிப் பெற்று அச்சேற்றுகிறார். அவரது பணி சிறக்க எல்லாம் வல்ல சிவபெருமான் அருள் செய்வாராக.

நன்றி.

**கே.பி.குணசேகரன்**

# புராண வரலாறு

திருக்கைலாய மலையில் வீற்றிருக்கும் முன்னுள்ள தீர்த்தக்கரையில் ஆயிரங்கால் மண்டபம் ஒன்றுண்டு. சூதமுனிவர் அம்மண்டபத்தில் இருந்து தனது மாணவர்களுக்கு உபதேசம் செய்வது வழக்கம். ஒருநாள் சம்புத்தர், மகோதரர், உக்கிரவீரியர், பிரசண்டர் முதலிய முனிவர்கள் அங்கு வந்து அவரைப் பூக்களால் அர்ச்சித்து வணங்கி "குருவே, சிவபெருமான் எல்லாத் திருத்தலங்களிலிருந்தும் எழுந்தருளியிருந்து அருள் பாலித்தாலும் அவற்றுள் விசேடமான தலம் எதுவென்று எமக்குச் சொல்லியருளும்" என்றனர்.

"முனிவர்களே பதினெண்புராணங்களுள் காந்தம் மிக உயர்ந்தது. சங்கிதைகளில் சங்கரு சங்கிதையைச் சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்து அருளியமையால் சங்கிதைகளுள் சங்கரு சங்கிதையே மிகவும் உயர்ந்தது. அதை உமாதேவியாருக்கு சிவபெருமான் உபதேசிக்கும்போது முருகன் அதைக்கேட்டு உணர்ந்து தனது மாணாக்கனாகிய அகத்திய முனிவனுக்கு அதை உபதேசித்தார். அதனால் அது அன்று தொட்டு அகத்திய சங்கிதை என வழங்கப்படுகிறது. அதில் முத்தியைக் கொடுக்கும் சிவத்தலம் 'திருவாலவாய்' என்று சொல்லப்பட்டுள்ளது." என்றார்.

அதைக் கேட்ட முனிவர்கள் அத்தலத்தின் பெருமைகளைக் கூறுமாறு கேட்டனர். "முனிவர்களே, முன்பு ஒரு நாளில் பிரம்மதேவர் காசியை அடைந்து அகத்தியருடனும் வேறு பல முனிவர்களுடனும் சேர்ந்து பத்து அசுவமேத யாகங்களைச் செய்து விட்டு ஏனைய முனிவர்களை ஆசீர்வதித்துவிட்டு சத்தியலோகத்தை அடைந்தார். அதன் பின் முனிவர்கள் அகத்தியரிடஞ் சென்று, "மாமுனிவரே, தல விசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம் ஆகிய மூன்று விசேடங்களும் ஒருங்கமைந்த திருத்தலம் எது" என்று கேட்டார்கள்.

அதைக் கேட்டு மகிழ்ந்த அகத்தியர், சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் செய்தருளிய 'திருவாலவாய்' என்ற திருத்தலமே நீங்கள் கேட்ட மூன்று விசேடங்களையும் கொண்ட திருத்தலம்.

சிவனது அந்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் எனது குரு கூறியதுபோல நான் உங்களுக்குக் கூறுகிறேன்" என்று அகத்திய முனிவர் அவை பற்றி விரிவாகக் கூறத் தொடங்கினார்.

## தலவிசேடம்

அகத்திய முனிவர் சொன்னார்; "சிவபக்தியில் சிறந்த முனிவர்களே, சிறந்த தலம் திருவாலவாய். இங்கு 'சுவர்ணகஞ்சம்' என்ற தீர்த்தமும், அதன் அருகில் தானே எழுந்த சோமசுந்தரமூர்த்தி என்ற சிவலிங்கமும் உண்டு. இம் மூன்றிற்கும் ஒப்பான தலமோ, தீர்த்தமோ, லிங்கமோர் உலகெங்கிலும் இல்லை. திருவாலவாய் என்ற பெயரைக் கேட்டவர் தருமவானாவர், நினைத்தவர் வேண்டிய பொருளை அடைவர். தரிசித்தவர் இன்பத்தை அடைவர். அவர்களை எந்தப் பாவமும் வந்து சேராது. போகநாணப் பயன்கள் அவர்களுக்கு வந்து கிடைக்கும். அதனால் பயன்களை விரும்புவோர் திருவாலவாய்க்கு வந்து சோமசுந்தரப் பெருமானைத் தரிசிக்க வேண்டும். இதற்கு சிவநகரம், கடம்பவனம், சிவன்முத்திபுரம், கன்னியாபுரம், திருவாலவாய், மதுரை, பூலோக சிவலோகம், சமட்டிவித்தியாபுரம், நான்மடக்கூடல், துவாதசாந்தம் என்ற பெயர்களும் உண்டு.

## தீர்த்த விசேடம்

நீர்நிலைகள் எவையும் தோற்றுவிக்க முன்பு சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டது பொற்றாமரை வாவி.

திருநந்திதேவரும் ஏனைய கணங்களும் சிவபெருமானைச் சந்தித்து; "சுவாமி இங்கு எழுந்தருளியிருக்கும் லிங்கப்பெருமானுக்கு அபிடேகம் செய்யவும் நாங்கள் நீராடவும் எந்த ஒரு நீர்நிலையும் இல்லை. அதனால் ஒரு நீர்நிலை அமைத்துத் தரல் வேண்டும்' என்று கேட்டு வணங்கினர். உடனே சிவபெருமான் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றச் சிவலிங்க மூர்த்திக்குத் தென்கிழக்குத் திசையில் தனது சூலத்தை நாட்ட அச்சூலம் பூமியையும் பாதாளத்தையும் துளைத்துச் சென்று ஒரு நீர்நிலையை உருவாக்கியது. உடனே சிவபெருமான் தனது சடையில் பாய்ந்த கங்கை நீரை அதில் பாய்ச்சி அதைப் புனிதப்படுத்தினார். பின், 'கணநாதர்களே எல்லாத் தீர்த்தங்களை விட இது மேலானது. அது ஆதி தீர்த்தம் என்றும், பரம தீர்த்தம் என்றும், சிவ தீர்த்தம் என்றும், ஞான தீர்த்தம், முத்தி தரும் தீர்த்தம் என்றும் பெயர் பெறும். இதில் நீராடி அருகில் உள்ள இலிங்கப் பெருமானை வழிபடுவோர்க்கு எல்லாப் பாவங்களும் தீரும். ஞானம் உண்டாகும். முத்தி உண்டாகும்" என்று கூறிச் சிவபெருமான் மறைந்தார்.

அதன்பின் அகத்திய முனிவர் சொன்னார்; “முனிவர்களே, பொற்றாமரை வாவியைப் பார்த்தால் செய்த பாவங்கள் யாவும் நீங்கும். நீராடினால் நினைத்தவை யாவும் நிறைவேறும். முழுகினால் உலகில் உள்ள அனைத்துப் புனித தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கும். மலத்தை நீக்கி முத்தியைக் கொடுக்கும். ஜென்ம நட்சத்திரத்தில் நீராடினால் பிறவித்துன்பம் நீங்கும். சித்திரை, கார்த்திகை, மாசி மாதங்களில் நீராடினால் பிதிர்கள் சுவர்க்கத்தை அடைவர். பொற்றாமரை வாவியில் நீராடினால் சகல பொருட்களையும் தானம் செய்த பலன் கிடைக்கும். அத்துடன் சுகபோகங்கள் யாவும் இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கும்? என்றார்.

## மூர்த்தி விசேடம்

“முனிவர்களே, இந்த லிங்கம் தான் முதன்முதலில் தோன்றிய லிங்கம். அதன் பின்பு தான் ஏனைய இலிங்கங்கள் தோற்றம் பெற்றன. அதனால் இதை மூல லிங்கம் என்பர். இதில் முப்பத்திரண்டு இலக்கணங்களும் அமைந்த திருமேனியை உடைய சிவபெருமான் உமாதேவியாரோடு இருக்கிறார். அதனால் தேவர்கள் இச் சிவலிங்கத்திற்குச் சோமசுந்தக்கடவுள் என்ற நாமத்தைச் சூட்டினர். இவரே அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் செய்தருளினார். இச் சிவலிங்கத்தைத் தரிசித்தால் செய்த பாவங்கள் யாவும் நீங்கிவிடும். இவர்கள் ஆயிரம் அசுவமேத யாகத்தைச் செய்த பயனை அடைவார்கள். இந்த இலிங்கத்தைத் தரிசிப்போர் வேண்டிய வரங்களைப் பெற்று இம்மையிலும் மறுமையிலும் பேரின்பமாக வாழ்வர். தற்பொழுது தல விசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம் பற்றிச் சொன்னேன். இனி அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் பற்றிச் சொல்வேன் கேளுங்கள்” என்று கூறிய அகத்திய முனிவர் அத் திருவிளையாடல்களைச் சொல்லத் தொடங்கினார்.

உ

சிவமயம்

# திருவிளையாடற் புராணக் கதைகள்

## சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த படலம்

தென் இந்தியாவில் மதுரை என்றொரு பெரிய நகரம் உண்டு. அங்கே சிவபெருமானும் உமையம்மையும் கோவில் கொண்டிருக்கின்றனர். சைவர்கள் மிகுதியாக வாழும் நகரம் அது. அதன் அருகே ஒரு பெரிய காடு உண்டு. காட்டுள் நின்று பார்த்தால் வானம் தெரியாத அளவிற்கு மரங்கள் உயர்ந்து வளர்ந்திருந்தன. அக்காட்டுப் பகுதியில் மாதமொருமுறை என்றாலும் மழை பெய்யும். அதனால் காட்டு மரங்கள் செழித்த வளர்ந்திருந்தன. ஏராளமான பழமரங்கள் நின்றமையால் பறவைகளும், ஊன் உண்ணாத மிருகங்களும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தன. அக்காட்டின் ஒரு பகுதியில் பன்றிகள் வாழ்ந்து வந்தன. அவை நிலத்தில் பழுத்து விழும் பழங்களையும், செழித்து வளர்ந்த புற்களையும் உண்டு வந்தன. யானைகளும் எருமைகளும் காட்டின் நடுவில் உள்ள பெரிய குளத்தில் நீந்தி விளையாடும். நேரம் போவது தெரியாமல் அவை விளையாடும். மிருகங்களைக் கொன்று தின்னும் கொடிய மிருகங்களாக சிங்கமும் புலியும் அக்காட்டில் இல்லாமையால் மிருகங்கள் அச்சமின்றி வாழ்ந்தபோதும் வேடர்களும், அயற் கிராமத்தவர்களும் மான்களையும், பன்றிகளையும், முயல்களையும் வேட்டையாட அக்காட்டிற்கு அடிக்கடி வருவார்கள்.

அக்காட்டில் ஒரு பன்றி வாழ்ந்து வந்தது. அது ஐந்து தினங்களுக்கு முன் பன்னிரண்டு குட்டிகளை ஈன்றது. அழகான அப் பன்னிரண்டு குட்டிகளையும் தாய்ப்பன்றி பார்த்து இரசிக்கும். அவை அதன்மேல் ஏறி விளையாடும்போது மிக்க மகிழ்ச்சியடையும். அன்று அது குட்டிகளுக்குப் பாலூட்டிவிட்டுத் தனக்கு உணவு தேடச் சென்றது. காட்டின் கிழக்குப்பகுதியில் நல்ல சுவையான பழ மரங்கள் நின்றன. நாலைந்து தினங்களாகத் தனது இருப்பிடத்திற்கு அருகில் இருந்த புற்களையும், கிழங்குகளையும், இலைகுழைகளையும் உண்ட அத் தாய்ப்பன்றி காட்டின் கிழக்குப் பகுதிக்குச் சென்று பழங்களை உண்ண விரும்பியது.

பழமரங்கள் அதிகமாக உள்ள பகுதிக்கு மிருகங்கள் வரும் என்று வேடர்கள் காத்திருப்பர். அது மிருகங்களுக்குத் தெரியும். அவை தூர இருந்து அவதானித்துவிட்டுக் கவனத்துடன் தான் அப்பகுதிக்கு வரும். குட்டியீன்ற அத் தாய்ப்பன்றி மரங்கள் இருந்த பகுதியை நோட்டமிட்டது. யாரையும் காணவில்லை.

மெதுவாக நடந்து வந்து பழங்களை எடுத்து உண்டது. இதை மரத்தின் மேலிருந்த வேடன் ஒருவன் அவதானித்துவிட்டு இலக்குப் பார்த்து அம்பை எய்தான். அது நேராகச் சென்று பன்றியின் வயிற்றுப் பகுதியில் ஏறியது. பன்றி பலமாக அலறியது. அது துடிதுடித்து இறந்தது.

குட்டிகள் பசியால் துடித்தன. தாங்கமுடியாத பசியால் பெரிதாக அழுதன. அவைகளின் அழுகைச் சத்தம் எல்லா உயிர்களுக்கும் தந்தையான சிவபெருமானுக்குக் கேட்டது. எல்லா உயிர்களையும் படைத்துக் காத்து அருளும் சிவபெருமானுக்கு அக் குட்டிகளின் அழுகைச்சத்தம் கேட்டது. அவர் எல்லா உயிர்கள் மீதும் கருணை உள்ளவர். எல்லா உயிர்களையும் தாயைவிட மேலாக நேசிப்பவர். அதனால் அவர் தாய்ப்பன்றியாக மாறிவந்து குட்டிகளுக்குப் பாலூட்டினார். குட்டிகள் மகிழ்வுடன் வயிறு நிறைய பாலை உண்டன. அதன்பின் மகிழ்வுடன் அவரின் மேல் ஏறி விளையாடின. சிவபெருமான் அவற்றைத் தாய்மையுடன் நக்கினார். பன்றி எல்லா மிருகங்களையும்விட அசுத்தமானது. அதைவிட அழுகிய பொருட்களையே அது விரும்பி உண்ணும். அப்படிப்பட்ட கேவலமான மிருகத்திற்குத் தாயாக வந்த சிவபெருமானின் கருணை அளப்பரியது.

சிவன் எல்லா உயிர்களிலும் மிகுந்த அன்பை வேறுபாடு காட்டாது காட்டுபவர். அதனால்தான் வேதங்களும், ஆகமங்களும் அவரைச் சர்வசீவதயாபரன் என்று சொல்கின்றன. அதுபோல அறிவுள்ள மனிதர்களும் பிராணிகள்மீது அன்பு கொண்டு அவற்றைத் துன்புறுத்தாது வாழ வேண்டும். அப்படியல்லாது துன்புறுத்துபவர்கள் மீது சிவபெருமான் வெறுப்புக் கொள்வார். அன்பில் உயர்வு தாழ்வு காட்டாது எல்லாவற்றையும் சமமாக நேசித்தல் வேண்டும். பன்றியையும் எம்மையும் படைத்தவன் சிவபெருமான். புண்ணியம் செய்தவர்கள் சிவனின் நிழலில் பிறப்பின்றி வாழ்வர். பாவம் செய்தோர் திரும்பத் திரும்பப் பிறந்து இறந்து துன்பப்படுவர். சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் தந்தையும் தாயுமாக இருப்பவர். அதனால் அவர் படைத்த எல்லா உயிர்களும் உயர்வானவையே. அதனால் அவரைப் போன்று எல்லா உயிர்களையும் நாம் பாகுபாடின்றி நேசிக்க வேண்டும். அப்படி நேசித்தால் தான் சிவபெருமான் எம்மை நேசிப்பர். சிவபெருமான் நேசிப்பவற்றை நாமும் நேசித்தால் அது அவரை நேசித்தமைக்குச் சமமாகும்.

“ஏழைக் குருளைக்கு அருளினாய் போற்றி”

# சிவபெருமான் மண் சுமந்த படலம்

மதுரையை ஆண்ட அரிமர்த்தன பாண்டியன் நாட்டை நீதி வழுவாது ஆண்டு வந்தான். அவனது முதல் அமைச்சராக மாணிக்கவாசகர் என்னும் சிவபக்தர் கடமை புரிந்தார். அவர் நீதியான முறையில் தனது வேலைகளைச் செய்து வந்தார். அதனால் மன்னனும், மக்களும் அவரைப் பெரிதும் மதித்தனர். இருப்பினும் அவருக்கு அந்தக் கௌரவம் மிக்க வேலையில் நாட்டமில்லாதிருந்தது. அவரது மனம் சிவபெருமானை நாடியது. மந்திரிப் பதவியைத் துறந்துவிட்டுச் சிவனுக்கு வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அப்படியிருக்கும் நாளில் நல்ல இனக்குதிரைகள் கிழக்குக் கடற்கரையில் விற்கப்பட்டன. அதை அறிந்த பாண்டியன் மாணிக்கவாசகரை அழைத்து நல்ல இனக் குதிரைகளை வாங்கி வருமாறு கூறி அதற்கேற்றளவு பொன் கொடுத்தான். பின் மாணிக்கவாசகருக்குத் துணையாகப் பரிவாரங்களையும் அனுப்பி வைத்தான். அவர்கள் செல்லும் வழியில் திருப்பெருந்துறை என்னும் சிவத்தலம் இருந்தது. தலத்தின் அருகே இருந்த ஒரு சோலையில் அருட்குரு ஒருவர் இருந்து தமது மாணவர்களுக்கு வேத உபநிடதங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார். ஏற்கனவே சிவபெருமானின்மீது தீராக் காதல் கொண்டிருந்த மாணிக்கவாசகர் அவ் அருட்குருவின் அருகே சென்றதும் அவரால் கவரப்பட்டார். அதனால் மாணிக்கவாசகர் தன்னையும் தான் வந்த பணியையும் மறந்து விட்டார். அக்குருவோடு ஐக்கியமாகி அங்கேயே இருந்து விட்டார். அவர் கொண்டுவந்த பொன்னைச் சிவ ஆலயங்களுக்கும், சிவனடியார்களுக்கும் கொடுத்து உதவினார். இப்போது அவரிடம் பொன் எதுவும் இல்லை. அதை அரசன் மாணிக்கவாசகருடன் அனுப்பிய பரிவார சேனைத்தலைவன் சென்று பாண்டியனுக்குச் சொன்னான். அதனால் கடுங்கோபங் கொண்ட பாண்டிய மன்னன் அவர்களை அழைத்து மாணிக்கவாசகரைக் குதிரைகளைக் கொண்டு வரும்படி சொல்லி அனுப்பினான். மாணிக்கவாசகர் செய்வதறியாது திகைத்தபோது அருட்குரு அவரின் அருகே வந்து, “நீர் பாண்டிய மன்னனிடம் சென்று ஆவணி மூலநாளன்று குதிரைகள் வந்து சேரும் என்று சொல்லும்” என்றார்.

ஆவணி மூல நாளன்று குதிரைகள் வந்து சேர்ந்தன. மன்னன் மகிழ்ந்து மாணிக்கவாசகரைப் பாராட்டினான். அன்று இரவு வந்து சேர்ந்த குதிரைகள் நரிகளாக மாறி பந்தியில் நின்ற குதிரைகளைக் கடித்துக் குதறின. அதனால் கோபங் கொண்ட பாண்டியன் மாணிக்கவாசகரைக் கொடுமையாகத் தண்டித்தான். அதைப் பொறுக்கமுடியாத சிவபெருமான் வைகை நதியைப் பெருகச் செய்தார். வைகைநதி ஊழிப் பெருக்குப்போலப் பெருகி நாட்டை அழித்தது. இது வரை காலமும் ஏற்படாத

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் ஆற்றின் அணைகள் யாவும் உடைந்தன. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். மன்னன் பெரும் துன்பப்பட்டான். பின் மக்களை அழைத்து அணையைக் கட்டுமாறு பணித்தான். ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கட்ட வேண்டிய நிலத்தின் அளவு அளந்து விடப்பட்டது.

அவ்வூரில் செம்மனச்செல்வி என்றொரு மூதாட்டி வசித்து வந்தாள். அவளுக்குப் பிள்ளைகள், உற்றார், உறவினர் எவரும் இல்லை. அவள் ஒரு சிவபக்தை. எந்நேரமும் சிவனைப் போற்றி வணங்கிக் கொண்டிருப்பவள். அவள் தனது சீவனத்திற்காகப் பிட்டு அவித்து விற்று வந்தாள். அவள் ஆற்றங்கரைக்கு வந்து தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைப் பார்த்தாள். அவ்வூரில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் இடம் பிரித்து ஒதுக்கப்பட்டிருந்ததால் எல்லோரும் தமக்கு ஒதுக்கப்பட்ட அணையைக் கட்டிக் கொண்டிருந்தனர். யாரும் அவருக்கு உதவி செய்ய வரவில்லை. அதனால் அவள் சிவனைப் பிரார்த்தித்தாள்; “சிவனே, எனது நிலை உனக்குத் தெரியும். உன்னைத் தவிர எனக்கு யாரின் துணையும் இல்லை. ஊரில் உள்ள எல்லோருக்கும் அவரவரது பங்கு ஒதுக்கப்பட்டிருப்பதால் எனக்குதவ யாரும் வருகிறார்களில்லை. நீ தான் இதற்கு ஆவன செய்ய வேண்டும்” என்று மனமுருகிப் பிரார்த்தித்தாள்.

“சிறிது நேரத்தில் வாட்டசாட்டமான ஒரு அழகிய இளைஞன், செம்மனச் செல்வியின் அருகே வந்து, “யாருக்காவது கூலியாள் வேண்டுமா” என்று கேட்டான்.

செம்மனச்செல்வி மனம் மகிழ்ந்து, “மகனே, எனக்கு ஒதுக்கிய அணையைக் கட்டு, நான் பிட்டு அவித்து விற்றுச் சீவனம் நடத்துபவள். இப்போது உதிர்ந்த பிட்டைத் தருகிறேன். உண்டுவிட்டு அணையைக் கட்டு, பிட்டு விற்றுவிட்டு உனக்குக் கூலி தருகிறேன்” என்றாள்.

“எனக்குக் கூலி வேண்டாம் சாப்பிடப் பிட்டுத் தந்தால் போதும்” என்று கூறிய அந்த இளைஞன் செம்மனச் செல்வியிடம் பிட்டை வாங்கி வயிறார உண்டுவிட்டு அணையின் பக்கம் சென்று சில கூடை மண்ணைக் கொட்டிப்போட்டு விட்டு மர நிழலில் உறங்குவான். பின் எழுந்து சென்று சில கூடை மண்ணைக் கொண்டு சென்று போட்டுவிட்டு மறுபடியும் தூங்குவான். இவ்வாறு மாலைவரை செய்து கொண்டிருந்தான். ஏனையோர் கட்டி முடித்து விட்டனர். செம்மனச் செல்வியின் பாகம் கால்வாசி கூடக் கட்டப்படவில்லை.

மாலையானதும் மன்னன் அணைகட்டுவதைப் பார்வையிட வந்தான். செம்மனச் செல்விக்கு ஒதுக்கப்பட்ட பகுதி கட்டி முடிக்கப்படவில்லை. அதனால் கோபங் கொண்ட பாண்டியன் அதற்குப் பொறுப்பான அதிகாரியைக் கேட்டபோது செம்மனச் செல்வியின் பகுதியை அடைக்க வந்த கூலியாளின் செயலைச் சொன்னான். அதனால் கோபங்கொண்ட பாண்டியன் கூலியாளாக வந்த சிவபெருமானுக்குப் பிரம்பால் அடித்தான். உடனே அந்த இளைஞன் மறைந்து விட்டான். பாண்டிய மன்னன் அடித்த அடி பாண்டிய மன்னனுக்கும் உலகில் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் பட்டது. பாண்டிய மன்னன் தனது தவறை உணர்ந்து மாணிக்கவாசகரிடம் மன்னிப்புக் கேட்டான்.

இது பற்றிய இன்னொரு கதை திருவிளையாடற்புராணத்தில் உண்டு. ஒருமுறை வைகை ஆறு பெருக்கெடுத்து மதுரை நகரில் உள்ள வீடு வளவுகள், வயல்கள், சோலைகள் யாவற்றையும் அழித்து மதுரை நகரைச் சுற்றிக் கட்டிய மதிலையும் உடைத்தது. அதனால் மக்கள் கலங்கினர். முழுமதுரையும் அழிந்துவிடும் என்று பயந்தனர். அரசன் மந்திரிமார்களை அழைத்து, "இது வரை காலமும் ஏற்படாத வெள்ளம் இப்போது ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன? கோவில்களில் முறைப்படி பூசைகள் நடைபெறுகின்றனவா? சிவனடியார்களுக்கு ஏதாவது குறைவிட்டீர்களா? என்று கேட்டான் மந்திரிமார் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை" என்றனர்.

வெள்ளம் வற்றியதும், நாட்டு மக்களை ஆற்றங்கரைக்கு அழைப்பித்த மன்னன் ஒவ்வொரு குடும்பமும் கட்டவேண்டிய பகுதியை அளந்து கொடுக்குமாறு கட்டளையிட்டான். அதிகாரிகள் அளந்து கொடுத்த பகுதியை மக்கள் கட்டத் தொடங்கினர்.

அவ்வூரில் செம்மனச் செல்வி என்ற ஒரு சிவபக்தை வசித்து வந்தாள். அவள் வயதில் முதிர்ந்தவள். யாரும் இல்லாத அனாதை. அவள் மிகவும் துயரத்துடன் தனக்கு ஒரு கூலியாளைத் தந்துதவும்படி இரந்து வேண்டினாள். அதனால் சிவபெருமான் கூலியாளாக வந்து அவளிடம் கூலியாகப் பிட்டை வாங்கி உண்டுவிட்டு விளையாடி விளையாடி அணையைக் கட்டினார். மாலையானதும் மன்னன் அணைகட்டுவதைப் பார்வையிட வந்தான். எல்லோரும் கட்டி முடித்துவிட்டனர். செம்மனச் செல்விக்கு ஒதுக்கப்பட்ட பகுதி கட்டி முடிக்கப்படாது இருந்தது. கூலியாளாக வந்த சிவபெருமான் மண் அள்ளும் கூடையை தலையணையாக வைத்து உறங்கிக் கொண்டிருந்தார். அதைக் கண்டு கடுங்கோபங் கொண்ட பாண்டிய மன்னன், "அக் கூலியாளின் முதுகில்

இரத்தம் வரும்வரை கடுமையாக அடியுங்கள்" என்று கட்டளையிட்டான். உடனே தண்டனையாளர்கள் அவரைப் பிடித்துக் கட்டி வைத்துவிட்டுப் பிரம்பால் அடித்தனர். உடனே சிவபெருமான் மறைந்து விட்டார். அவன் அடித்த அடி அவனுக்கும், பாண்டிய மன்னனுக்கும், உலகில் உள்ள உயிர்கள் மீதும் பட்டது. பாண்டிய மன்னன் அதிசயித்தான். செம்மனச் செல்வியை வணங்கினான்.

"இன்றெமை உய்யக் கொய்வாய் போற்றி"

சிவபெருமான் தனது அடியார்கள் துன்பப்படுவதைப் பொறுத்துக் கொள்ள மாட்டான். உடனே ஓடோடி வந்து உதவுவான். சிவனடியார்களுக்காக அவன் எந்தக் கீழான வேலையையும் செய்யத் தயங்க மாட்டான். உயிர்கள் துன்பப்படுவதையும் விரும்ப மாட்டான்.

## சிவபெருமான் விறகு விற்ற படலம்

மதுரையை வரகுண பாண்டியன் என்ற நீதி தவறாத மன்னன் ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் மக்கள் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். அவன் கலைகளில் பிரியமுள்ளவன். அதனால் உள்நாட்டு வெளிநாட்டு கலைஞர்கள் அரண்மனைக்கு வந்து ஆடிப்பாடி மன்னனையும், சபையோரையும் மகிழ்வித்து அரசனிடம் பெறுமதியான பரிசுகளைப் பெற்றுச் செல்வர்.

ஒருநாள் வடநாட்டில் பெரும் வித்துவானாக இருந்த ஏமநாதன் என்னும் வித்துவான் பாண்டியனது அரசசபைக்கு இசைக்கலைஞர்களுடன் வந்தான். அவன் செல்லும் நாடுகளின் அரசாளும் அரசர்கள் அவனது இசையால் கவரப்பட்டுப் பரிசுகளும், விருதுகளும் கொடுத்து அவனைக் கௌரவிப்பர். அதனால் அவனது புகழ் பாண்டிய நாட்டிலும் பரவியிருந்தது. அத்துடன் அவன் தனது இசைவல்லமையினால் செருக்கடைந்து அந்நாட்டு மக்களையும், கலைஞர்களையும் கேலி செய்வான்.

அன்று ஏமநாதன் மிகவும் இனிமையாகப் பாடினான். இசைக்கலைஞர்கள் அவனது பாட்டுக்குத் தகுந்த மாதிரி இனிமையாக இசைத்தனர். அவன் பாடி முந்ததும் சபையோரின் கரகோசம் வானைப் பிளந்தது. மந்திரி, பிரதானிகள் அவனது பாடலை மிகவும் அபூர்வமானது என விமர்சித்தனர். மன்னன் மிகமிக மகிழ்ந்து அவனைப் பாராட்டினான். பின் பெறுமதி வாய்ந்த பரிசுகளை அவனுக்கு அளித்தான். அதனால் மேலும் கர்வமடைந்த ஏமநாதன் அரசசபையில், எழுந்து "என்னோடு போட்டியிட்டு

வெல்லக்கூடிய ஒருவர் என்னோடு போட்டியிடலாம். அவர் வென்றால் எனது சொத்து முழுவதையும் கொடுப்பதோடு, நான் பாடாமலும் விட்டுவிடுவேன். மதுரை, கலைஞர்கள் வாழ்ந்த இடம். அரசன் பெருங்கலைப்பிரியன். அதனால் கலைஞர்களை ஊக்குவிக்கிறான். என்னோடு பாடத் துணிவில்லாவிட்டால் வெட்கம்" என்றான்.

ஏமநாதனின் திறமையை உலகம் அறியும். அதனால் எல்லோரும் மறுத்துவிட்டனர். அதனால் அரசன் பாணபத்திரன் என்ற கலைஞனை அழைத்து, "நீ கோவில்களில் சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடுபவன். அத்துடன் அரசவைப்புலவன். அதனால் நீ ஏமநாதனை எதிர்த்துப்பாடு, இது எனது கட்டளை" என்றான்.

பாணபத்திரன் திகைத்துப் போனான். ஏமநாதன் பெரும் பாடகன். உலகில் உள்ள திறமை வாய்ந்த பாடகர்களை வென்று பரிசு பெற்றவன். அவனைப் பாடி என்னால் வெல்ல முடியுமா?" என்று பயந்தான்.

"பயப்படாதே, பயம் பலவீனத்தை உண்டாக்கும். உனது திறமையில் எனக்கு நம்பிக்கை உண்டு. சிவனை வணங்கிவிட்டுப்பாடு. கட்டாயம் நீ அவனை வெல்வாய்" என்று அரசன் கூறியதால் பாணபத்திரன் சுந்தரேஸ்வரர் கோவிலுக்குச் சென்று அவரை வழிபட்டான், "சிவனே, நான் ஏழை. முறையாகச் சங்கீதம் பயிலாதவன். உன்மேல் கொண்ட பக்தி காரணமாக உன்னைப் போற்றிப் பாடுகிறேனே தவிர வேறு எதையும் என்னால் செய்ய முடியாது. மன்னன் கட்டளையிட்டு விட்டான். அதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் நான் நாட்டைவிட்டு ஓட வேண்டும். நான் எங்கே போவேன்? உன்னைத் தவிர எனக்கு யாரைத் தெரியும். நான் ஓடினால் அவமானம் தாங்கமுடியாது மன்னன் தன்னுயிரை மாய்த்து விடுவான். மன்னன் பெரும் சிவபக்தன். உன்னை நம்பி அரசாள்பவன். அதனால் இருவரையும் நீ தான் காப்பாற்ற வேண்டும். அடியவர்களுக்காக இரங்கிக் கேவலமான செயல்களைக் கூடச் செய்யும் நீ எம்மைக் காப்பாற்று" என்று அழுதபடி பாணபத்திரன் கோவிலில் இருந்தான்.

ஏமநாதனின் மாணவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று போட்டி நடைபெறுவதனைப் பாடிப்பாடி அறிவித்தனர். மன்னன் முரசின் மூலம் அறிவித்தான்.

பாணபத்திரனுக்கு உதவச் சிவபெருமான் திருவுளங்கொண்டு ஒரு முதியவர் போல வேடந்தாங்கி விறகு விற்பவன்போல ஏமநாதன் தங்கியிருக்கும் அரசவிடுத்திப் பக்கம் வந்து பாடிப்பாடி விறகை விற்பனை செய்தார்.

யாழோசையையும், பாட்டின் இனிமையையும் கேட்ட ஏமநாதன் மாளிகையின் உப்பரிகைக்கு வந்தான். தேவகானம் போல அந்த இசை காற்றில் பரவிவந்து ஏமநாதனின் காதில் தேனாக இனித்தது. அவன் கீழே இறங்கி வந்து, “முதியவரே நீங்கள் யார்? இவ்வளவு இனிமையான இசையை எங்கே கற்றீர்கள்” என்று கேட்டான். அதற்கு அந்த முதியவர் சொன்னார்; “எமது ஊரில் பாணபத்திரன் என்றொரு சங்கீத வித்துவான் இருக்கிறார். அவரிடம் ஏராளமான மாணவர்கள் இசை பயில்கின்றனர். எனக்குச் சங்கீதத்தில் விருப்பமுண்டு. அதனால் அவரிடம் சென்று எனக்குச் சங்கீதம் கற்றுத் தரும்படி இரந்தேன். அவர் என்னைப் பாடும்படி சொன்னார். நான் பாடினேன். “இதெல்லாம் ஒரு பாட்டா…? போய்த் தெருவில் பாடி உழை. இதெல்லாம் மேடைக்குச் சரிவராது” என்றார். அதனால் பாடிப்பாடி விறகு விற்று வருகிறேன்” என்றார்.

ஏமநாதன் திகைத்துப் போனான். இந்தத் தேவகானத்தைத் தெருவில் பாடிப்பிழை என்று பாணபத்திரன் சொன்னானென்றால் அவன் எப்படிப் பாடுவான்” என்று நினைத்த ஏமநாதன் “இன்னொரு பாட்டுப்பாடு பார்ப்போம்” என்றார்.

“ஐயா, எனக்கு எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது. இந்த ஊரவர் பாணபத்திரனதும் அவரது மாணவர்களினதும் பாடல்களைக் கேட்பார்களே தவிர என் போன்றவர்களின் கழுதைக் கத்தலைக் கேட்க மாட்டார்கள். நான் பாடினால் காதைப் பொத்திக் கொள்வார்கள். நீங்கள் கேட்டதற்காகப் பாடுகிறேன் என்று சொல்லி இன்னொரு பாடலைச் சிவபெருமான் பாடினார். அது முன் பாடிய பாடலைவிட பலமடங்கு அருமையாக இருந்தது. அதனால் ஏமநாதனின் உடல் நடுங்கியது. மனம் குழம்பியது. நாளை அரசசபையில் பாடி அவமானப்படுவதைவிட இரவோடு இரவாக நாட்டைவிட்டு வெளியேறுவது தான் நல்லது” என்று நினைத்து ஏமநாதனும் அவனது இசைக்குழுவினரும் யாருக்கும் தெரியாது சென்று விட்டனர். பாணபத்திரன் மிகுந்த மகிழ்சியடைந்து சிவபெருமானுக்கு நன்றி கூறினான். அன்று இரவு சிவபெருமான் பாணபத்திரன் கனவில் தோன்றி, “எனது அடியவனே, உனக்காக நான் ஏமநாதன் இருக்கும் அரச விடுதிப்பக்கம் விறகு விற்பவனாகச் சென்று பாட்டுப்பாடினேன். அவன் அசந்து விட்டான் பின் தனக்கு அவமானம் நேரும் என்று நாட்டைவிட்டு ஓடிவிட்டான்” என்றார். சிவபெருமான் இரக்கமுள்ளவர். மெய்யடியார்கள் மனமுருகி வேண்டினால் அவர்களுக்கு உதவ அவர் ஒருபோதும் தயங்கமாட்டார்.

# கால்மாறி ஆடின படலம்

மதுரை பாண்டிய மன்னர்களது தலைநகரம். மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்கள் சைவ அபிமானிகள். சைவசமயத்தை தமது உயிராகக் கொண்டவர்கள். அந்த வகையில் வந்த விக்கிரம பாண்டியன் தனது மகனான இராசசேன பாண்டியனுக்கு முடிசூடிவிட்டு அவன் சிவனோடு ஐக்கியமானான். இராச சேன பாண்டியன் மிகுந்த சிவபக்தன். நாட்டில் உள்ள எல்லாச் சிவன்கோவில்களுக்கும் மானியமாகப் பெருந்தொகையான திரவியங்களை அவன் கொடுத்ததனால் கோயிவ்கள் மேன்மையுற்று விளங்கின. மக்கள் சைவசமயத்தைத் தம்முயிராக மதித்துப் போற்றினர்.

இராசசேகர பாண்டியன் அறுபத்து மூன்று கலைகளில் பரதக்கலையான நடனத்தைத் தவிர ஏனைய கலைகள் முழுவதையும் கற்றவன். அப்போது சோழநாட்டை ஆண்ட கரிகால்சோழன் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவனாக இருந்தான். அதை அறிந்த இராசசேகர பாண்டியன தானும் பரதக்கலையைக் கற்றான். அதைக் கற்கும்போது அவன் மிகுந்த துன்பப்பட்டான். அதுவும் வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி அவனால் ஆட முடியவில்லை. அவன் சிவனின் நடனத்தைக் கண்டு களித்திருக்கிறான். அவர் வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கியாடுவது எவ்வளவு துன்பமானது என்பதை உணர்ந்தான். ஒரு சிவராத்திரி அன்று திருக்கோவிலை அடைந்து சிவனை அவன் மனமுருகி வேண்டினான்; "என் அப்பனான சிவனே, வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கியாடுவது பெரும் துன்பமானது. என்னால் அது முடியவில்லை. தாங்கள் தினமும் வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி எவ்வாறு ஆடுகிறீர்கள். அது பெரும் துன்பம் அல்லவா. அதனால் தயவு செய்து எனக்காக இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி ஆடுங்கள் என்று இரந்து வேண்டினான். அதனால் மகிழ்ந்த நடராசப் பெருமான் இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி ஆடினார். அதைக் கண்டு மெய்மறந்த இராசசேகர பாண்டியன் மிக்க மகிழ்வுற்று சிவபெருமான் தனது வேண்டுகோளை ஏற்றுக் கால் மாறி ஆடியமையால் அவருக்குப் களைப்பு நேர்ந்திராது" என்று மகிழ்ந்தான். அதனால் அவன் தன்னை மறந்து ஆடினான்; பாடினான்; மகிழ்ந்தான். இறைவன் பக்தர்களின் வேண்டுதலின்படி தனது எண்ணத்தை மாற்றுவான். விதிமுறைகளையும் மாற்றியமைப்பான். பக்தர்களின் விருப்பமே சிவனது விருப்பமாகும்.

# தடாதகைப்பிராட்டியர்
# திருவவதாரப் படலமும் திருமணப்படலமும்

பாண்டிய நாட்டை மலையத்துவச பாண்டியன் நீதியுடன் ஆண்டு வந்தான். அவன் சூரிய குலத்து அரசனான சூரரேகன் என்னும் அரசனின் மகளான காஞ்சனமாலையைத் திருமணம் செய்து பல ஆண்டுகள் கடந்தபோதும் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை. இருவரும் பெரும் சிவபக்தர்கள். சிவனடியார்களைச் சிவனாக மதிப்பவர்கள். மலையத்துவச பாண்டியன் பல யாகங்களைச் செய்தும் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் கவலை கொண்ட அரசனும் அரசியும் சிவனை மிகுந்த கவலையுடன் வணங்கினார். அப்போது இந்திரன் அரண்மனைக்கு வந்து "மன்னா புத்திரப்பேறை விரும்புவோர்" புத்திரகாமேட்டி என்ற யாகத்தைச் சிவனை நினைத்துச் செய்வர். அதைச் செய் உனக்குப் பிள்ளை பிறக்கும்" என்று கூறி விட்டுச் சென்றான்.

இந்திரனது சொற்படி மன்னன் சிவநினைவுடன் புத்திரகாமேட்டி யாகத்தைச் சிறப்பாகச் செய்தான். சிவபெருமான் மனம் மகிழ்ந்து உமாதேவியாரை அவனுக்கு மகளாக அவதரிக்கும்படி வேண்டினார். அதன்படி அவன் செய்த யாகத்தீயில் உமாதேவியார் குழந்தை வடிவில் தோன்றினார்.

மலையத்துவச மன்னனும் காஞ்சனமாலையும் அளவில்லாத ஆனந்தம் அடைந்தனர். அக்குழந்தையை அன்புடன் எடுத்த காஞ்சனமாலை பெருமகிழ்வுடன் முத்திட்டாள். அதன் அழகில் மெய்மறந்த பாண்டியன் அக்குழந்தைக்குத் தடாதகை எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தான்.

பிள்ளைக்கு உரிய வயது வந்ததும் அரசர்க்குரிய போர்ப் பயிற்சிகள் தடாதகைக்கு வழங்கப்பட்டன. தடாதகையை வெல்ல யாருமில்லாத நிலை. சகல துறைகளிலும் அவள் வீராங்கனையாகத் திகழ்ந்தாள்.

மலையத்துவச பாண்டியன் அவளின் வீரத்தைப் பாராட்டி அவளுக்கு முடி சூட்டி வைத்தான். அவளது வீரத்திற்குப் பெரும் பெரும் அரசர்கள் கூட அஞ்சினர். சில காலம் செல்ல முதுமை காரணமாக மலையத்துவச மன்னன் காலமானான். அதன் பின் அயல்நாட்டு மன்னர்களுடன் போர் தொடுத்து அவர்களையெல்லாம் வென்றாள். ஒரு நாள் திருக்கைலாயமலையைச் சுற்றித் தடாதகையின் படைகள் சூழ்ந்து நின்றன. போருக்குத் தயாரான நிலையில் தடாதகையும் வீரர்களும் நின்றபோது சிவபெருமான்

இடப வாகனத்தில் அங்கு வந்தார். வீராவேசத்துடன் தாக்கத் தயாராக நின்ற தடாதகையைப் பார்த்து ஒரு புன்சிரிப்பைத் தவழவிட்டார். அச்சிரிப்பில் இருந்தமோகம் தடாதகையை மின்னல் போலத் தாக்கியது. உடனே அவள் தனது போர்க்கோலத்தைக் கலைத்துவிட்டு நாணத்துடன் பாண்டிய நாட்டிற்குத் திரும்பினாள். சிவபெருமானது சிரிப்பு அவளை ஆட்கொண்டது.

சில நாட்களின் பின் சிவபெருமான் சுந்தர பாண்டியன் என்ற திருப்பெயருடன் பாண்டிய நாட்டிற்கு வந்தார். அதன் பின் அவள் திக்கு விசயம் செய்து அவர்களை வென்றாள். அசுரர்களை அழித்தாள். முனிவர்களுக்கு ஆசியை நல்கினாள். மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தாள். இந்திரன் முதலிய தேவர்களின் கர்வத்தை அடக்கினாள். அப்போது காஞ்சனமாலை சிவனை வணங்கி உரிய நாளில் வந்து அவனைத் திருமணம் செய்யுமாறு வேண்டினாள். நல்லதொரு சுப நாளில் சிவபெருமான் மதுரைக்கு வந்து தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்து கொண்டார். அதனால் மகிழ்ந்த காஞ்சனமாலை சிவபெருமானை வணங்கி, "சுவாமி தடாதகையை திருமணம் செய்தால் நான் மிக்க மகிழ்வடைந்தேன். அதனால் தாங்கள் மதுரையில் தங்கி எமது நாட்டை அரசாள வேண்டும்" என்று கேட்டாள். சிவபெருமான் அதை ஏற்று சோமசுந்தரப் பாண்டியன் என்ற பெயருடனும், தடாதகைப் பிராட்டி மீனாட்சியம்மை என்ற பெயருடனும் அரசனும் அரசியுமாக நாட்டை நீதியாக ஆண்டனர். மக்கள் சகல சுகபோகங்களையும் இவர்களது ஆட்சியில் பெற்று மகிழவுடன் வாழ்ந்தனர். வேண்டுவார் வேண்டுவதை சிவபெருமான் தந்தருள்வார்.

## குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

சிவபெருமானுக்கும் தடாதகைப் பிராட்டிக்கும் நடந்த திருமணத்திற்கு உலகில் உள்ள அனைவரும் வந்திருந்தனர். அவர்களுக்கு அறுசுவை உணவுகள் பரிமாறப்பட்டன. அவர்கள் எல்லோரும் உணவு சுவையாக உள்ளது என்று சொல்லி வழமையாக உண்பதைவிட அதிகமாக உண்டனர். உண்டவர்கள் எல்லோரும் சிவபெருமானையும் மீனாட்சியம்மையும் வணங்கி ஆசிபெற்றுவிட்டுத் தத்தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர். அவர்கள் சென்றபின் சமையல் செய்தவர்களின் தலைவன் மீனாட்சியம்மையிடம் வந்து பணிந்து வணங்கிவிட்டுச் சொன்னான்; "நாம் சமைத்த உணவில் ஆயிரத்தில் ஒரு பகுதிதான் உண்ணப்பட்டது. மிகுதி இமயமலையைவிட உயரமாகக் குவிக்கப்பட்டுள்ளது. அதை என்ன செய்வது?" என்று கேட்டான். மீனாட்சியம்மை சிவபெருமானைப் பார்த்தாள். சிவபெருமானின் திருமணத்திற்கு

வந்து உணவை உண்டுவிட்டு ஒரு கரையில் இளைப்பாறிய குண்டோதரனின் வயிற்றில் பசியை உண்டாக்கினார். அதனால் குண்டோதரன் சிவபெருமானிடம் வந்து வணங்கி, “சிவனே, போதியளவு உணவைப் பந்தியில் இருந்து உண்டேன். ஏனோ தெரியவில்லை. வழக்கத்திற்கு மாறாக எனக்குக் கடும்பசி உண்டாகியுள்ளது. அதைத் தாங்கள் தான் தணித்து வைக்க வேண்டும்” என்றான்.

சிவபெருமான் சமையல்காரர்களின் தலைவனைப் பார்த்து, “குண்டோதரனை அழைத்துச் சென்று மிகுதி உணவைக் காட்டுங்கள்” என்றார்.

குண்டோதரன் மலையாகக் குவிந்திருந்த சோற்றுள்க் கிடாரம் கிராரமாக எஞ்சியிருந்த கறிவகைகளை ஊற்றி உண்ணத் தொடங்கினான். தேவர்களும், மக்களும் அதை அதிசயத்துடன் பார்த்தனர். மலைபோலக் குவிந்திருந்த சோறும், ஆயிரக்கணக்கான கிடாரங்களில் நிரப்பப்பட்டிருந்த கறிவகைகளும், பாகாசமும், பலகாரங்களையும் உண்டு முடித்து விட்டு, இன்னும் சோற்றைக் கொண்டு வாருங்கள்” என்று கத்தினான். மீனாட்சியம்மை செய்வதறியாது திகைத்து நின்றபோது சிவபெருமான் தனது சக்தியால் சோற்றையும், கறிவகைகளையும் வரவழைத்தார். சோறு மீண்டும் மலையாகக் குவிந்தது. வெற்றுக் கிடாரங்கள் கறிகளால் நிரப்பப்பட்டன. குண்டோதரன் மகிழ்வுடன் அவற்றை உண்டு முடித்துவிட்டு எழுந்தான்.

## சித்தராக வந்த சிவபெருமான் கல்யானைக்கு கரும்பு கொடுத்த படலம்

பாண்டிய நாட்டை அபிடேக பாண்டியன் என்ற அரசன் அரசநீதி நெறி தவறாது ஆண்டு வந்தான். அவன் பெரும் சிவபக்தன். மக்களின் நலன்களைப் பேணுபவன். சிவத்தலங்களில் ஒழுங்காக பூசை செய்விப்பவன். அவனது ஆட்சியில் மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். அதனால் மிகவும் மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்கு அருள்புரியத் திருவுளம் கொண்டார்.

சிவபெருமான் ஒரு சித்தர் போன்ற வடிவமெடுத்துப் பாண்டிய நாட்டிற்கு வந்தார். அவரது சடை நீண்டு வளர்ந்திருந்தது. நெற்றியில் நீறும், மார்பில் பூநூலும் அணிந்திருந்தார். புலித்தோலினாலான ஆடையை அணிந்திருந்தார். அவர் மதுரைப் பட்டணத்தின் பல பகுதிகளிலும் காட்சி கொடுப்பதும் மறைவதுமாக இருந்தார். அவர் காட்சி கொடுக்கும் வேளைகளில் பல அற்புதச் செயல்களைச் செய்து வந்தார்.

முதியவர்களை இளைஞர்களாக்கினார். இரும்பைப் பொன்னாக்கினார். திடீரென்று மறைவார். பின் தோன்றுவார். தூரத்தில் உள்ளவற்றை அண்மைக்குக் கொண்டு வருவார். அண்மையில் உள்ளவற்றைத் தூரத்திற்குச் செல்ல வைப்பார். ஆண்களைப் பெண்களாக்குவார். பெண்களை ஆண்களாக்குவார். கூன், செவிடு, ஊமை, முடங்களைத் தீர்த்து வைப்பார். செல்வர்களை வறியவராக்குவார். வறியவர்களைச் செல்வராக்குவார். இப்படியான சித்து வேலைகளைச் செய்து மக்களை ஆச்சரியப்படுத்துவார். இச்செய்தி மன்னனின் காதுகளுக்கு எட்டியது. இருப்பினும் மன்னன் தனது அதிகாரத்தை விட்டுவிட்டு அவரைச் சென்று தரிசிக்க விரும்பவில்லை. அதனால் சித்தரை அரண்மனைக்கு வரும்படி கட்டளையிட்டான். சித்தர் வராது சொன்னார்; "எனக்கு மன்னனைப் பார்க்க வேண்டிய தேவையில்லை. அதனால் வரமாட்டேன். மன்னன் என்னைச் சந்திக்க விரும்பினால் என்னிடம் வரட்டும்" என்றார்.

அதைக்கேட்ட மன்னனுக்குக் கடுங்கோபம் வந்தது. கோபத்துடன் கோவிலுக்கு வந்தான். கோவிலில் சித்தர் நின்றார். அவர் மன்னனை மதிக்கவில்லை. இருப்பினும் அவரது பூர்வீகத்தை அறிய விரும்பி அவரின் அருகே சென்று; "தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டான். "எனது இருப்பிடம் காசி. எனது உறவினர்கள் சிவனடியார்கள். இப்படியான சித்து விளையாட்டுத்தான் எனது தொழில். உன்னிடம் பெற வேண்டியது எதுவும் இல்லாமையால்தான் நீ அழைத்தும் நான் வரவில்லை" என்றார் சித்தர்.

மன்னனுக்குக் கோபம் வந்தது. இருந்தபோதும் அதை அடக்கிக்கொண்டு கோவிலில் சுவாமிக்குப் படைக்க வைத்திருந்த கரும்புக்கட்டுக்களில் இருந்து ஒன்றை உருவி எடுத்து; "சித்தரே, நீர் மாயம் செய்வதில் வல்லவர் என்றால் இந்தக் கரும்பை உம் எதிரிலே நிற்கும் கல்யானைக்குக் கொடுத்து அதை உண்ண வையும்" என்றான்.

கல்யானை பிளிறியது. கண்களைத் திறந்தது. செவியையும், வாலையும் அசைத்தபடி வந்து மன்னனின் கையில் இருந்த கரும்பை வாங்கி உண்டது. அதன் கடைவாயால் கரும்பின் சாறு ஒழுகியது. மக்களும் மன்னனும் அதிர்ச்சியால் உறைந்தனர். மீண்டும் யானை கல்யானையானது. சித்தரை மன்னன் வணங்கினான் : திடீரென்று சித்தர் மறைந்தார். வந்தவர் சிவபெருமான் என்று எல்லோரும் நினைத்தனர். சிவபக்தனாக இருந்தாலும் கர்வம் கொள்ளல் ஆகாது. இறைவனைப் போற்றி வணங்கினால், வணங்குபவர்களின் குறைகளைத் தீர்க்க அவன் தேடி வருவான்.

# விருத்தகுமாரபாலனாக வந்த படலம்

மதுரையை விக்கிரமபாண்டியன் அரசாண்ட காலத்தில் விருபாக்கன் என்றொரு பிராமணன் அங்கு வாழ்ந்து வந்தான். அவனின் மனைவி சுபவிரதை. கணவனைத் தெய்வமாக மதிப்பவள். அவர்கள் திருமணம் செய்து பல வருடங்கள் கழிந்தபோதும் அவர்களுக்குப் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் அவர்கள் பல்வேறுபட்ட தானப் பலனாக அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குக் கௌரி எனப் பெயரிடப்பட்டு அன்புடன் வளர்த்து வந்தனர். அப்பிள்ளை ஐந்து வயது வந்ததும் தனது தகப்பனிடம் உமாதேவியாரது மந்திரத்தை கேட்டுக் கற்று அதனைத் தினமும் சொல்லி வந்தது. அதன் திறமையை உணர்ந்த தந்தையான விரூபாக்கன் ஒரு சைவப் பிராமணனை அவளுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினாள். கௌரி மங்கைப் பருவத்தை அடைந்தபோது அவர்களது வீட்டுக்கு வைணவப் பிரமச்சாரியொருவன் பிச்சைகேட்டு வந்தான். விருபாக்கன் ஏனோ தெரியவில்லை தனது மகளான கௌரியை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பி தனது மனைவியோடு சேர்ந்து நீரை எடுத்து அவனது கையில் ஊற்றித் திருமணத்தை முடிவு செய்தான். இது உற்றார் உறவினர்களுக்குப் பிடிக்கவில்லை. அந்த வைணவப் பிராமணன் கௌரியைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். வைணவப் பிராமணனின் பெற்றோருக்குக் கௌரியைப் பிடிப்பதில்லை. அதனால் அவளை ஒதுக்கி வைத்தனர். செய்யக்கூடிய கொடுமைகள் அனைத்தையும் செய்தனர். கௌரி மனங்கலங்காது உமாதேவியாருடைய மந்திரங்களைத் தினமும் ஓதிக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் விரூபாக்கனும் அவனது பெற்றோரும் தமது சுற்றத்தவர் ஒருவரின் திருமண வீட்டுக்குச் சென்றனர். கௌரி தனியே வீட்டில் இருந்தாள். அவளை வைத்து அவர்கள் வீட்டைப் பூட்டிவிட்டுச் சென்றனர். கௌரி சிவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். திருமணம் முடிந்த பின்பு ஒரு சிவனடியாரைத் தன்னும் தரிசிக்க முடியவில்லை என்ற கவலை மனதில் இருந்தது. அதை உணர்ந்த சிவபெருமான் ஒரு முதிய பிராமண வடிவமெடுத்துக் கௌரியின் வீட்டுக்கு வந்தார். அவரைக்கண்ட கௌரி மிக்க மகிழ்வு கொண்டு அவரை வரவேற்றாள். வீடு பூட்டியிருந்தமையால் அவரை உள்ளே அழைத்து உபசரிக்க முடியவில்லையெனத் துன்பப்பட்டுச் சிவனைப் பிரார்த்தித்தாள். அதை உணர்ந்த அந்த முதியவர், “கவலைப்படாதே உனது கையால் அப்பூட்டைத் தொடு அது திறபடும்” என்றார். கௌரி சிவனடியாரின் சொற்படி பூட்டைத்தொட பூட்டுத் திறந்து கொண்டது. கௌரி மிகுந்த மகிழ்வுடன் அவரை வரவேற்று ஆசனத்தில் அமர்த்திவிட்டுச் சமைத்தாள். சமைத்த உணவை அந்த

முதியவருக்குக் கொடுத்தாள். அவர் உணவு உண்டு முடித்துக் கைகழுவிவிட்டு வந்தபோது அழகிய இளைஞனாக அவளருகே வந்தார். கௌளரி அச்சத்தால் நடுநடுங்கினாள்.

அப்போது திருமணத்திற்காகச் சென்ற விரூபாக்கனும் அவனது பெற்றோரும் வீட்டுக்கு வந்தனர். அப்போது அந்த இளைஞன் பச்சிழங் குழந்தையாக மாறி அங்கு பூட்டப்பட்டிருந்த தொட்டிலில் தனது காலை வளைத்து தனது பெருவிரலை வாயில் வைத்துச் சூப்பியபடி படுத்திருந்தான்.

மாமியார் தொட்டிலில் கிடந்த குழந்தையை ஆச்சரியத்துடன் பார்த்து; “இது யாரின் குழந்தை என்று கேட்டாள். சிலகணங்கள் தடுமாறிய கௌளரி, “அது பக்கத்து வீட்டுக்காரர் அவசரமாக எங்கோ செல்ல வேண்டுமாம். என்னைச் சிறிது நேரம் பார்த்துக் கொள்ளச் சொன்னார்கள்” என்றாள்.

விரூபாக்கனின் பெற்றோர் அதை நம்பாது கௌளரியையும் அக் குழந்தையையும் வீட்டைவிட்டுத் துரத்தினர். கௌளரி மதுரைப் பெருமானை மனதில் நினைத்து உமாதேவியாரின் மந்திரத்தைச் சொன்னாள். சொன்ன மாத்திரத்தில் அந்தக்குழந்தை ஆகாயத்தில் சிவபெருமானாக மாறி இடபவாகனத்தில் தோன்றியது. சிவபெருமான் கௌளரியை உமாதேவியாரின் வடிவமாக்கி இடபவாகனத்தில் ஏற்றி மறைந்தருளினார். அக்காட்சியைப் பூமியில் உள்ளோர் கண்டு அதிசயித்தனர். சிவபெருமான் தன்னைத் தஞ்சமென்று நினைத்து வணங்குபவரின் துன்பங்களை நீக்கி இன்பம் அளிப்பான்.

# இந்திரன் பழி தீர்த்த படலம்

கிருதயுகத்தில் தேவலோகத்தில் இந்திரன் களியாட்டங்களில் ஈடுபட்டான். மதுவை நன்றாக குடித்து விட்டு தேவமகளிருடன் ஆடல் பாடல்களில் ஈடுபட்டான். அப்போது அவ்விடத்திற்கு தேவர்களின் குருவான வியாழ பகவான் வந்தார். அவரை இந்திரன் மதிக்காததால் அவர் கோபத்துடன் சென்றுவிட்டார். அதனால் இந்திரனது செல்வம் குறையத் தொடங்கியது. அதனால் மனம் வருந்திய இந்திரன் தனது குருவை எங்கும் தேடினான். அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது பிரமதேவர் அங்கு வந்தார். குருவை நிந்தித்தமைக்கான தண்டனையை இந்திரன் பெறவேண்டும் என்ற நோக்குடன், "இந்திரனே, வருந்தாதே எமது குருவாகிய வியாழ பகவானைச் சந்திக்கும் வரை துவட்டாவின் மகனான விசுவரூபனைக் குருவாக ஏற்றுக்கொள். அவன் சகல ஞானங்களையும் உடையவன்!" என்றான். இந்திரன் பிரமதேவரின் சூழ்ச்சியை அறியாமல் அதற்கு ஒப்புக்கொண்டான். இந்திரன் தேவர்களுக்கு நன்மை உண்டாகும்படி ஒரு யாகம் செய்யுமாறு விசுவரூபனிடம் சொல்ல, அவன் இந்திரனது காதுகளுக்குக் கேட்கும்படியாக தேவர்களுக்கு நன்மை உண்டாகட்டும்: என்று சொல்லி மனதளவில் அசுரர்கள் மேன்மையடைய வேண்டுமென நினைத்து யாகம் செய்தான். இதை ஞான திருஷ்டியினால் அறிந்த இந்திரன் கோபங் கொண்டு விசுவரூபனின் மூன்று தலைகளையும் கிள்ளி எறிய அவை காடையாகவும், ஊர்க்குருவியாகவும், சிச்சிலியுமாகவும் மாறிப் பறந்து சென்றன. துவட்டா தனது மகனான விசுவரூபனை இந்திரன் கொன்றமையால் கடுங் கோபங்கொண்டு விருத்தியாசுரனை இந்திரனைக் கொல்லுமாறு அனுப்பினான். விருத்தியாசுரனின் தாக்குதலால் பெருந்துன்பப்பட்ட இந்திரன் தப்பி ஓடிச் சந்திரலோகத்தை அடைந்து பிரம்மதேவரிடம் நடந்தவற்றைக் கூறினான். அதைக் கேட்ட பிரமதேவர் அவனை வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்று மகாவிட்டுணுவை வணங்கி நடந்தவற்றைக் கூறினார். அதைக் கேட்ட மகாவிட்ணு, "இந்திரனே நாம் திருப்பாற்கடலைக் கடையும்போது தேவர்களும் அசுரர்களும், ஆயுதங்களோடு வரப்படாது எனக் கட்டளையிடப்பட்டதால் நாமும் அரசர்களும் அவரவரது ஆயுதங்களைத் தசீசி முனிவரிடம் ஒப்படைத்தோம். அவ்வாயுதங்களை அசுரரும் நாமும் உரிய நேரத்தில் பெறாமையால் தசீசி முனிவர் அவ்வாயுதங்களை விழுங்கிவிட்டார். அவையாவும் அவரது முள்ளம்தண்டுடன் சேர்ந்து இறுகிவிட்டன. நீங்கள் அவரிடஞ் சென்றால் அவர் மகிழ்வுடன் தனது முள்ளம்தண்டைத் தருவார். அதிலிருந்து குலீசம் என்ற ஆயுதத்தை செய்தால் தான் அவ் அசுரனை வெல்லலாம்" என்றார். அதைக் கேட்ட இந்திரனும் தேவர்களும் தசீசி முனிவரிடம் வந்து வணங்கிய பின் மகாவிட்ணு சொன்னதைச் சொன்னார்கள். அதைக் கேட்டு மிக்க மகிழ்வடைந்த

தசீசி முனிவர், இந்த சரீர பாரத்தை எப்போ இறக்குவேனென நினைத்து வாடிக்கொண்டிருந்தேன். அதனால் மிக்க மகிழ்வுடன் எனது முள்ளம்தண்டைத் தருகிறேன் என்று கூறி உயிர் துறந்தார்.

தசீசி முனிவரின் முள்ளம்தண்டை இந்திரன் தேவதச்சனிடம் கொடுத்து அதை வலிமை மிக்க குலிசமாகச் செய்து தரும்படி கொடுக்கத் தேவதச்சன் அதை வலிமை மிக்க குலசமாக மாற்றி கொடுத்தான். இந்திரனும் விருத்தாசுரனும் போர் செய்யத் தொடங்கினர். விருந்திராசுரன் இந்திரனது தாக்குதலைச் சமாளிக்கமுடியாது சமுத்திரத்தின் அடியில் ஒளிந்தான். இந்திரன் அவனைக் காணாமையால் அவனைத் தேடிப் பார்த்தான். அவனைக் காணாமையால் இந்திரன் பிரமதேவரிடம் சென்று முறையிட, பிரமதேவர் அவனை அகத்தியர் முனிவரிடம் அழைத்து வந்தான். அகத்தியர் முனிவருக்கு இந்திரன் விருபாசுரன் இருக்கும் இடத்தை அறிந்து கூறுமாறு சொல்ல, அகத்தியர் தனது ஞானதிருட்டியால் அவன் சமுத்திரத்தின் அடியில் ஒளித்திருப்பதைக் கண்டார். உடனே அவர் சமுத்திர நீரை உள்ளங்கை அளவின தாக்கினார். சமுத்திரநீர் வற்றியதும் விதுராசுரனை இந்திரன் கொன்றான். உடனே பிரமசத்திதோசம் இந்திரனைப் பிடித்ததால் இவனது தேகம் அடையாளம் தெரியாதபடி மாறியது. அதனால் துன்பப்பட்ட இந்திரன் ஒரு தாமரைத் தடாகத்தில் விழுந்து தாமரைத் தண்டுக்குள் மறைந்திருந்தான்.

தேவர்கள் இந்திரனை எங்கும் தேடிக் காணாமையால் பூவுலகில் நகுசன் என்ற அரசன் அசுவமேதயாகம் செய்து முடித்ததை அறிந்து அங்கு வந்து அவனை வணங்கி இந்திரப் பதவியை ஏற்குமாறு இரந்து வேண்ட அவன் சம்மதித்து இந்திரனாகப் பதவி ஏற்றான். அதன் பின் இந்திராணியை மனைவியாக்க முடிவு செய்து அவளை அழைத்து வருமாறு பணித்தான். அதைக் கேட்டு மிக்க துயரமடைந்த இந்திராணி குருவான வியாழ பகவானிடம் சென்று தனது கற்புப் பறிபோய்விடும் என்பதை உணர்த்தினாள். அதை உணர்ந்த வியாழபகவான், “மகளே சப்தவருடிகள் அவனது சிவிகையைத் தாங்கி வந்தால் அவன் தான் இந்திரன். அதில் குற்றமில்லை” என்று சொன்னபோது இந்திராணி அதை ஏற்றுக் கொண்டாள். அதனால் இந்திராணி இருக்குமிடத்திற்கு விரைவாகச் செல்ல விரும்பிய நகுசன், இந்திராணியின் அந்தப்புரத்திற்கு விரைந்து செல்லுங்கள். ‘சர்ப்ப சர்ப’ என்று சிவிகை காவி வருபவர்களை விரைவுபடுத்தினான். சிவிகையின் முற்கொம்பைத் தாங்கி வந்த அகத்தியமாமுனிவர்: “நீ சர்ப்பமாகக் கடவாய்” எனச் சபித்தார். உடனே நகுசன் பாம்பாக மாறிவிட்டான்.

அதனால் மனம் வருந்திய தேவர்கள் வியாழபகவானிடம் சென்று இந்திரனை மீட்டுத்தரும்படி வேண்ட வியாழபகவான் குளக்கரைக்குச் சென்று தாமரைத் தண்டுள் மறைந்திருந்த இந்திரனை அழைத்து வந்தார். உனது பிரமசத்திதோசம் நீங்கப் பூமிக்குச் சென்று புனிதத்தலங்களை வணங்கி புனித நீர் நிலைகளில் நீராடி விட்டுக் கடம்பவனத்திற்கு வா" என்றார். வந்ததும் அவனது தோசம் நீங்கியது. அப்போது அங்கு வந்த ஒற்றன் ஒருவன்; "அரசே, இவ்வனத்தில் ஒரு வாவிக்கருகில் நிற்கும் கடம்பமரத்தின் அடியில் சோதி வடிவான ஒரு சிவலிங்கம் உள்ளது. அதை வணங்குவோர்க்கு எந்தக் குறையும் வரச் சிவபெருமான் விடமாட்டான்" என்றான். உடனே இந்திரன் அங்கு சென்று அச்சோதி வடிவான சிவபெருமானைக் கண்குளிரக் கண்டு வணங்கினான். அப்போது தேவதச்சனால் அழகாக செய்யப்பட்ட ஒரு விமானம் வானில் இருந்து இறக்கி வந்து அச்சோதி வடிவான சிவலிங்கத்திற்கு அருகே இருந்த பொற்றாமரை வாவியில் அருகில் நின்றது. இறங்கிக் குளித்த இந்திரன், அக் குளத்தில் மலர்ந்திருந்த பொற்தாமரை மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து சிவனுக்குச் சூடி மகிழ்ந்து வணங்கினான். அப்போது சிவபெருமான் அவன் முன் தோன்றி, "உனக்கு வேண்டியவற்றைக் கேள்" என்றார். இந்திரன் மனம் மகிழ்ந்து; "எப்போதும் உன் திருவடியை மறவாது நான் தொழவேண்டும்" என்றான். 'அதன்படியேயாகட்டும்' என்று கூறிச் சிவபெருமான் மறைந்தார். இந்திரன் இந்திரலோகம் சென்று இன்புற்று வாழ்ந்தனர்.

எந்த வேளையிலும் தன்னை மறக்கலாகாது. குருவை போற்றி வணங்குதல் வேண்டும். மகிழ்ச்சியாலோ அல்லது வேறெந்தக் காரணங்களாலோ இறைவனை மறக்கக்கூடாது.

## வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்

துருவாசக முனிவர் காசியில் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்து கொண்டிருந்தபோது கைலாயத்தில் இருந்த சிவபெருமானின் தலையில் சூடிய தாமரைப் பூ ஒன்று விழுந்தது. துருவாசகர் மகிழ்வுடன் அதைக் கையிலேந்தியவாறு சுவர்க்கத்திற்குச் சென்றார். செல்லும் வழியில் இந்திரன் அசுரர்களுடன் போர் செய்து அவர்களை வென்றமையால் வெற்றிக் களிப்புடன் வெள்ளை யானையில் தேவர்கள் புடைசூழ வந்து கொண்டிருந்தான். அப்போது தேவர்கள் அங்கு வந்து இந்திரனை வணங்கிப் பரிசுப் பொருட்களைக் கொடுத்தார்கள். அதைக் கண்ட துருவாசக முனிவர் சிவனின் திருவடியில் இருந்து விழுந்த தாமரைப்பூவைப் பணிவுடன் கொடுத்து ஆசி

வழங்கினார். இந்திரன் அப் பூவை வாங்கி தனது வெள்ளையானை மீது வைத்தான். அந்த யானை உடனே அப்பூவைத் தனது தும்பிக்கையால் எடுத்துத் தனது காலின் கீழ்ப்போட்டு துவம்சம் செய்தது. அதனால் கடுங்கோபம் கொண்ட துருவாசகர்; “இந்திரனே சிவனது திருமுடியில் இருந்து விழுந்த தாமரைப்பூவை உனக்குத் தந்தேன். நீ அதை மதிக்கவில்லை. அதனால் உனது தலை பாண்டியன் ஒருவருடைய வளையினாலே சிதறக் கடவது. உனது வெள்ளை யானை காட்டு யானையாகிக் காடுகளில் அலைந்து திரியட்டும்” என்று சபித்தார். அதனால் சுய நினைவடைந்த இந்திரன் தனது நிலையை உணர்ந்து துருவாசக முனிவரின் பாதங்களில் விழுந்து வணங்கினான். தேவர்கள் அனைவரும் இந்திரனை மன்னிக்குமாறு இருந்தனர். அதனால் துருவாசகமுனிவர், “சிவனின் மாலிய நிந்தனை பரிகாரத்தால் நீங்காது. இந்திரனது தலைக்கு வந்தது. தலைப்பாகையுடன் நீங்கட்டும்” என்றார்.

வெள்ளை யானை காட்டுயானையாகி காடுகளெங்கும் நூறு வருடங்கள் அலைந்து திரிந்து விட்டு கடம்பவனைத்துள் வந்தது. நூறு வருடங்கள் நிறைவு பெற்றமையால் அது சாபநீக்கம் பெற்றது. அதன் பின் பொற்தாமரை வாவியில் இறங்கிக் குளித்து விட்டு பொற்தாமரை மலர்களைப் பறித்து வந்து சிவனுக்கு அர்ப்பணித்து வணங்கியது. அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அங்கு எழுந்தருளி யானையை ஆசீர்வதித்தார். வெள்ளை யானை சிவபெருமானை வணங்கி விடைபெற்று மேற்குத் திசையூடாகச் சென்று அங்கு தனது பெயரில் ஒரு குளத்தை வெட்டி அதன் கரையில் சிவபெருமானையும் விநாயகரையும் பிரதிட்டை செய்து வணங்கிக் கொண்டிருந்தது. அதை அறிந்த இந்திரன் தனது பரிகாரங்களுடன் வந்து அதை அழைத்துச் சென்றான்.

## திருநகரம் கண்ட படலம்

மணவூர் குலசேகர பாண்டியனது இராசதானி. அவ்வூரில் சிவபூசையை அர்ப்பணிப்புடன் செய்யும் தனஞ்சயன் என்றொரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் வியாபாரத்தை முடித்துவிட்டுக் கடம்பவனமூடாக வந்தபோது இருண்டு விட்டது. அப்போது சொக்கலிங்க மூர்த்தியினது கோவில் விமானம் ஒளிந்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் அங்கு சென்று வணங்கினான். அன்று நள்ளிரவுப்பூசையைத் தேவர்கள் வந்து செய்தார்கள். அது சிவபெருமானின் அருளால் தனக்காகச் செய்யப்பட்ட பூசை எனத் தனஞ்சயன் நினைத்து மகிழ்ந்தான். தனஞ்சயன் பொற்தாமரை வாவியில் குளித்துவிட்டுத் தான் கொண்டு வந்த பூசைக்குரிய

பொருட்களைத் தேவர்களிடம் கொடுத்தான். விடிந்ததும் தேவர்கள் யாரையும் காணவில்லை. விமானத்தில் இருந்த சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். பின் தான் கண்ட அதிசயத்தை அரண்மனைக்குச் சென்று மன்னனுக்கு கூறினான். மன்னன் அதைக் கேட்டு அதிசயித்து சிவபெருமானை வணங்கினான்.

அன்று இரவு மன்னனின் கனவில் தோன்றிய சிவபெருமான், "மன்னா கடம்பவனத்தைத் திருத்தி நகரமாக்கு" என்று சொல்லி மறைந்தார்.

உடனே குலசேகர பாண்டியன் கடம்பவனத்திற்குச் சென்று பொற்றாமரை வாவியில் குளித்துவிட்டு அங்கு எழுந்தருளியிருக்கின்ற சொர்க்கலிங்கமூர்த்தியைத் தரிசித்து விட்டுக்காடாக இருந்த கடம்பவனத்தைத் தனது ஏவலாளர்களை ஏவி நகரமாக்கத் தொடங்கினான். அப்பொழுது சோமசுந்தரக்கடவுள் சித்தராக அரசன் முன் வந்து எவ்வாறு அந்த நகரம் அமைய வேண்டுமென்று சொன்னார். அதன்படி சகல வசதிகளையும் கொண்ட பெரிய நகரமாகக் கடம்பவனம் அரசனால் கட்டி முடிக்கப்பட்டது. அதன் பின் சாந்தி செய்தபோது சிவபெருமான் அமிர்தத்தைக் கங்கை நீரில் கலந்தார். அதைக் கங்கையோடு சேர்த்துவிட்டார். அது கடம்பவனம் எங்கும் ஓடிப் பரவியது. அதனால் அது மதுரா நகரம் எனப் பெயர் பெற்றது. அந்நகரின் கிழக்கே ஐயனாரையும், தெற்கே சாத்துமாதுகளையும், மேற்கே விட்டுணுவையும், வடக்கே பத்திரகாளியையும் காவலாக நிறுவினான். பூசை செய்வதற்காகக் காசியிலிருந்து ஆதி சைவராகிய சிவப்பிராமணனை வரவழைத்துப் பூசை செய்வித்தான். அதன் பின் அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு மலையத்துவசன் எனப் பெயரிட்டு சைவ அனுட்டானங்களையும் உரிய போர்ப் பயிற்சிகளையும் அவனுக்குப் பயிற்றுவித்தான். உரிய வயது வந்ததும் அவன் தனது மகனுக்கு முடி சூட்டிவிட்டு திருக்கோவிலுக்குச் சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்கி அவரோடு ஐக்கியமானான்.

சிவநினைவுடையோருடன் சிவன் எப்போதும் உறுதுணை இருந்து செயற்பட்டுத் தன்னோடு சேர்த்துக் கொள்வான்.

## வெள்ளியம்பலத்தில் திருக்கூத்தாடிய படலம்

சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்த பின், அத்திருமணத்திற்கு வந்திருந்தோரை உணவு உண்ண வருமாறு அழைத்தார். அப்போது வியாக்கிரமபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும் அவரின் அருகே சென்று அவரை

வணங்கி, "உலகின் முதல்வனே கனக சபையில் தாங்கள் ஆடும் திருநடனத்தை எங்களுக்கு இப்போது ஆடிக் காட்டி அருளல் வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். அதற்குச் சம்மதித்த சிவபெருமான் விரைவிலே எனது தாண்டவநடனத்தைக் கண்டு களிப்பீர்கள்" என்று சொல்லி விட்டு திருக்கோவிலுள்ச் சென்றார்.

உள்ளே சென்ற சிவபெருமான் திருநடனம் புரிந்தார். அப்போது திருநந்திதேவர் மத்தளம் அடித்தார். தும்புருநாரதர் இசை பாட, பஞ்சதுந்தூபிகள் ஒலித்தன. தேவர்கள் பூமாரி சொரிந்தனர். சிவபெருமான் தனது பத்துத் திருக்கரங்களிலும் வழமையாக வைத்திருக்கும் ஆயுதங்களை வைத்துக் கொண்டு நடனமாடினார். அதைத் தேவர்களும் வியாக்கியபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும், சிவனது திருமணத்திற்கு வந்தவர்களும் கண்குளிரக் கண்டு களித்தனர். பதஞ்சலி முனிவர் எழுந்து நின்று; "எம்பெருமானே காணக்கிடைக்காத தங்களது நடனத்தைக் கண்டு ஆனந்தப்பட்டோம். இந்நடனத்தைக் கண்டு களித்தவர்கள் மீண்டும் பூமியில் பிறக்காதிருத்தல் வேண்டும்" என்று கேட்டார். சிவபெருமான் மிகுந்த மகிழ்வுடன் ஒப்புக் கொண்டார். "மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரம் தொடங்கி, மேல்வரும் மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரம் வரையும் பொற்தாமரை வாவியில் குளித்து சிவனை வணங்கி பஞ்சாட்சர மந்திரத்தை நூற்றெட்டு முறை செவிப்பவர்கள் தாம் தாம் நினைத்த வரங்களைப் பெறுவார்கள்" என்று சிவபெருமான் அருளினார்.

## அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்

சோமசுந்தரக் கடவுள் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்தன்று சமைத்த உணவின் பெரும்பகுதி எஞ்சியதால் சிவபெருமான் குண்டோதரனை அழைத்து அதனை உண்ணும்படி பணித்தார். குண்டோதரனுக்கு அவ்வுணவு போதாமையால் மீண்டும் மீண்டும் உணவை வரவழைத்துக் கொடுத்தார். அவன் உண்டு முடித்தபின் தாகத்தினால் வருந்தினான். மதுரை நகரில் இருந்த நீர்நிலைகளில் இருந்த நீர் முழுவதையும் குடித்தபோதும் அவனது தாகம் தணியவில்லை. அதனால் சிவபெருமான் தனது முடியில் ஓடும் கங்கையை நோக்கி நீ ஆறாக மாறி மதுரையைச் சுற்றி ஓடுவாயாக" என்றார்.

"சுவாமி, முன்பு பகீரதனின் வேண்டுகோளுக்கிணங்க என்னைப் பூமியில் பாயும்படி ஆணையிட்டீர்கள். நான் பாய்ந்து சென்றேன். அப்பொழுது "பாய்ந்து செல்லும்

நீரில் குளிப்பவர்களின் பாவங்கள் நீங்கும் என்றீர்கள். அது போல் தற்பொழுது மதுரையைச் சுற்றிப் பாயும்படி பணித்துள்ளீர்கள். முன்பு தந்த அதே வரத்தை இப்போதும் தரல் வேண்டும்" என்று பணிவுடன் கேட்டது கங்கை.

" சரி அப்படியே ஆகட்டும்" என்றார் சிவபெருமான். அதைக் கேட்டு மகிழ்ந்த கங்கை பாய்ந்து ஓடியது. குண்டோதரன் அதில் இறங்கி நீராடியபடி நீரைக் குடித்தான். அவனது தாகம் நீங்கியது.

சிவனடியார்களுக்கு குறைகளோ, துன்பங்களோ வரச் சிவபெருமான் விடமாட்டார். அவர் எந்த வகையிலும் கீழிறங்கி வந்து தனது அடியார்களைக் காப்பாற்றுவார்.

## ஏழு கடலழைத்த படலம்

கௌதமமுனிவர் ஒருநாள் சிவபெருமானை வணங்கிவிட்டு வரும்போது காஞ்சனமாலையின் வீட்டுக்குச் சென்றார். முனிவரை வணங்கி மதிப்புடன் வரவேற்ற காஞ்சனமாலை கேட்டாள் "மாமுனிவரே, பிறவியென்பது துன்பமானது. அதை நீக்கவல்ல தவம் யாது" என்று கேட்டாள்.

"பாண்டியனின் மனைவியே, சிவபெருமானை மருமகளாகப் பெற்ற கற்புக்கரசியே, நீ அறியாத தவம் எதுவும் உண்டா. இருப்பினும் கேட்டதற்காகச் சொல்கிறேன். மானதம், வாசிகம், காயிகம் எனத் தவம் மூன்று வகைப்படும். மானதம் என்பது வாய்மை, இரக்கம், பொறை, பொறிகளை அடக்கல், சிவத் தியானம் என்பவையாகும். வாசிகமாவது பஞ்சாட்சரசெபம், சத்ருத்திரபராயணம், தோத்திரம், தருமகாரியங்கள் செய்தல் என்பனவாகும். காயிகங்கள் என்பது சிவனைப் பூசித்தல், சிவனடியார்களைப் பேணல், சிவத்தலங்களுக்குச் சென்று வணங்கல், திருப்பணிகள் செய்தல், சிவதீர்த்தங்களில் நீராடுதல் என்பனவாகும். இவற்றுள் காயிகங்களே சிறந்தது. கங்கையில் நீராடுவதை விட நதிகள் யாவும் வந்து சேரும் சமுத்திரத்தில் நீராடுவது மிகச் சிறந்தது" என்றார்.

அதைக் கேட்ட காஞ்சனமாலைக்குச் சமுத்திரத்தில் நீராட வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அதைத் தனது மகளான தடாதகைப்பிராட்டிக்குச் சொன்னாள். தடாதகைப்பிராட்டி அதைச் சிவனுக்குச் சொல்லச் சிவன் ஏழு சமுத்திரங்களையும்

கீழ்த்திசையில் உள்ள ஒரு வாவியில் வந்து சேருமாறு பணிக்க, ஏழு சமுத்திரங்களும் ஏழு நிறங்களில் வந்து வாவியில் கலந்தன. காஞ்சனமாலை மகிழ்வுடன் அதைப் பார்த்தாள். சிவன் எல்லாம் வல்லவர். தனது பக்தர்களுக்காக எதையும் அருள்வார்.

## மலையத்துவனை அழைத்த படலம்

ஏழு சமுத்திரங்களும் ஏழு நிறங்களில் வந்து கூடியதை மகிழ்வுடன் பார்த்த காஞ்சனமாலை சற்பிராமணர் ஒருவரைக் கேட்டாள்; "சமுத்திர நீராடுவது எப்படி" என்று? "எனக்குத் தெரியவில்லை. அதற்கு ஏதாவது நிபந்தனை உண்டா?" – பிராமணன் சொன்னார்: "அரசியே தனது கணவனின்கை, புத்திரனுடைய கை, அல்லது பசுக்கன்றின் வால் இம் மூன்றில் ஒன்றை வலது கையால் பற்றிக் பிடித்துக் கொண்டு நீராடுவது தான் முறை.

கணவன் இறந்தமையாலும் மகன் இன்மையாலும் மிகுந்த மனவருத்தத்துடன் பசுக்கன்றின் வாலைப் பிடித்தபடி நீராட முடிவு செய்தாள் காஞ்சனமாலை. அதை அறிந்த சிவபெருமான் சுவர்க்கத்தில் இருந்த அவளது கணவனான குலசேகரபாண்டியனை அழைத்து, ''உனது மனைவியுடன் சமுத்திர நீராடு'' என்று பணித்தார். கணவனைக் கண்ட காஞ்சனமாலை மிக்க மகிழ்வுடன் அவனது கையைப் பிடித்துக் கொண்டு சமுத்திரத்தில் நீராடினாள். நீராடிவிட்டு வெளியே வந்த இருவரையும் ஏற்றிச் செல்ல ஒரு விமானம் தேவருலகில் இருந்து வந்து நின்றது. காஞ்சனமாலையும் அவனது கணவனும் அதில் ஏறிச் சிலலோகத்திற்கு சென்றார்கள்.

சிவன் சிவனடியார்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்த வரலாற்றைக் கூறுவதே திருவிளையாடற் புராணம் ஆகும்.

## உக்கிரபாண்டியன் திருஅவதாரப்படலம்

ஒருபோதும் கர்பமெய்தாது குழந்தையைப் பெற்றருளிய தடாதகைப் பிராட்டியாரிடத்தே முருகக் கடவுள் பிறந்தமை போலத் தனது நெற்றிக் கண்ணால் சிவபெருமான் திருவுளம் செய்தமையால் தடாதகைப் பிராட்டி கர்ப்பவதி ஆனாள். பின் ஒரு குழந்தை பிராட்டியாருக்கு திருவவதாரம் செய்தது. அக்குழந்தைக்கு பிராட்டியார் உருத்திரவர்மன் என்று பெயரிட்டார். உரிய வயது வந்ததும் உருத்திரவர்மனுக்கு வேத உபநிடதங்களும், ஆயுதப்பயிற்சியும், அறுபத்து நான்கு கலைகளும் கற்பிக்கப்பட்டன.

உருத்திரவர்மன் ஒரு முறை கற்பித்தால் அதனை உடனே விளங்கிக் கொள்ளும் திறமைசாலியாக இருந்தான். எட்டு வயதில் சகல வித்தைகளையும் அறிந்தவராக உருத்திரவர்ம பாண்டியர் திகழ்ந்தார்.

உருத்திரவர்மன் மிகுந்த பலசாலியாகவும், மதிநுட்பம் உடையவனாகவும், போர் வீரனாகவும் திகழ்ந்தான். அவன் அயல்நாடுகளையெல்லாம் வென்று, தோற்ற அரசர்களிடமிருந்து திறை பெறுவான் என்று தந்தையான சோமசுந்தர பாண்டியன் நினைத்தான்.

சிவன், அடியாருக்காகத் தன்னை மாற்றிக் கொள்வான். மாற்றித் தன்னடியாரை மகிழ்விப்பான்.

## உக்கிரகுமாரனுக்கு வேல்வளை கொடுத்த படலம்

சுந்தரபாண்டியன் தனது புதல்வனான உக்கிரவர்மனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பிப் பெண் தேடினார். சிவபெருமான் வடதேசத்தில் உள்ள மானவூர் என்னும் நாட்டிற்கு அரசனான சோமசேகரனின் கனவில் தோன்றி, ''உனது மகளான காந்திமதியை பாண்டிய மன்னனின் மகனான உக்கிரவர்மனுக்குத் திருமணம் செய்து வை'' என்று அருளினார். சோமசேகரன் மிகவும் மகிழ்ந்து மகளை அழைத்துக் கொண்டு மதுரைக்கு வந்தான். அதேநேரம் சோமசேகரனிடம் பெண் கேட்கச் சுந்தரபாண்டியன் புறப்பட்டுச் சென்றான். வழியிலே பாண்டியன் சோமசேகரனைக் கண்டு ஆரத்தழுவி மகிழ்ந்தான்.

பின் நல்லமுறையில் திட்டமிட்டு ஆடம்பரமாகப் பாண்டியன் உக்கிரவர்மனுக்கும் காந்திமதிக்கும் திருமணம் செய்து வைத்தான். அதன்பின் சுந்தரபாண்டியன் உக்கிரவர்மனுக்கு முடிசூட்டி வைத்துவிட்டுத் தடாதகைப் பிராட்டியாரோடு திருக்கோவிலுக்குச் சென்று எழுந்தருளியிருந்தார்.

## கடல் சுவற வேல்விட்ட படலம்

உக்கிரவர்மபாண்டியன் நீதி நெறி தவறாது நாட்டை ஆண்டு வந்தான். யாகங்கள் பலவற்றைப் பக்தி சிரத்தையோடு செய்தான். பாண்டிய நாடு பொன்னுலகமாய்த் திகழ்ந்தது. பல யாகங்கள் செய்தமையால் பொறாமை கொண்ட இந்திரன், வருணனை அழைத்து, "பாண்டிய நாட்டில் ஊழிக்காலம் போல மழை

பெய்யக் கடவாய்''. என்று கட்டளையிட்டான். மழை ஊழிக்காலம் போலப் பெய்தது. மழை நீர் சமுத்திரத்திற்குச் செல்ல முடியாது நின்றது. சமுத்திரம் பெருகி வந்தது. இதை உணர்ந்த சிவபெருமான் உக்கிரவர்னின் கனவில் தோன்றி, ''உக்கிரவர்மா சமுத்திரம் பொங்கிப் பாண்டி நாட்டை அழிக்க விரைந்து வருகிறது. அதை உனது வேற்படையால் தடுத்து நிறுத்து'' என்றார். உக்கிரவர்மன் விழித்தெழுந்து கடற்கரைக்குச் சென்ற போது சமுத்திரம் பொங்கி வந்தது. அதைத் தடுப்பதற்காக உக்கிரவர்மன் தனது வேலை எறிந்தான். வேல் பட்டதும் சமுத்திரம் அடங்கிப் பின் வாங்கியது. அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் ஆகாயத்தில் தோன்றி உக்கிரவர்மனுக்கு ஆசி வழங்கினார்.

சிவபெருமான் தனது அடியவர்களுக்கு வரவிருக்கும் துன்பங்களை அறிவிப்பதோடு நில்லாது அதற்குத் தீர்வும் சொல்வார்.

## இந்திரனது முடிமேல் வளை எறிந்த படலம்

உக்கிரவர்மபாண்டியன் அரசு செய்து கொண்டிருந்த காலத்தில் பாண்டிய நாட்டிலும் சேர சோழ நாடுகளிலும் பல காலமாக மழை பெய்யவில்லை. அதனால் மூவேந்தர்களும் பொதிகை மலைக்குச் சென்று அகத்திய முனிவரைச் சந்தித்து காரணம் கேட்டனர். அதற்கு அகத்திய முனிவர், ''கிரகதோசத்தால் தான் மழை பெய்யவில்லை. இன்னும் பன்னிரண்டு வருடங்களுக்கு மழை பெய்யாது. அதனால் இந்திரனிடத்து சென்று முறையிடுங்கள்'' என்றார்.

''இந்திரனிடம் எவ்வாறு போவது'' என்று உக்கிரவர்மபாண்டியன் கேட்டான்.

''நீங்கள் சோமவார விரதத்தை நோற்று சிவபெருமானது திருவருளைப் பெற்று ஆகாயமார்க்கமாகச் செல்லுங்கள்'' என்றார்.

மூவேந்தர்களும் அகத்தியரின் சொற்படி புனிதர்களாக இருந்து பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி வில்வம் இலையாலும், வெள்ளை மந்தாரம், முல்லை, மல்லிகை, இருவாட்சி, வெள்ளெருக்கு வெண்தாமரைப் பூக்களாலும் அறுகாலும் அட்சதையாலும் கடம்பவனத்தில் பொற்தாமரை வாவியின் அருகே இருந்த சிவபெருமானை அர்ச்சித்தனர். அதனால் அவர்கள் சிவபெருமானின் அருளைப் பெற்று ஆகாயமார்க்கமாக இந்திர லோகத்திற்குச் சென்றார்கள். இந்திரன் மூவரையும் அன்புடன் அழைத்து அங்கிருந்த

ஆசனங்களில் அமரச் சொன்னான். சேரமன்னனும். சோழ மன்னனும் இந்திரன் காட்டிய ஆசனங்களில் அமர, உக்கிரவர்மபாண்டியன் இந்திரனது சிம்மாசனத்தில் சென்று அமர்ந்தான். அதனால் கோபங் கொண்ட இந்திரன் சோழநாட்டிலும், சேரநாட்டிலும் மழை பெய்யுமாறு வருணனுக்கு கட்டளையிட்டான்.

சேரனும் சோழனும் சென்ற பின்பும் உருத்திரவர்மன் இந்திரனது சிம்மாசனத்தை விட்டு இறங்காது வீற்றிருந்தமையால் இந்திரன் கோபங் கொண்டு அவனை பரிகசிப்பதற்காக ஒரு அழகற்ற ஆரத்தைக் கொடுத்தான். அதை வாங்கிய உருத்திரவர்மன் அதை வாங்கித் தனது கழுத்தில் போட்டதும் அது அழகிய பெறுமதி மிக்க மாலையாக மாறியது. அதனால் ஆச்சரியப்பட்ட இந்திரன், ''பாண்டியனே, இன்று முதல் உலகத்தவர்கள் 'ஆரம் தாங்கு பாண்டியன்' என்று அழைப்பர் என்று வாழ்த்தினான். அதைப் பொருட்படுத்தாது உக்கிரவர்மன் அங்கிருந்து வெளியேறி மதுரையை அடைந்தான்.

சேரநாடும் சோழ நாடும் மழை பெய்தமையால் செழிப்புற்றது. பாண்டிய நாட்டில் மழை பெய்யவில்லை. ஒருநாள் உக்கிரவர்மபாண்டியன் பொதிகை மலையில் வேட்டையாடும்போது மேகங்கள் பொதிகை மலையில் படிந்திருந்தபோது அவற்றைப் பிடித்து வந்து சிறையில் அடைந்தான். அதைக் கேட்டு மிக்க கோபங் கொண்ட இந்திரன் பாண்டிய நாட்டின் மீது போர் தொடுத்தான். அதை ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்ட உக்கிரவர்மபாண்டியன் மிக்க கோபங் கொண்டு சேனைகளுடன் புறப்பட்டு வந்து இந்திரனுடன் கடுமையாகப் போரிட்டான். உக்கிரவர்மபாண்டியனின் தாக்குதலைச் சமாளிக்கமுடியாத இந்திரன் தன்னிடமிருந்த மிகவும் பலம் பொருந்திய ஆயுதமான குலிசத்தை ஏவினான். அதைக் கண்ட உக்கிரவர்மபாண்டியன் தனது வளையைக் கழற்றி வீசினான். அவ்வளை குலிசத்தை வீழ்த்திவிட்டு இந்திரனது மகுடத்தை மண்ணில் விழ வைத்தது. அதனால் தப்பி ஓடிய இந்திரனை பாண்டிய மன்னன் கைது செய்து பாண்டிய நாட்டிற்கு என்றும் குறையாத மழையைத் தருவேன் என்று உறுதியளித்தால் விடுதலை செய்வேன்'' என்றான். அதற்கு உடன்பட்டதால் இந்திரனை விடுதலை செய்தான். அதன் பின் உக்கிரவர்மபாண்டியன் பிடித்துச் சிறையில் அடைத்த மேகங்களை விடுவிக்குமாறு தூதுவன் ஒருவனை அனுப்ப, பாண்டிய மன்னன் மறுத்து, ''இந்திரனை நம்பமுடியாது. அதனால் அதற்கு யாராவது பிணை நிற்கவேண்டும்'' என்றான். அதைக்கேட்ட இந்திரனின் நண்பனாக ஒரு வேளாளன் பிணை நிற்க ஒப்புக் கொண்டதால் உக்கிரவர்மபாண்டியன் மேகங்களை விடுதலை செய்தான்.

எந்தப் பெரியவரும் செருக்கடைந்தால் சிவன் அவரை விட்டு நீங்கி விடுவான். அதனால் அவர் தினமும் துன்பத்துக்குள்ளாவார். அதிகாரமல்ல அன்பு தான் சிவம்.

## மேருவை செண்டால் அடித்த படலம்

சில காலம் செல்ல உக்கிரவர்மபாண்டியனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அப்பிள்ளைக்கு வீரபாண்டியன் என்று பெயரிட்டான். பிள்ளை சகல வித்தைகளையும் கற்றுத் தேர்ந்து தலைசிறந்த வீரனாகியது. அப்போது மழை பெய்யாது விட்டது. பாண்டியன் சோதிடர்களை அழைத்து ஏன் மழை பெய்யவில்லை என்று வினாவினான். அதற்குச் சோதிடர்கள் கிரகங்கள் சூரியனை நோக்கி நிற்பதால் ஒரு வருடத்திற்கு மழை பெய்யாது'' என்றனர். உக்கிரவர்மபாண்டியன் சிவனைத் தொழுதும் மழை வரவில்லை. மக்கள் பசிப்பிணியால் வருந்தினர். மிருகங்கள் உணவும் நீரும் இன்றி இறந்தன. மன்னன் துயரத்துடன் வெறுந்தரையில் படுத்துறங்கினான். அப்போது சிவபெருமான் அவனது கனவிலே தோன்றி; ‘‘மன்னா, கவலைப்படாதே. ஒரு வருடம் மழை பெய்யாதுமேருமலையின் ஒரு பகுதியில் ஏராளமான பொன் உள்ளது. அங்கே சென்று மேருமலையின் செருக்கை அடக்குவதற்காக உனது செண்டாலடித்து விட்டு வேண்டிய திரவியங்களை எடுத்துவா?" என்று கூறி மறைந்தார்.

விழித்தெழுந்த உக்கிரவர்மபாண்டியன் தனது பரிவாரங்களோடு புறப்பட்டுச் சென்று காசியை அடைந்தான். அங்கு ஓடிய கங்கை நதியில் நீராடிவிட்டுச் சிவபெருமானைத் தொழுது விட்டு மேருமலையை அடைந்து அதன் உச்சிக்குச் சென்று அதைச் செண்டால் அடித்தான். மகாமேருமலை எட்டுப்புயங்களையும், நான்கு சிறகுகளையும் ஒரு வெள்ளைக் குடையையும் கொண்ட உருவத்தோடு வெகுநேரம் தாமதித்தே வந்தது. அதனால் மன்னன் கோபங் கொண்டான். அதைக் கவனித்த மேருமலை, ‘‘மன்னா, நான் தினமும் இவ்வுருவத்துடன் மீனாட்சியம்மையையும் சேமசுந்தரப் பெருமானையும் வழிபடச் செல்வேன். இன்று ஒரு பெண்ணில் ஏற்பட்ட காமத்தினால் சிவனையும் அம்மையையும் மறந்து விட்டேன். அதற்கான தண்டனையாகத்தான் உம்மால் அடிபட்டேன். அதனால் உண்டான பாவம் இப்போது நீங்கிவிட்டது. அதற்கு என்ன கைம்மாறு செய்யவேண்டும் என்று சொல்லும், அதைச் செய்வேன்" என்றது.

''மன்னன், தான் பொன்னை விரும்பி வந்தேன்'' என்றான். அதைக் கேட்ட மேருமலை; ''மன்னா, நீ விரும்பி வந்த பொன் அந்த மாமரநிழலில் உள்ள அறையில் உள்ளது. தேவையானதை எடுத்துச் செல்'' என்றது.

மன்னன் அறையைத் திறந்து தேவையான பொன்னை எடுத்துவிட்டு அறையை பூட்டித் தனது பெயரைப் பொறித்துவிட்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டு வந்து சோமசுந்தரப்பெருமானை வணங்கிவிட்டு அரச மாளிகைக்குச் சென்று மக்களுக்குப் பொன்னைப் பகிர்ந்தளித்தான். சில நாட்களின் பின் மழை பொழிந்தமையால் மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

சிவனை வணங்கினால் அவன் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அரசனுக்குக் கூறுவான்.

## வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலம்

முனிவர்கள், பிராமணர்கள், ரிசிகள் எல்லோரும் வேதத்தை நல்ல முறையில் ஓதி வந்தார்களே தவிர அதன் பொருளைத் தெரியாமையால் அல்லற்பட்டனர். அப்போது அரபக்தர் என்னும் ஒரு பிராமணர் அங்கு வந்தார். முனிவர்களும், பிராமணர்களும் கவலையோடு இருப்பதைக் கண்ட அரபக்தன் அவர்களின் கவலைக்கான காரணத்தைக் கேட்டார். அவர்கள் அதைச் சொன்னபோது அரபக்தர் சொன்னார்; ''மதுரைமாநகரில் கோவில் கொண்டிருக்கும் சோமசுந்தரக்கடவுளுடைய விமானத்திற்கு தென்திசையில் எழுந்தருளியிருக்கும் பரமாச்சாரியராகிய தட்சணாமூர்த்தியே வேதங்களை உபதேசிப்பவர். நீங்கள் அங்கு சென்று தவஞ் செய்யுங்கள்'' என்றார்.

அதைக் கேட்ட முனிவர்கள் மிகவும் மகிழ்ந்து அரபக்தரை வணங்கி நன்றி கூறிவிட்டு மதுரைக்கு வந்து பொற்தாமரை வாவியில் நீராடிவிட்டு சிவனையும் மீனாட்சியம்மையையும் வணங்கிவிட்டுத் தென்திசையில் கல்லால மரநிழலில் வீற்றிருக்கும் தட்சணாமூர்த்தியின் சன்னிதானத்தில் அமர்ந்து தவம் செய்தனர்.

அவர்களின் தவத்தால் மகிழ்வடைந்த தட்சணாமூர்த்தி வீபூதியும் உருத்திராக்கமும் தரித்தவராக வேதத்தை ஓதிப்பாடி பதினாறு வயதுடைய இளைஞனாக வந்து முனிவர்களுக்கு அருகில் நின்றார். பின் அவர்களை அழைத்துச்

சென்று வேதத்திற்கான பொருளை விளக்கினார். அவர்கள் விளங்கிக் கொண்டதும் உள்ளே சென்று சிவலிங்கத்துள் மறைந்தார்.

சிவனடியார்களின் வேண்டுதல்களை நிறைவேற்றச் சிவன் முதியவராகவும் , சித்தராகவும், சிவனடியாராகவும், குருவாகவும் வந்து உதவி செய்வார்.

## மாணிக்கம் விற்ற படலம்

வீரபாண்டியனுக்கு பட்டத்தரசி மூலம் பிள்ளை பிறக்கவில்லை. ஆனால் காமக் கிழத்தியர்கள் பலரிடமிருந்து பல பிள்ளைகள் பிறந்தன. அதனால் மனம் வருந்திய வீரபாண்டியனும் பட்டத்து அரசியும் சிவவிரதங்களை அனுட்டித்தமையால் நற்குணம் மிக்க ஓர் ஆண்பிள்ளை பிறந்தது. அப்பிள்ளைக்கு ஐந்து வயதானபோது வீரபாண்டியன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது அவனை ஒரு புலி கொன்று விட்டது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீரபாண்டியனின் காமக் கிழத்திகளும் அவர்களது பிள்ளைகளும் பெருந்தொகையான ஆபரணங்களையும் கிரீடத்தையும் எடுத்துக்கொண்டு தலைமைறைவாகினார்கள். அந்த ஐந்து வயதுப்பிள்ளையே வீரபாண்டியனது இறுதிக் கிரியைகளைச் செய்தது.

சிலகாலஞ் செல்ல மந்திரிமார் அந்தப் பிள்ளைக்கு முடிசூட்டுவதற்காக திரவியசாலைக்குச் சென்றனர். அது முற்றாகக் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. கிரீடத்தையும் காணவில்லை. அதனால் வேறு ஒரு முடி செய்யத் தீர்மானித்து அதற்கு வேண்டிய பெறுமதியான இரத்தினக்கல்லைத் தேடித்தரும் பொறுப்பைச் சோமசுந்தரப்பெருமானிடம் ஒப்படைத்தனர். அன்று இரத்தினக்கற்கள் அடங்கிய பொதியுடன் வணிகன் ஒருவன் அரண்மனைக்கு வந்தான்.

அவன் வந்து சொன்னான்; ‘‘முடியில் பதிப்பதற்கு உகந்த பல இரத்தினக்கற்கள் என்னிடம் உண்டு. இதோ பாருங்கள் என்று ஒரு முடிச்சை அவிழ்த்துக் காட்டினான். அதில் பெறுமதியான பல இரத்தினக்கற்கள் இருந்தன. அவற்றை அரசகுமாரனிடம் கொடுத்த வைசிகன், ‘‘அரசகுமாரனுக்கு இம் முடிச்சில் உள்ள கற்களால் கிரீடம் செய்யுங்கள். அத்துடன் இராசகுமாரனுக்கு அபிடேக பாண்டியன் என்று பெயர் சூட்டுங்கள்’’ என்று கூறிவிட்டு மறைந்தார். அதனால் வந்தவர் சிவபெருமானென நினைத்து அங்கு நின்ற அனைவரும் சிவபெருமானை வணங்கினர். பின் சிவபெருமான் கொடுத்த இரத்தினங்களால் முடி செய்து, இராசகுமாரனுக்கு

அபிடேக பாண்டியன் எனப் பெயரிட்டு முடிசூட்டினர். முன்பு காமக் கிழத்தியரின் பிள்ளைகளால் கொள்ளையடிக்கப்பட்ட திரவியங்கள் முழுவதையும் சிலர் கொண்டு வந்து அபிடேக பாண்டியனிடம் ஒப்படைத்தனர்.

சிவன் தேவையானபோது தேவைக்கேற்றபடி செயற்பட்டுச் சிவனடியாரை மகிழ்விப்பான்.

## வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் அபிடேக பாண்டியன் சோமசுந்தரப்பெருமானுக்கு விசேட பூசை செய்வான். அதேதினம் வருடாவருடம் இந்திரனும் சோமசுந்தரப்பெருமானுக்கு விசேட பூசை செய்வான். அன்று அபிடேக பாண்டியன் சோமசுந்தரப்பெருமானுக்கு விசேட பூசை செய்ததால் இந்திரனால் உடனே பூசை செய்ய முடியவில்லை. அதனால் அவன் தாமதாமாகப் பூசை செய்து விட்டு இந்திரலோகத்திற்குச் சென்றபோது அவனின் வருகைக்காக வருணன் காத்திருந்தான். மிகவும் தாமதமாக வந்தமையால் வருணன் கேட்டான், ''அது அவ்வளவு மகிமை உள்ள சிவலிங்கமா?" "எனது பிரமப்பழியையும் எனது வெள்ளையானையினது சாபத்தையும் அச்சிவலிங்கம் தான் நீக்கியது'' என்றான் இந்திரன். அதைக் கேட்ட வருணன்; தேவமருத்துவர்களால் தீர்க்கப்படாதிருக்கும் என்னை வருத்துகின்ற பெரு வயிற்றுநோயை அச் சிவலிங்கத்தை வணங்குவதன் மூலம் மாற்ற முடியுமா..?" என்று கேட்டான்.

"நிட்சயமாக நடக்கும். நீ மதுரைக்குச் சென்று கடம்பவனத்தில் இருக்கும் பொற்தாமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரப்பெருமானை வணங்கு உனது நோய் நீங்கும்'' என்றான் இந்திரன்.

அதைக்கேட்ட வருணன் சமுத்திர ராஜனை அழைத்து '' நீ மதுரை நகரை விரைவாக அழிக்கக்கடவாய்'' என்று ஆணையிட்டான். உடனே சமுத்திரம் பெருக்கெடுத்து மதுரையை அழிக்கப் பெருகி வந்தது. அதைக் கண்ட மக்களும் முனிவர்களும், வீரபாண்டியனும் சோமசுந்தரக் கடவுளின் சன்னிதானத்திற்குச் சென்று அழுது புலம்பினர். அதைக் கண்டு இரங்கிய சிவபெருமான் முகில்களை அழைத்து பெருகிவரும் சமுத்திர நீர் முழுவதையும் உறிஞ்சிக் குடியுங்கள்'' எனப் பணித்தார். உடனே அங்கு சென்ற முகில்கள் பெருகி வந்த சமுத்திர நீரை உறிஞ்சிக் குடித்தன. மன்னரும் மக்களும் சிவனின் அருளை வியந்து போற்றினர்.

சிவன் தனது அடியவர்களுக்கு உதவ விதிகளையும் மாற்றுவார்.

## நான் மாடக் கூடலான படலம்

வருணன் தனது செயலால் மிக்க அவமானமடைந்து மிக்க கோபங் கொண்டு, ஏழுமேகங்களையும் அழைத்து, "நீங்கள் சமுத்திரங்களில் உள்ள முழுநீரையும் குடித்துவிட்டு மதுரை நகரை அழியுங்கள்" என்று கட்டளையிட்டான்.

மேகங்கள் சமுத்திரநீர் முழுவதையும் குடித்துவிட்டு மதுரையில் அவற்றைக் கொட்டின. மதுரைமாநகரம் முழுமையாக நீரில் மூழ்கியது. அதனால் மக்களும் ஏனைய உயிரினங்களும் பெருந்துன்பப்பட்டன. பாண்டியன் சிவபெருமான் இந்த அவலத்தைத் தீர்த்து வைப்பாரென எண்ணிச் சோமசுந்தரக் கடவுளின் சன்னிதானத்திற்குச் சென்று அங்கிருந்து முறையிட்டான். உடனே சிவபெருமான் தனது சடாமுடியில் வீற்றிருக்கும் நான்கு மேகங்களையும் அழைத்து, "மதுரையைச் சுற்றி மாடங்கள் அமையுங்கள்" என்றார். உடனே அம் மேகங்கள் மதுரைநகர் முழுவதையும் மூடி இரும்பு அரனாக நின்றன. அதனால் வருணன் அனுப்பிய மேகங்களால் சமுத்திர நீரை வெளியேற்ற முடியவில்லை.

அதைக் கண்டு வருணன் நடுநடுங்கியவாறு பொற்றாமரை வாவிக்குச் சென்று அதில் நீராடினான். நீராடிவிட்டுச் சோமசுந்தரப்பெருமானை வணங்கித் தான் செய்த பிழையை பொறுத்தருளுமாறு வேண்ட அவனது வயிற்றுநோய் நீங்கியது. அதனால் மகிழ்ந்த வருணன் சோமசுந்தரப்பெருமானை வணங்கிவிட்டு சுவர்க்கத்திற்குச் சென்றான். நான்கு மடாளிகையாகி நிக்கிறமையால் மதுரைக்கு நான்மாடக்கூடல் என்ற பெயரைப் பெற்றது.

எத்தகைய வல்லவனாக இருந்தாலும், அந்த வல்லமை சிவன் தந்தது என்று எண்ணாது அது தனது திறமை என்று எண்ணினால் அழிவு நிட்சயம் வரும்.

## யானை யெய்த படலம்

விக்கிரம பாண்டியன் பல திக்குகளிலும் இருந்த நாடுகளை கைப்பற்றி அவற்றிடம் திறை பெற்று அதைச் சைவசமயத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி வந்தான். சோமசுந்தரக்கடவுளுடைய விமானத்தின் வடக்குப் பக்கத்திலே ஒரு திருக்கோவில் அமைத்து, அதிலே சித்தசுவாமியின் திருவுருவத்தை பிரதிட்டை செய்து, அவருக்குத் தன்னாலான தொண்டுகளைச் செய்து வந்தான். சோழ அரசன் ஒருவன் விக்கிரம

பாண்டியனை வெல்லமுடியாமையினால் அவனை வஞ்சனையால் வெல்ல நினைத்து அஞ்சனம், கிரவுஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், காஞ்சி, யானை மலை, ஏமகூடம், வித்தகம் ஆகிய மலைகளில் வசித்து வந்த எண்ணாயிரம் சமணர்களை அழைத்து, “நீங்கள் உங்கள் சமய மந்திரங்களைப் பாவித்துப் பாண்டியனைக் கொன்றால், எனது நாட்டின் அரைவாசியை நான் உங்களுக்குத் தருவேன்’ என்றான்.

அதைக்கேட்ட சமணர்கள் மிக்க மகிழ்வடைந்து பாலி ஆற்றங்கரையிலே வேள்விச்சாலை அமைத்துப் பூசை செய்தனர். அப்போது அவ்வேள்வித்தீயில் இருந்து ஒரு மதயானை வெளியே வந்தது. அதைக் கண்ட சமண மதத்தலைவன்; “நீ விரைவாகச் சென்று மதுரைமாநகரையும் பாண்டியனையும் அழித்து விட்டுவா” என்று கட்டளையிட்டான்.

மதயானை மதுரை நகருக்குள் புகுந்து கட்டடங்களை உடைத்தது. அகப்பட்டவர்களைக் கொன்றது. மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தது. இதைக் கண்ட மக்கள் மன்னனிடம் ஓடோடிச் சென்று முறையிட்டனர். மன்னன் சோமசுந்தரக்கடவுளின் ஆலயத்துக்குச் சென்று மனமுருகி வழிபட்டான். அப்போது, “மன்னா கவலை கொள்ளாதே. நாம் அந்த மதயானையை வில் வீரனைாகிக் கொல்வோம். நீ உடனே இந் நகரத்திற்குக் கிழக்குத் திக்கிலே ஒரு அட்டாளை மண்டபம் கட்டுவாயாக” என்று வானிலிருந்து ஓர் அசரீரி எழுந்தது. அதனால் மனம் மகிழ்ந்த மன்னன் பதினாறு தூண்களை உடைய ஓர் அட்டாளை மண்டபத்தை கட்டினான்.

சிவபெருமான் ஒரு சிறந்த வில்வீரனின் உருவெடுத்து மதுரை மாநகருக்கு வந்தார். யானை மதுரை நகரை அழித்துக் கொண்டிருந்தது. சிவபெருமான் ஓர் அம்பை எடுத்து இலக்குப் பார்த்து யானையின் மந்தகத்தைக் குறிபார்த்து அம்பை விடுத்தார். அம்பு விரைந்து சென்று யானையின் மந்தகத்தில் ஏறி அதைச் சிதறடித்தது. யானை இறந்ததும் பொங்கியெழுந்த மக்கள் கூட்டம் சமணர்களைத் துரத்தித் தாக்கியது. தாக்குதலால் பெருங்காயப்பட்ட சமணர்கள் நிலத்தில் விழுந்தனர். பலர் தப்பியோடினர்.

விக்கிரம பாண்டியன் வில்வீரனாக வந்த சிவபெருமானை வணங்கித்தான் புதிதாக அமைத்த அட்டாளை மண்டபத்தில் வந்திருக்குமாறு பணிவுடன் கேட்டான். அதற்குச் சிவபெருமான் ஒப்புக் கொண்டார். சிவபெருமான் யானையின் மீது தொடுத்த அந்த அஸ்திரம் நரசிங்கரூபமாக அங்கு தங்கியுள்ளது. அதன்பின் விக்கிரம பாண்டியனுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்கு இராசசேகரன் என்னும் பெயரிட்டு மகிழ்வுடன் அரசு செய்தான்

# பழியஞ்சின படலம்

இராசசேகர பாண்டியனின் மகன் குலசேகரபாண்டியன். அவன் நாட்டை நீதியாக ஆண்டு வந்தான். அவன் தினமும் சோமசுந்தரக்கடவுளை முறைப்படி வணங்குபவன். அவனுக்கு பதினாயிரம் மனைவியர். அறுபதினாயிரம் குமாரர்கள். அவர்களில் மூத்தவன் அனந்தகுணன்.

ஒருநாள் திருப்புத்தூரிலிருந்து ஒரு பிராமணன் தனது மனைவியோடும் பிள்ளையோடும் காட்டு வழியே மதுரைக்கு வந்தான். நடுக்காட்டில் வரும்போது அவனது மனைவிக்குத் தாகமேற்பட்டது. பிராமணன் மனைவியையும் பிள்ளையையும் ஓர் ஆலமர நிழலில் தங்கியிருக்கச் சொல்லிவிட்டு நீரைத் தேடிப் பறப்பட்டான். அவ்வால மரக்கொப்பில் பல நாட்களுக்கு முன் எய்யப்பட்ட ஒரு அம்பு குத்துண்டு இருந்தது. காற்று கடுமையாக வீசியதால் அவ் அம்பு கிளையிலிருந்து பெயர்ந்து அப்பெண்ணின் மீது விழ, அதனால் அவள் இறந்து போனாள். அவ்வேளை ஒரு வேடன் வெயிலுக்காக மரநிழலில் வந்து ஒதுங்கி நின்றான்.

நீர் எடுக்கச் சென்ற பிராமணன் திரும்பி வந்து பார்த்தபோது அவனது மனைவி அம்பேறியதால் இறந்து கிடந்தாள். அதைக்கண்ட பிராமணன் அவ்வேடன் தான் தனது மனைவியைக் கொன்றவன் என்று பாண்டியனது அரச சபையில் முறையிட்டான்.

அரச சபையில் பிராமணன் இவன்தான் எனது மனைவியைக் கொன்றவன் என்று சத்தியம் செய்தான்.

வேடன், “நான் வெயிலுக்காக ஒதுங்கினேனே அன்றி அம்பு எய்யவும் இல்லை, கொல்லவும் இல்லை. அத்துடன் யார் கொன்றது என்றும் எனக்குத் தெரியாது” என்று சத்தியம் செய்தான். இதனால் குழம்பிய பாண்டியன் இவனைத் தண்டித்து உண்மையைப் பெறுங்கள் என்று கூறினான். தண்டனை கொடுப்போர் வேடனைக் கடுமையாகத் தாக்கியபோதும் அவன் சொன்னதையே சொன்னான்.

அதனால் குழப்பமடைந்த மன்னன் சோமசுந்தரக்கடவுளரின் கோவிலுக்குச் சென்று தனக்கேற்பட்ட குழப்பத்தைத் தீர்த்து வைக்குமாறு இரந்தான்.

அப்போது ஆகாயத்தில் இருந்து ஒரு செய்தி வந்தது, “மன்னவா, இந்நகரத்தில் உள்ள செட்டித்தெருவில் உள்ள ஒரு வீட்டில் இன்றிரவு ஒரு திருமணம் நடைபெறவுள்ளது. அதற்குப் பிராமணனையும் அழைத்துக் கொண்டுவா. உனக்குப் புரிய வைக்கிறேன்” என்பதே அச்செய்தி.

பிராமணனும் அரசனும் மந்திரி பிரதானிகளும் மாறுவேடம் பூண்டு அத் திருமணத்திற்கு வந்திருந்தனர். அப்போது அங்கு வந்திருந்த ஒரு யமதூதன் சொன்னான்; “நல்ல அழகான இளைஞன். நம்பிக்கையோடு மணப்பெண் மகிழ்வுடன் இருக்கிறாள். அவன் நல்ல தேகாரோக்கியமுள்ளவனாக இருக்கிறான். ஆனால் யமனோ இரக்கமின்றி உடனே அவனது உயிரை கவர்ந்து வரும்படி ஆணையிட்டிருக்கிறான். எப்படிக் கவர்வது?” என்று கேட்டான். “இதுவா பெரிய வேலை. நடுக்காட்டிலே என்றோ எய்த அம்பொன்று மரக்கிளையில் இறுக்கமாகச் செருகப்பட்டிருந்தபோது காற்றை வரவழைத்து அம்பை விழுத்தி அப்பெண்ணைக் கொன்றதுபோல இப்போது மணமக்களுக்கு ஆசி வழங்கக் கொண்டு வந்து கட்டியிருக்கும் பசுவுக்கு மூர்க்கத்தனத்தைக் கொடுத்துக் கட்டை அறுத்து வந்த மணமகனை தாக்கச் செய்து கொல்வோம்” என்றான் மற்றவன். மறுகணம் பசு மூர்க்கம் கொண்டு ஓடி வந்து மணமகனின் நெஞ்சைத் தாக்க மணமகன் துடிதுடித்து இறந்தான். அதைக் கண்ட பிராமணன் மனம் வருந்தி மன்னனிடம் தனது பிழையைப் பொறுக்குமாறு வேண்டினான். மன்னன் அப்பிராமணருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பிவிட்டு வேடனை விடுதலை செய்து அவனுக்கும் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைத்தான்.

சிவபெருமான் காரணமின்றி எதையும் செய்யமாட்டார். ஒருவருக்குத் துன்பம் வருவது விதிப்பயன். அதை உணர்ந்தவர்கள் கவலையின்றி வாழ்வர்.

## மாபாதந் தீர்த்த படலம்

குலோத்துங்க சோழன் மதுரையை ஆண்டபோது அவந்தி என்னும் நகரில் ஒரு பிராமணன் வாழ்ந்து வந்தான். அவனது மனைவி பேரழகி. இருவருக்கும் ஒரு கொடிய பாவி பிள்ளையாகப் பிறந்தான். அவன் அழகான தனது தாயை மோகித்தான். அவளும் மகனின் விருப்பத்திற்கு உடன்பட்டாள். இருவரும் சேர்ந்து மகிழ்ந்திருப்பதைத் தந்தை கண்டார். அவன் தனது மகனுக்குப் புத்தி சொன்னபோது அவன் சற்றும் இரக்கமின்றித் தந்தையைக் கொன்றான். அன்றிரவு பிதாவைத் தகனஞ் செய்துவிட்டு தாயுடன் வேறூரில் சென்று வசிப்பதற்காகக் காட்டு வழியே செல்லும்போது வேடர்கள் அவர்களை வழிமறித்து அவர்கள் கொண்டு வந்த பொருட்களை அபகரித்தனர். அதன் பின் அவனை பிதிர்த்தோசம் பேயுருவில் வந்து பிடித்தது. அதனால் அவன் பெரும் நோய்வாய்ப்பட்டுச் செய்வதறியாது ஊர் ஊராக அலைந்து திரிந்தான். அவனுடலெங்கும் புண்கள் உண்டாகிப் பெரும் வேதனையைக் கொடுத்தது. அவன் எங்கும் அலைந்து திரிந்து இறுதியாக மதுரையை வந்து அடைந்தான்.

அப்போது கருணைக் கடலான சோமசுந்தரக்கடவுள் வேடுவ வேடம் தாங்கி, வேடுவிச்சி வேடந் தாங்கிய மீனாட்சி அம்மையுடன் திருக்கோபுரத்தின் அருகே சூதாடிக் கொண்டிருந்தார். அந்தப் பிராமணனைக் கண்டதும்; அம்மையே காமப்பித்தன் வருகிறான். காமம் எதைப் பற்றியும் சிந்திக்கவிடாது தனது தேவையைப் பூர்த்தி செய்வதிலேயே கருத்தாக இருக்கும். அதற்குத் தாய், பிள்ளை, சகோதரி என்ற வேறுபாடு தெரியாது. காம நினைவு வந்தால் நினைத்தாலும், கேட்டாலும், கண்டாலும் விசம் தலைக்கேறியதைப் போல அறிவைக் கெடுத்துவிடும். எல்லாப் பாவங்களுக்கும் மூல காரணம் காமமாகும். காமம் கொண்டவனுக்கு நரகத்தைக் கொடுப்பதும் காமமாகும்" என்றார். பின் அவனைப் பார்த்து, "பார்ப்பானே, நீ வருந்தி மெலிந்து நோயுற்றமைக்கான காரணம் என்ன?" என்று கேட்டார்.

அந்தப் பிராமணன் நடந்தவற்றை மனவருத்தத்துடன் கூறினான். அதைக் கேட்ட சிவபெருமான்; "இந்தப் பாவம் எங்கே சென்றாலும் தீராது. இது உனது பரம்பரையையும் தாக்கும் தன்மை கொண்டது. அதனால் நீ சூரியன் உதிக்குமுன் எழுந்து அறுகம்புல்லைச் சேகரித்துப் பசுக்களுக்குக் கொடு. தினமும் மூன்றுவேளை திருக்கோவிலின் அருகில் உள்ள பொற்தாமரை வாவியில் நீராடி சிவபெருமானை நூற்றெட்டுத்தரம் அங்கப்பிரதட்சணம் செய்து சிவனடியார்களுக்குத் தொண்டு செய். பிச்சை பெற்று ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டும் உண்ண வேண்டும். இப்படிச் செய்தால் நீ செய்த பாவம் தொலையும்" என்றார்.

அதைக் கேட்ட மீனாட்சி அம்மையார்; "எத்தகைய கொடியவர்களே யானாலும் தாயைப் புணரும் கொடுஞ் செயலைச் செய்யான். யாருஞ் செய்யத் துணியாத இக்கொடிய பாவிக்குத் தாங்கள் இரங்கியது எதற்காக?" என்று கோபித்தார்.

அதன்பின் அந்தப் பிராமணன் சிவபெருமான் சொல்லியவாறு சிவபெருமானை வணங்கி அவர் சொற்படி நடந்து பாவத்தைத் தீர்த்து விட்டுச் சோதமசுந்தரப் பெருமானை வழிபட்டு முத்தியடைந்தான்.

சிவபெருமான் கருணை வள்ளல், அவரை அன்புடன் வணங்கினால் எத்தகைய பாவங்களைச் செய்த மாபாவிகளுக்கும் மன்னிப்பளித்து ஏற்றுக் கொள்ளும் தன்மை வாய்ந்தவர்.

# அங்கம் வெட்டின படலம்

குலோத்துங்க பாண்டியனின் ஆட்சிக்காலத்தில் வேறு தேசமொன்றில் வாழ்ந்த முதிர்ந்த வயதுடைய ஒருவன் மதுரைக்கு வந்து தான் கற்ற வாள்வித்தையை அவ்வூர் இளைஞர்களுக்கு கற்பித்து அதிலிருந்து வரும் வருமானத்தினால் வாழ்ந்து கொண்டிருந்தான். வாள்வித்தையை நன்கு கற்ற சித்தன் என்ற மாணவன் தான் ஒரு வாள்ப்பயிற்சிக் கூடத்தை நிறுவி அங்குள்ளவர்களுக்கு வாள்ப் பயிற்சி கொடுத்ததோடு, தனது ஆசிரியரிடம் கற்கும் மாணவர்களை அச்சுறுத்தித் தனது பயிற்சி நிலையத்துக்கு வரவழைத்தான். அத்துடன் குருமாதா மீது காமமுற்று அவளுக்குத் தினமும் தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தான். குருமாதா செய்வதறியாது திகைத்துத் திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை என நினைத்துச் சோமசுந்தரக் கடவுளிடம் அழுதழுது முறையிட்டாள்.

மனம் இரங்கிய சோமசுந்தரப்பெருமான் ஒரு வாள்வித்தை பயிற்றுவிப்பவன் போல வேடந் தரித்து சித்தனின் வாள்ப் பயிற்சிக்கூடத்திற்குச் சென்று, "நீ உண்மையான வீரனானால், என்னோடு வாள்ப் போரிடப் பட்டணத்தின் புறப்பகுதிக்கு வா" எனச் சவாலிட்டார். சித்தன் கொதித்தெழுந்து தன்னை வெல்ல யாரும் இல்லை என்ற மமதையோடு அச்சாவலை ஏற்றுக் கொண்டான்.

மறுநாள் சோமசுந்தரக் கடவுள் வாளாசிரியன் வேடமிட்டு வாளை எடுத்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்துக்கு வந்தார். சித்தனும் வந்தான். போரைப் பார்க்க ஏராளமான மக்கள் கூடினர்.

இருவரும் வாள்ப்போர் செய்தனர். போரின் இடையே சிவபெருமான் அனைவரும் கேட்கும்படியாகச் சொன்னார்; "உனது குருபத்தினியை நினைத்த நெஞ்சையும், அது குறித்துப் பேசிய நாக்கையும், தொட்ட கைகளையும், மோகித்த கண்களையும் காத்துக்கொள்" என்று சொல்லி அவவுறுப்புக்களை வாளால் துண்டித்தார். பின்பு தலையை வெட்டி விழுத்திவிட்டு மறைந்து விட்டார்.

வாளாசிரியனைக் காணாத மக்கள் வாளாசிரியன் வீட்டுக்குச் சென்றனர். அங்கே இருந்த அவரது மனைவி, 'அவர் கோவிலுக்குச் சென்றுவிட்டார்' என்று கூறினாள். அப்போது கோவிலால் வந்தவாளாசிரியர் அவர்கள் சொல்வதைக் கேட்டு திகைத்து "நான் யாருடனும் சண்டையிடவும் இல்லை. அவனது அங்கங்களைத்

துண்டிக்கவும் இல்லை” என்றார். அதைக் கேட்ட அவரது மனைவி “சித்தன் நேற்று வந்து என்னுடன் முறைகேடாக நடந்தான். நான் அவனைத் தள்ளிவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு உள்ளே இருந்து சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டு அழுதேன்” என்றாள்.

அதைக்கேட்ட மாணவர்களும், மக்களும் இது சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடல் என்று நினைத்து மகிழ்ந்தனர்.

சிவபெருமான் தனது சிவனடியார்களுக்குத் துன்பம் நேர்ந்தால் பொறுத்துக் கொள்ளமாட்டார். பெண்ணடியார்கள் என்றால் மிகுந்த கோபம் கொள்வார்.

## நாகமெய்த படலம்

குலோத்துங்க பாண்டியன் முதுமை அடைந்தமையால் தனது மகனான அனந்தகுண பாண்டியனுக்கு முடிசூட்டி அரசைக் கையளித்தான். அனந்தகுண பாண்டியன் பெரும் சிவபக்தன். வீபூதி, உருத்திராட்சம், பஞ்சாச்சரம் என்ற மூன்றுமே மெய்ப்பொருள் என்று உணர்ந்து அவற்றில் பக்தி பூண்டு ஒழுகலானான். மன்னனைப் போலவே மக்களும் சிவநினைவோடு வாழந்தனர். இதனால் அங்கு வாழ்ந்த சமணர்கள் மன்னனைக் கொல்வதற்காகத் தமது சமயமுறைப்படி ஒரு பெரிய யாகம் செய்தனர். யாகத்தீயில் இருந்து ஓர் அசுரன் தோன்றினான். சமணர்கள் மகிழ்ந்து அரசனையும் நாட்டு மக்களையும் அழிக்குமாறு அவ் அசுரனைப் பணித்தனர்.

அசுரன் மிகப் பெரிய பாம்பின் உருவத்தை எடுத்து மதுரையை நோக்கி வந்தான். மக்கள் பயந்து நடுங்கியபடி அரசனிடம் சென்று முறையிட்டான். அரசன் பயங் கொள்ளாது சோமசுந்தரப் பெருமானது கோவிலைச் சென்றடைந்து, “எம்பெருமானே, என்னையும் நாட்டு மக்களையும் விழுங்குவதற்காகச் சமணர்கள் பெரியதொரு சர்ப்பத்தை அனுப்பியுள்ளார்கள். அது நாட்டு மக்களை விழுங்குவதற்காகத் துரத்தி வருகிறது. அதனால் அச்சந்தர்ப்பத்தில் இருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றுங்கள்’ என்று வணங்கினான்.

அதன்பின் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு மதுரை நகரத்தின் மேற்குப் புற வாசலை அடைந்தான். அங்கு நின்ற சர்பம் தனது பெரிய வாயைத் திறந்தது. அதன் வாயின் மேற்பகுதி வானைத் தொட்டது. மன்னன் அடுத்தடுத்துப் பல அம்புகளை விட்டபோதும் பயன் ஏற்படவில்லை. அதனால் சிவனை நினைத்துக்

கொண்டு சந்திரபாணம் என்னும் அம்பை விடுத்தான். அது பாம்பின் உடலைக் கிழித்துச் சுக்கு நூறாக்கியது. அதன் விசம் மதுரை எங்கும் இரத்தத்துடன் சேர்ந்து பரவியது. அதனால் மக்கள் மயங்கினர். நிலை தடுமாறினர். அதைக் கண்ட மன்னன் சோமசுந்தரப் பெருமானின் கோவிலுக்குச் சென்று, “எம் பெருமானே தங்கள் கருணையினால் சீறி வந்த சர்ப்பத்தைக் கொன்றுவிட்டேன். அது நஞ்சைக் கக்கியமையால் மக்கள் அவதிப்படுகின்றனர். அக் கொடிய நஞ்சிலிருந்து மக்களைக் காப்பாற்றுங்கள்?” என்று இரந்தான். சிவபெருமான் தனது சடையில் வீற்றிருக்கும் பாலச்சந்திரனிடமிருந்து சிறிது அமிழ்தைப் பெற்று மதுரை நகரில் சிந்தினார். அத்துளி மதுரை நகரெங்கும் விரைந்து பரவி மதுரை நகரைச் சுத்தி செய்தது.

எந்த ஆபத்தான வேளையிலும் சிவனைத துணைக்கு வருமாறு அழைத்தால் அவன் வந்து எம் துயரைத் தீர்ப்பான்.

## மாயப்பசுவை வதைத்த படலம்

சமணர்கள் முன்பு மதயானையை அனுப்பி மதுரையை அழிக்கச் சொன்னார்கள். பின்பு நாக சர்ப்பத்தை அனுப்பி மதுரையை விழுங்கச் சொன்னார்கள். இரண்டும் தோல்வியடைந்தமையால் இனி என்ன செய்யலாமென்று தீர்மானித்த சமணர்கள் அசுரனைப் பசுவின் உருவில் அனுப்பத் தீர்மானித்தனர். பசுவைக் கோமாதா என்று வணங்கும் சைவர்கள் பசுவுக்குத் தீங்கு செய்யமாட்டார்கள் என்று நினைத்தார்கள்.

அவர்கள் யாகம் செய்து ஓர் அசுரனைப் பசுவடிவில் விடுத்தார்கள். அப்பசு மதுரை நகரை அடைந்து பெரும் அட்டகாசம் செய்தது. அரசனான அனந்தகுண பாண்டியன் அதைக் கேள்விப்பட்டுச் சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டான். அவர் தனது வாகனமான இடபத்தைப் பார்த்து, “சமணர் அனுப்பிய மாயப்பசுவை நீ போய் அழித்துவிட்டு வா” என்றார்.

இடபம் சென்று மாயப்பசு முன் சென்று தனது அழகை மேம்படுத்தி மோகத்துடன் நின்றது. அதைக்கண்ட மாயப்பசு தனது வீரியத்தை இழந்து ஒரு மலையாக மாறியது. பாண்டியனும் மக்களும் பெருமகிழ்வடைந்தனர். சமணர்கள் பயந்து ஓடி விட்டனர். இடபம் உலகத்தவர்கள் அறிந்து கொள்வதற்காக தனது தூல சரீரத்தை இடப மலையாக அங்கே நிறுத்திவிட்டு சூக்கும சரீரத்துடன் சோமசுந்தரக்கடவுளை அடைந்து வணங்கியது. சோமசுந்தரக்கடவுள் மகிழ்ந்து , “இனிமேல் இங்கேயே இரு “ என்றார்.

இராவணனோடு யுத்தம் செய்ய வந்த சிறிஇராமபிரானும் அவரது சேனைகளும் அந்த இடபத்தைத் தரிசித்தனர். இராமபிரான் வந்ததை அறிந்த அகத்திய முனிவர் வந்து இடபத்தையும் இராமபிரானையும் தரிசித்தார்கள். அதன் பின் பொற்தாமரை வாவியில் நீராடிவிட்டு சோமசுந்தரக்கடவுளை வணங்கினர். அப்போது, "நீ தென்கிழக்குத் திசை வழியாகச் சென்று சமுத்திரத்தில் அணை கட்டி இலங்கைக்குச் சென்று இராவணனையும் அவனது அசுரசேனைகளையும் அழித்து சீதையைச் சிறை மீட்டு அயோத்திக்குச் சென்று நல்லாட்சி புரிந்தபின் வைகுண்டத்திற்குச் செல்வாயாக" என்று ஓர் அசரீரி வானில் ஒலித்தது. அதைக் கேட்டு மகிழ்ந்த இராமன் சமுத்திரத்தைக் கடந்து அசுரர்களை அழித்து விட்டுத் திரும்பும்போது சேதுவில் சிவலிங்கம் ஒன்றைப் பிரதிட்டை செய்துவிட்டு வந்ததால் அவளைப் பீடித்திருந்த பிரமசத்தித்தோஷம் நீங்கியது. அதனால் அவன் மீளவும் வந்து பொற்தாமரை வாவியில் நீராடி சோமசுந்தரக்கடவுளை வணங்கினான்.

சிவனைத் தொழுபவர்களுக்கு வரும் ஆபத்துக்களைச் சிவன் அவர்களுக்கு அறிவித்துத் தீர்வும் சொல்வான்.

## மெய்க் காட்டிட்ட படலம்

குலபூடணபாண்டியனின் சேனாதிபதி சுந்தரசாமந்தன். அவன் பெரும் சிவபக்தன். அவன் திருநீறு அணிந்தவர்களைக் கண்டால் சிவன் என்று எண்ணி சிவனடியாருக்கான சேவைகளைச் செய்வான். அப்போது வேடர்களின் தலைவனான சேதிராசன் என்பவன் பாண்டியன் மீது படையெடுக்கத் துணிந்தான். அதை அறிந்த பாண்டிய மன்னன் தனது சேனாதிபதியாகிய சுந்தரசாமந்தனை அழைத்து, "சேதிராசன் என்பவன் பாண்டியன் மீது படையெடுக்கத் தீர்மானித்துள்ளதாக ஒற்றர்கள் கூறுகின்றனர். நீ எமது திரவியசாலையைத் திறந்து வேண்டியளவு திரவியங்களை எடுத்துச் சென்று படைவீரர்களை அதிகமாகச் சேர். சேர்ந்தளவு ஆயுதங்களைச் செய்" என்று கூறித் திரவியசாலையின் திறப்பைக் கொடுத்தார் சுந்தரசாமந்தன். திரவியசாலைக்குச் சென்று ஏராளமான திரவியங்களை எடுத்துக் கொண்டு கடம்பவனத்திற்குச் சென்று பொற்தாமரை வாவியில் நீராடி விட்டுச் சோமசுந்தரப் பெருமானை வணங்கினான். பின் தான் கொண்டு வந்த திரவியங்களைக் கோவில் கட்டிடங்கள் கட்டியும், மடங்கள் அமைத்தும், சிவனடியார்க்கு வேண்டிய உணவு, உடை போன்றவற்றை வாங்கிக் கொடுத்தும் வந்தான். திரவியம் முடிய முடியத் திரவியசாலைக்கு சென்று திரவியங்களை அள்ளி வந்து சிவச் செலவுகள் செய்து கொண்டிருந்தான். இதை அறிந்த சிலர் பாண்டியனைச் சந்தித்துக் கூறினர்.

சுந்தரசாமந்தன் இவ்வாறு நேரலாம் என்று கருதி போலியாக ஆள்த்திரட்டுவதுபோலவும், ஆயுதங்கள் செய்வது போலவும் அதிகாரிகளுக்குக் கூறி வந்தான். அவனது நடத்தையில் ஐயம் கொண்ட பாண்டியன் இன்று மாலைக்குள் நீ தெரிந்தெடுத்த படைகளையும், ஆயுதங்களையும் காண்பிப்பாயாக" என்றான். அதனால் கவலை கொண்ட சுந்தரசாமந்தன் சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்திற்குச் சென்று நடந்தவற்றைக் கூறித் தன்னைக் காப்பாற்றுமாறு முறையிட்டான்.

"சுந்தரசாமந்தா கவலைப்படாதே. நாளைக்கு நாம் சேனையோடு வருவோம்" என்றொரு அசரீரி வாக்கு வானில் இருந்து வந்தது. மிக்க மகிழ்வுடன் அவன் சோமசுந்தரக்கடவுளை வணங்கிவிட்டு வீட்டுக்குச் சென்றான்.

மறுநாள் அதிகாலை எண்ணிக்கையில் அடங்காத சேனைகள் ஆயுதங்களுடன் சிவபெருமானின் தலைமையில் மதுரையை வந்தடைந்தன. பாண்டியன் மிக்க மகிழ்ச்சியும் ஆச்சரியமும் கொண்டு படைவீரர்களைப் பார்வையிட்டான். சிவபெருமான் தனது பூதகணங்களைப் படைவீரர்களாக்கிக் கொண்டு வந்து அணிவகுத்து நிற்கச் செய்திருந்தார். அழகும் வீரமும் ஒவ்வொரு படைவீரர்களிலும் தென்பட்டன. அதனால் பாண்டியன், நமது நாட்டைச் சேர்ந்த வீரர்கள் போலத் தெரியவில்லை. இவர்கள் எத்தேசத்தவர்கள்" என்று வினாவினான்.

"அரசே இவர்கள் 'கொங்க தேசத்தவர்கள். இவர்கள் கன்னட தேசத்தவர்கள். இவர்கள் அங்க தேசத்தவர்கள்' என்று ஒவ்வொரு படையணியையும் அரசனுக்கு அறிமுகம் செய்து வைத்தான் சுந்தரசாமந்தன்.

"அப்படியா, பெருந்தூரதேசத்தவர்களை எப்படி அழைத்து வந்தாய்" என்று அரசன் கேட்டான்." அரசே கணக்கு வழக்கின்றித் திரவியங்களை எடுத்துச் செல்லுமாறு பணித்தீர்கள். அதனால் தான் இவற்றைச் செய்யமுடிந்தது" என்றான் சுந்தரசாமந்தன்.

"சுந்தரா, அந்தச்சேனைக்குள்ளே குதிரையில் ஒற்றைச் சேவகனாக நிற்பவர் யார்?" என்று அரசன் கேட்டான்? "அவர் யார் என்று தெரியவில்லை. அவரை அழைத்து வாருங்கள்" என்று சுந்தரசாமந்தன் சொல்ல அவர் அரசனின் முன் வந்தார். அவருக்குப் பாண்டிய மன்னன் பெறுமதி மிக்க பரிசுகளைக் கொடுத்தான்.

அப்போது வேடுவத் தலைவனான சேதிராசன் வேட்டையாடச் சென்றபோது புலியால் தாக்கப்பட்டு இறந்து போனான் என்ற செய்தியை ஒற்றன் ஒருவன் கொண்டு வந்து அரசனுக்குக் கொடுத்தான். மன்னன் மிக மகிழ்ந்து சேனையில் உள்ள போர் வீரர்களைத் தத்தமது ஊர்களுக்குச் செல்லுமாறு பணித்தான். உடனே சிவபெருமான் தான் அழைத்து வந்த வீரர்களோடு மறைந்து போனார். பாண்டியன் அதைக் கண்டு அதிசயித்து, "எல்லாம் சிவன் செயல். சுந்தரசாமந்தா. உனக்காகச் சிவபெருமான் படையுடன் வந்ததால், இனி நீ தான் எனக்குச் சிவபெருமான்" என்றான் மிகழ்வுடன்.

அடியவர்க்கு அடியான் சிவபெருமான். அவன் தன்னை நம்பியவரை ஒரு போதும் கைவிடமாட்டான்.

## உலகவாக்கிழி அருளிய படலம்

குலபூடன பாண்டியன் சிவ விரதங்கள் யாவற்றையும் முறைப்படி அனுட்டித்து வந்தான். இருந்தபோதும். அவன் பிராமணர்களை மதிப்பதில்லை. அதனால் மழை பெய்யாது விட்டது. மக்களும் பிராமணர்களும் வறுமை காரணமாகப் பாண்டிய நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்குச் சென்றனர்.

அதனால் துன்பப்பட்ட பாண்டிய மன்னன் பொற்றாமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரப் பெருமானை வணங்கி மழை பெய்யுமாறு வேண்டினான். ஆனால் மழை பெய்யவில்லை. அதனால் கவலையுடன் தரையிலே படுத்து உறங்கினான். அப்போது சிவபெருமான் பாண்டியனின் கனவிலே ஒரு சித்தராகத் தோன்றி, "பாண்டியனே, நீ என்னை முழுமையான அன்புடன் வணங்குகிறாய். சிவ விரதங்களை முறைப்படி அனுட்டிக்கிறாய். ஆனால் பிராமணர்களை மதிக்காமையால் அவர்கள் யாகங்களை விருப்புடன் செய்வதில்லை. வேதம் தான் எனது ஆசனம். வேதம் தான் பாதுகாவலன். அதுபோல வேதம் தான் எனது வாகனம். அதுவே எனது சிலம்புமாகும். அத்துடன் எனது திருக்கண்ணும் வேதம் தான். எனது திருமேனியும் திருவாக்கும் வேதம் தான். அத்துடன் சிறப்பாக யாகம் செய்யாவிட்டால் மனது பொய்த்துவிடும். இது இயல்பு. சிறப்புக்களையுடைய வேதத்தை ஓதும் பிராமணர்களை மதிக்காமையால் தான் மழை பெய்யாதுவிட்டது. அதனால் பிராமணர்களைக் கொண்டு முறைப்படி யாகங்களைச் செய். அதற்காக நான் ஓர் உலவாக்கிழி தருகிறோம். அதில் உள்ள பொன் எடுக்க எடுக்க குறையாது" என்று சொல்லி அவனது கையில் ஓர் உலவாக்கிழியைக் கொடுத்து விட்டு, அவனது நெற்றியில் நீறு பூசிவிட்டு மறைந்தார்.

விழித்தெழுந்த மன்னன் தனதருகே இருந்த உலவாக்கிழியை எடுத்து அதை வணங்கி அதிலிருந்து திரவியங்களை எடுத்து முறைப்படி யாகங்களைச் செய்வித்தான். கோவில்களைப் புணரமைத்தான். மடங்கள் கட்டினான். சிவனடியார்களையும், பிராமணர்களையும் மதித்தான். மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்தான். அதனால் மாதம் மும்மாரி பொழிந்தது. பாண்டிய நாடு செல்வச் செழிப்புடன் திகழ்ந்தது.

மன்னன், வேதத்தில் வல்லவர்களையும், சிவாகமத்தில் வல்லவர்களையும், உபநிடதத்தில் வல்லவர்களையும், சிவனடியார்களையும், யாகம் செய்யும் பிராமணனையும் மதிக்காது சிவனைப் பேரன்புடன் வழிபட்டுச் சிவவாதங்களை அனுட்டித்தால் அது சிவபெருமானுக்குப் பிடிக்காது.

## வளையல் விற்ற படலம்

சிவபெருமான் தேவதாரு வனத்தில் வாழும் இருடிகளுடைய கற்பை அளந்து காட்டும்பொருட்டு அழகிய வேடமெடுத்து, பிட்சாபாத்திரத்துடன் தேவதாரு வனத்திற்குச் சென்று பிச்சை எடுத்தார். இருடி பத்தினிகள் பிச்சையிடுவதற்காக வெளியே வந்தபோது சிவபெருமானின் பேரழகைக் கண்டு மயங்கிக் காம வசப்பட்டனர். சிவபெருமானும் மோகித்து, கருமமே கர்த்தா என்று பிதற்றும் மீமாஞ்சகலரது செயலை உலகத்தார்க்கு உணர்த்தி விட்டு மறைந்தருளினார்.

இருடிகள் தமது மனைவிமார்களின் நிலையைக் கண்டு அவர்களது கற்பைப் பங்கப்படுத்தியவர் சோமசுந்தரக்கடவுள் என்று தெரிந்து, “நீங்கள் மனதால் ஒழுக்கம் தவறியமையால் மதுரை நகரத்திலே வைசீகப் பெண்களாகப் பிறக்கக் கடவீர்கள்” என்று சாபமிட்டனர். அப் பெண்கள் வருத்தமுற்று, “எங்களின் இச்சாபம் எப்போது நீங்கும்” என்று கேட்டனர். அதற்கு இருடிகள், “மதுரை நகரத்திற்கு அரசராகிய சோமசுந்தரக்கடவுள் வந்து உங்களது கைகளைத் தொட்டதும் இச்சாபம் நீங்கும்” என்றார்கள்.

அப்பெண்கள் மதுரை நகரில் வைசீகப் பெண்களாகப் பிறந்து கன்னிப்பருவத்தை அடைந்தனர். அப்போது ஒருநாள் அப்பெண்கள் வசிக்கும் தெருவுக்குச் சிவபெருமான் ஓர் அழகிய வளையல் வியாபாரியாக உருவெடுத்து வளையல்களை விற்றுக்கொண்டு வந்தார். அப்பெண்கள் வளையல் வாங்குவதற்காக வந்தபோது அழகிய வளையல்களை சிவபெருமான் அவர்களது கையைத் தொட்டு

போட்டமையால் அவர்களது சாபம் நீங்கியது. அதன் பின் சிவபெருமான் மறைந்தருளினார். மறைந்த வணிகரான சிவபெருமான் அப்பெண்களும் ஏனைய மக்களும் காண ஒளிப்பிழம்பாகத் தோன்றி கோவிலினுள்ச் சென்றார். எல்லோரும் அக்காட்சியைக் கண்டு அதிசயித்தனர். அப்பெண்களுக்குச் சிவபெருமான் கையைத் தொட்டு வளையலிட்டமையால் அவ் வைசீகப்பெண்கள் எல்லோரும் கருவுற்று ஏராளமான புதல்வர்களைப் பெற்றனர். அப் புதல்வர்கள் வலிமையும், அறிவும், ஞானமும் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள்.

கொடுப்பவனும் சிவன். எடுப்பவனும் சிவன். இதை உணர்பவர்கள் என்றும் மிகழ்ச்சியுடன் வாழ்வர்.

## பழியஞ்சின படலம்

சிவபெருமான், திருக்கைலாய மலையிலே ஆலமரநிழலிலே உமாதேவியாரைத் தனது திருத்தொடையின் மீது இருத்தி வைத்திருக்க, உமாதேவியார் அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தார். சிவபெருமான் போக குருவாக எழுந்தருளி, நந்தி முதலிய கணநாதர்களுக்கும், சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கும் சிவதர்மங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது முருகனுக்குப் பால் கொடுத்து வளர்ந்த பெண்கள் அறுவரும் முறைப்படி வந்து, “எம்பெருமானே, எமக்கு அட்டமாசித்திகளை உபதேசித்து அருளல் வேண்டும்” என்று பணிவுடன் கேட்டனர். அப்போது சிவபெருமான் தனது மடியில் அமர்ந்திருக்கும் பார்வதிதேவியைச் சுட்டிக் காட்டி, “எனது மனைவியாக பார்வதிதேவி, எங்கும் நிறைந்த பராசக்தியாவாள். சக்தியின் உருவமானவள். அட்டசித்திகள் அவளது ஏவல்களைச் செய்பவர்கள். இவளை சிந்தித்தீர்களானால், ‘இவள் உங்களுக்கு அட்டமாசித்திகளையும் தருவாள்” என்று கூறி எட்டுச் சித்திகளையும் அவர்களுக்கு உபதேசித்தருளினார். அவர்கள் முன் செய்த ஊழ்வினைப் பயனால் அதை மறந்து விட்டனர். அதை உணர்ந்த சிவபெருமான் அவர்களைக் கோபித்து, “நீங்கள் பட்ட மங்கை என்னும் திருத்தலத்தில் ஆலமரத்தடியில் கருங்கல்லாக மாறிக் கிடக்கக் கடவீர்கள்” என்று சபித்தார். அதனால் மனம் கலங்கிய அவ் ஆறு பெண்களும், “சுவாமி இவ் சாபம் எப்போது, எப்படி நீங்கும் என்று கேட்கச் சிவபெருமான், ஆயிரம் வருடங்கள் சென்ற பின் நாம் அத்தலத்திற்கு வந்து உங்களது சாபத்தை நீக்கி உங்களுக்கு அட்டமாசித்திகளையும் உபதேசிப்பேன்” என்றார்.

ஆயிரம் வருடங்கள் அப்பெண்கள் கருங்கல்லாகக் கிடந்தனர். ஆயிரம் வருடங்கள் கழிந்தபின் சிவபெருமான் ஓர் ஆசாரிய வடிவங் கொண்டு வந்து அக்கருங்கற்களைப் பார்த்ததும் அக்கருங்கற்கள் பெண்களாக மாறின. அப்பெண்கள் அவ் ஆசாரியாரை வணங்க, அவர் அவர்களின் தலையில் கை வைத்து எட்டுச் சித்திளையும் உபதேசித்தார். அதன்பின் அப்பெண்கள் உமதேவியாரை தியானித்து அச்சித்திகளை உணர்ந்து கொண்டனர். அதன்பின் அவர்கள் ஆகாயமார்க்கமாகச் சென்று திருக்கைலாயமலையை அடைந்தார்கள்.

சிவனின் அனுக்கிரக மிருப்பினும், சிவ வழிபாடு செய்வினும் முன் செய்த வினையை அனுபவித்தே தீரவேண்டும்.

## விடை இலச்சினை இட்ட படலம்

காஞ்சிபுரத்தை ஒரு சோழ அரசன் ஆண்டு வந்தான். அவன் எல்லாச் சிவபக்தர்களையும் விட மேலானவன். அவன் எந்த ஆபரணங்களையும் அணிவதில்லை. சிவசின்னங்களான வீபூதி, உருத்திராக்கம் முதலியவற்றை அணிவான். அவன் சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடல்களை அறிந்து மகிழ்வுற்று அவரைச் சந்திக்க விரும்பியவாறு படுத்துறங்கினான். அப்போது சிவபெருமான் அவனின் கனவில் ஒரு சித்தரைப் போலத் தோன்ற, “மன்னா, நீ இன்று இவுமாறு வேடம் தாங்கி தனித்து வந்து என்னைத் தரிசனம் செய்” என்று கூறி மறைந்தார். உடனே மன்னன் விழித்தெழுந்து யாருக்கும் கூறாமல் புறப்பட்டு வைகை நதிக்கரையை அடைந்தான். அப்போது வைகை நதி பெருக்கெடுத்தோடியது. மன்னன் தான் கோவிலுக்குச் சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்க முடியாது போய்விடும் என்று கலங்கியபோது கனவில் வந்த அந்தச் சித்தர் மன்னனின் அருகில் வந்து பெருக்கெடுத்தோடும் வைகை நதியைப் பார்த்ததும் வைகை நதி வற்றியது. சித்தர் அவனைக் கையிற் பிடித்து அழைத்துச் சென்று சோமசுந்தரப் பெருமானை வணங்கும்படி விட்டார். மன்னன் சோமசுந்தரப் பெருமானையும் மீனாட்சியம்மையையும் வணங்கினான். அப்போது அந்தச் சித்தர், “இன்று உனக்கு நடந்ததைப் பாண்டிய மன்னன் அறிந்தால் உனக்குத் துன்பம் செய்வான்” என்று கூறி அவனை வடக்கு திசை வழியாக அழைத்து வந்து, “உனக்கு நல்ல துணை உண்டாகக் கடவது” என்று கூறி அவனைச் செல்லும்படி கூறித் திரும்பி வந்து, வடக்கு வாசல் கதவைப் பூட்டி, அதில் இடபக் குறிகளைப் பொறித்து தனது விமானத்தில் எழுந்தருளியிருந்தார்.

அதிகாலையில் கோவிற் கதவைத் திறக்க வந்தபோது, கதவில் இடபக்குறி இருப்பதைக் கண்ட பிராமணர்கள் அதிசயித்து அதைக் குலபூடன பாண்டியனுக்குத் தெரிவித்தனர். பாண்டியன் வந்து பார்த்து அதிசயித்து அதை இட்டவர் யார் என்ற நினைவோடு இரவு தரையில் படுத்துறங்கினான். அன்றிரவு பாண்டியனது கனவில் தோன்றிய சோமசுந்தரக்கடவுள்; "பாண்டியனே, என் மீது வைத்த பேரன்பினால் காஞ்சியில் காடெல்லாவற்றையும் வெட்டிக் காளயாக்கிய சோழராசன் என்னைத் தரிசிக்க விரும்பினான். அவனை வடக்கு வாசல் வழியாக அழைத்து வந்து தரிசனம் கொடுத்து விட்டுக் கதவை பூட்டி இடபக்குறியைப் பொறித்தது நான் தான். அவனது பேரன்பு என்னை இவ்வாறு செய்ய வைத்தது" என்று அருளி மறைந்தார். பாண்டியன் அதைக் கேட்டு அதிசயித்து அத்திருவிளையாடலை எல்லோருக்கும் தெரிவித்து மகிழ்ந்தான்.

சிவபெருமான் வேண்டுவர் வெண்டுவதை அளிக்கும் வள்ளன்மை உள்ளவர்.

## தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்

குலபூடன பாண்டியன், தனது மகனாக இராசேந்திர பாண்டியனுக்கு முடி சூட்டி வைத்தான். சிவபெருமான் சோழராஜனை வடக்கு வாசல் வழியாக அழைத்து வந்து காட்சி கொடுத்ததைக் கேள்விப்பட்டு அதிசயித்து, சிவன்மேல் பேரன்பு கொண்ட அந்த சோழ அரசனைச் சந்தித்து நட்புக் கொள்ளவிரும்பி, விலை மதிக்க முடியாத தங்க வைரமுத்து அணிகளை அனுப்பி வைத்தான். இருவரும் பெரும் நண்பர்களாயினர். அதனால் சோழன் தனது மகளைப் பாண்டியனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். இதையறிந்த இராசேந்திர பாண்டியனின் தம்பியாகிய இராசசிங்கன் என்பவன் சோழனின் மகள் மீது கொண்ட காதலால் காஞ்சிபுரத்திற்கு வந்து வஞ்சித்து அவளைத் திருமணம் செய்து கொண்டான்.

சோழ அரசன் தனது மருமகனின் ஆசைக்காகப் பாண்டிய நாட்டைப் பிடிக்க நினைத்து மதுரையை நோக்கிப் படைகளை நகர்த்தினான். அதையறிந்த இராசேந்திர பாண்டியன் சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்தை அடைந்து அவரை வணங்கி, "எம்பெருமானே, முன்பு நீர் அழைத்து வந்து தரிசனம் கொடுத்த சோழன் என்னோடு நட்புப் பூண்டு சீர்வரிசைகள் தந்து நண்பனானான். இப்போது விரோதித்து படையெடுத்து வந்திருக்கிறான். இது நியாயமானதா?" என்று வணங்கினான். அப்போது ஆகாயத்தில் இருந்து; "பாண்டியனே நீ நாளைக்கு உனது சேனைகளை அழைத்துச் சென்று யுத்தம்

செய். வெற்றி உனக்குக் கிடைக்கும்" என்று ஓர் அசரீரி வாக்கு கேட்டது. அதனால் மகிழ்வடைந்த பாண்டியன் அரசமாளிகையை அடைந்தான்.

மறுநாட்காலை போர் தொடங்கியது. இருபக்கத்துச் சேனைகளும் மூர்க்கத்தனமாக மோதின. மோதல் நண்பகலானதும் உக்கிரமடைந்தது. வெயிலின் கொடுமையால் இரு அரசபடைகளும் அவதிப்பட்டன. தாக மிகுதியால் படைவீரர்கள் மயங்கத் தொடங்கினர். அப்போது சிவபெருமான் பாண்டியனின் சேனையின் நடுவே ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைத்துப் பாண்டிய மன்னனின் வீரர்களுக்கு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தார். அதனால் களைப்பு நீங்கப் பெற்ற பாண்டிய வீரர்கள் உக்கிரமாகப் போராடிச் சோழப்படையை விரட்டியடித்தனர். அவர்கள் சோழனையும் அவனது மருமகனான இராசசிங்கனையும் கைது செய்து கொண்டு வந்து பாண்டியன் முன் நிறுத்தினர். அப்போது பாண்டியன் சோமசுந்தரக்கடவுளை வேண்டி, "நான் இவர்களை என்ன செய்வது" என்று மனமுருகிக் கேட்டான். அப்பொழுது "பாண்டியனே நீ தருமவான். நீ விரும்பியபடி செய்" என்றொரு அசரீரி வாக்கு வானில் தோன்றியது. அதைக் கேட்ட பாண்டியன் சோழ மன்னனுக்குச் சில யானைகளும், குதிரைகளும், ஆபரணங்களையும் பிறவும் கொடுத்து அனுப்பி வைத்தான். தனது தம்பிக்கு கொடுக்கப்பட்ட திரவியங்களைக் குறைத்து விட்டு அவனை வேறாக விலக்கி வைத்தான்.

சிவபக்தர்கள் என்பதற்காகச் சிவன் இறங்குவர். அதைப் பயன்படுத்தித் தீய செயல்கள் செய்வோர் தண்டிக்கப்படுவர்.

## இராச வாதப் படலம்

பாண்டிய நாட்டிலே திருப்பூறுணம் என்ற சிவனது திருக்கோவிலுக்கு இந்திரன் உட்பட பல தேவர்கள் அங்கு வந்து சிவனுக்குப் பூசை செய்து தமக்கு வேண்டிய வரங்களைப் பெற்று வந்தனர். அக்கோவிலில் பொன்னையாள் என்ற ஒரு நடனமாது சிவனைப் போற்றி வணங்கி நடனமாடிச் சிவனை மகிழ்விப்பாள். அத்துடன் சிவனடியார்களைச் சிவனென நினைத்து அவர்களுக்குச் சேவை செய்வாள். அத்துடன் அவர்களுக்கு உணவளித்த பின்பே தானுண்டும் வந்தாள். அவள் தேவ மகளிரை விட அழகானவள். பேரழகு வாய்ந்தவள்.

அவளுடைய அன்பை உலகிற்குக் காட்ட விரும்பிய சிவபெருமான், தனது திருவுருவைச் செய்யும்படி பொன்னையாளைப் பணித்தார். அதைக் கேட்டு மகிழ்ந்த பொன்னையாள் அதற்கான வேலைகளை ஆரம்பித்தபோதும் சேரும் பொருட்களெல்லாம் சிவனடியார்க்கு அமுது கொடுக்கவே போதுமானதாக இருந்தது. அதனால் கவலை கொண்ட பொன்னையாள் சிவபெருமானைத் திருவுருவாகச் செய்ய முடியவில்லையே என்று கவலைப்பட்டாள்.

ஒருநாள் அவளது குறையைத் தீர்க்க விரும்பிய சிவபெருமான் நண்பகல் வேளை அவளது வீட்டுக்குச் சென்று வெளியே நின்றார். சிவனடியார்கள் மதிய உணவை உண்டுவிட்டுச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது வெளியே வந்த பொன்னையாளின் பணிப்பெண் சித்தரின் வேடத்துடன் வந்திருந்த சிவபெருமானை சிவனடியாரென்று நினைத்து உள்ளே வருமாறு அழைத்தாள். அவர் மறுத்து பொன்னையாளை வந்து அழைத்துச் செல்லும்படி சொன்னார். அதைக் கேட்ட பொன்னையாள் வெளியே வந்து சித்தரின் வேடத்திலிருந்த சிவபெருமானை சிவனடியாரென நினைத்து அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

“பேரழகு வாய்ந்த பெண்ணே, உனது அழகிய உடல் மெலிந்துள்ளது. ஏனென்று நான் அறியலாமா” என்று கேட்டார்.“சுவாமி சிவபெருமான், தனது திருவுருவைச் செய்யும்படி பணித்தார். வரும் பொருட்கள் சிவனடியார்களைப் பேணவே போதாதிருக்கிறது. இந்த நிலையில் திருவுருவைச் செய்ய முடியவில்லையே என்ற கவலையால் என்னால் சரியாக உண்ண முடிவதில்லை” என்றாள். “பெண்ணே சிவனடியார்களின் பசியைத் தீர்ப்பது சிவனது பசியைத் தீப்பது போன்றது. நல்ல காரியம் செய்கிறாய். அதற்கு உதவவே நான் வந்தேன். உன்னிடமுள்ள பித்தளைப் பாத்திரங்களையும், ஈயப் பாத்திரங்களையும் கொண்டு வா” என்றார். உடனே அவள் தன்னிடமிருந்து வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெண்கலம், தகரம் முதலியவற்றால் செய்யப்பட்ட அனைத்துப் பாத்திரங்களையும் அச்சித்தர் முன் கொண்டு வந்து வைத்தாள். சிவபெருமான் அவற்றின் மீது திருநீற்றை இட்டு விட்டு, “இவற்றை தீயிலிடு. விடிந்ததும் அவை பொன்னாகிவிடும். அதன்பின் சிவனது திருவுருவைச் செய்” என்றார். அதற்கு பொன்னையாள், “சுவாமி இன்று இரவு இங்கு தங்கி இரவு உணவை உண்ணுங்கள். பின் அவை பொன்னான பின் செல்லுங்கள்” என்றாள். அதைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் தான் மதுரையில் வாழும் சித்தர் என்று சொல்லி மறைந்துவிட்டார்.

வந்தவர் சோமசுந்தரக்கடவுள் என உணர்ந்த பொன்னையாள் அப்பாத்திரங்களைத் தீயிலிட அவை பொன்னாக மாறின. அப்பொன்னால் அழகிய திருவுருவொன்றைச் செய்வித்தாள். அதன் அழகில் மயங்கிய பொன்னையாள் அதைக் கட்டித் தழுவி முத்தமிட்டு மகிழ்ந்த பின் பிரதிட்டை செய்தாள். அத்திருவுருவத்தின் தலையில் பொன்னையாள் கட்டித் தழுவியபோது அவளது நகம்பட்ட குறி இப்போதும் காணப்படுகிறது. அத்துடன் ஏமநாதர் என்ற காரணக்குறியும் உள்ளது. அவள் அதன் பின் இரதோற்சவத்தை நடத்திச் சில நாளில் முத்தியடைந்தாள்.

சிவன் மீது அன்பு கொள்ளும் எவரையும் தனது அடியவர்கள் என்று நினைத்து அவர்களைக் கொண்டு செயற்கரிய செயல்களையும் செய்வித்து அவர்களின் சிவபக்தியை உலகிற்குக் காட்டுவது சிவனின் இயல்பாகும்.

## சோழனை மடுவில் வீட்டிய படலம்

இராசேந்திர பாண்டியனின் வழித்தோன்றலான சுந்தரேசபரதசேகரப் பாண்டியன் சோமசுந்தரப் பெருமானின் பெரும் பக்தன். அவன் தனது வருமானத்தின் பெரும்பகுதியைச் சிவனடியார்களின் நல்வாழ்விற்கும், சோமசுந்தரக்கடவுளின் திருவிழாக்களுக்கும் செலவு செய்து விட்டுச் சோமசுந்தரக்கடவுள் தன்னையும் தனது நாட்டையும் பாதுகாப்பார் என்று எண்ணித் தனது படையைப் பெருக்காதிருந்தான். அவனிடம் பத்துத் தேர்களும், நூறு யானைகளும், பத்தாயிரம் போர்வீரர்களும் மட்டுமே இருந்தன.

ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்ற சோழன், பாண்டியனிடம் பெரும்படை இல்லாததை அறிந்து பாண்டிய நாட்டைக் கவரப் பெரும்படையுடன் சென்றான். அதை அறிந்த பாண்டியன் மிக்க துயரத்துடன் அதைச் சோமசுந்தரப் பெருமானுக்கு முறையிட்டான். அப்போது; “பாண்டியனே, கவலை கொள்ளாதே நாம் வந்து உனக்காக யுத்தம் செய்வோம்” என்று ஓர் அசரீரீ வாக்கு வானில் எழுந்தது.

அது கேட்டு மகிழ்ந்த பாண்டியன் வீராவேசத்துடன் போர்க்களம் சென்றான். சிவபெருமானது கருணையினாலே பாண்டியனது சிறிய சேனை பெரும் சேனையாகச் சோழனுக்குத் தெரிந்தது. சோமசுந்தரக்கடவுள் ஒரு வேடனின் வடிவமெடுத்து ஒரு வேலைக் கையில் ஏந்திப் பாண்டியனது சேனைக்குத் தலைமைதாங்கினார். அதைக் கண்டு கோபங்கொண்ட சோழன், “ஆயிரம் குதிரைக்கோர் சேவகன் வந்துள்ளேன்”

என்றான் திமிராக. அதற்குச் சிவபெருமான், "அனைத்துக் குதிரைகளுக்கும் ஒற்றைச் சேவகன் நான்" என்று சொல்லி வேலை எறிய ஆயத்தமானார். அதைக் கண்ட சோழன் இந்த வேலாயுதத்தைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. அது என்னைக் கொன்றுவிடும் என்று நினைத்துத் தப்பி ஓடினான். தப்பி ஓடியதும் சோழன் வேடனைக் காணாததால் பாண்டியனைத் துரத்திக் கொண்டு வரும் வழியில் மதுரை நகருக்கு அருகில் இருந்த ஓர் ஆழமான மடுவில் (கிடங்கில்) பாண்டியன் விழுந்தான். பின்னால் துரத்தி வந்த சோழனும் அதில் விழப் பாண்டியனைச் சிவபெருமான் தனது திருக்கரத்தால் தூக்கி வெளியே விட்டார். சோழன் அதில் அமிழ்ந்து இறந்து போனான். அதன் பின் பாண்டியன் அவனது நாட்டைக் கைப்பற்றி அவனது திரவியங்களையும், படைகளையும் தனதாக்கிக் கொண்டான்.

சிவபெருமான் தன்மீது அன்பு கொண்டு தன்னையே கதி என்று நம்பியிருப்பவர்களுக்கு உண்டாகும் பெருந்த துன்பங்களைக் கூட நீக்குவான்.

## உலவாக்கோட்டை அருளிய படலம்

மதுரை நகரிலே வேளாளர் குலத்திலே அடியார்க்கு நல்லான் என்றொரு விவசாயி வாழ்ந்து வந்தான். அவனது மனைவி தருமசிலை. இருவரும் சிவனை வணங்கிச் சிவபூசை செய்தபின் சிவனடியார்க்கு உணவு அளித்து மகிழ்ந்தனர். நல்லான் பெரும் விவசாயியாதலால் அவனுக்கு விளைச்சல் பெருகிக் கொண்டிருந்தது. அதனால் நல்லானும் தருமசிலையும் வெகுமகிழ்வுடன் அடியவர்களுக்கு மூன்று வேளையும் உணவளித்து வந்தனர். நல்லானினதும் அவனது மனைவியினதும் சிவத்தொண்டை உலகோர்க்கு அறிவிக்க விரும்பிய சிவபெருமான் அவர்களின் வயல்களில் விளையும் தானியங்களின் விளைச்சலைக் குறைத்தார். அதனால் நல்லான் தனது நிலபுலன்களையும் தோப்புக்களையும் விற்று சிவனடியார்களுக்கு உணவளித்து வந்தார். அதனால் அவரது பொருள் முற்றாக தீர்ந்துவிட்டது. சிவனடியார்களுக்கு தொடர்ந்து உணவளிக்க முடியாமையால் நல்லானும் அவனது மனைவியும் சிவபெருமானை வணங்கி விட்டுத் தற்கொலை செய்யச் சென்றனர். அப்போது, "அன்பனே, பயம் கொள்ளாதே வீட்டுக்குச் சென்று பார். உனது வீட்டில் அரிசிக்கோட்டை ஒன்றை வைத்துள்ளேன். அது அள்ள அள்ளக் குறையாது. வீட்டுக்குச் சென்று உனது அன்னதானப் பணியைத் தொடர்ந்து செய்" என்றொரு வாக்கு அசரீரியாக வந்தது. அதைக் கேட்டு மகிழ்ந்த நல்லானும் அவனது மனைவியும் வீட்டுக்குச் சென்று அங்கு சிவபெருமானால் குவிக்கப்பட்ட அரிசி மலையைக் கண்டு அதிசயித்தனர். நல்லான்

தினமும் சிவனின் சொற்படி அவ் அரிசிக்கோட்டையைத் தூபதீபங் காட்டிப் பூசித்துவிட்டு அதிலிருந்து அரிசியைப் பெற்று சிவனடியார்க்கு அமுது படைத்து வந்தான்.

சிவன் அடியவர்களின் உறுதியைப் பிறர்க்குக் காட்டச் சோதனை செய்வார். அது துன்பமாக இருந்தாலும் இறுதியில் நன்மை பயக்கும்.

## மாமனாக வந்து வழக்கு உரைத்த படலம்

மதுரையில் தனபதி என்றொரு வணிகன் இருந்தான். அவனது மனைவி சுசீலை. இருவரும் திருமணம் செய்த பல வருடங்கள் கழிந்தும் பிள்ளைப் பாக்கியமில்லாததால் பெருங்கவலை கொண்டனர். அதனால் தனபதி தனது மருமகனைப் பிள்ளையாக ஏற்று மனைவியின் துணையுடன் வளர்த்து வந்தான். தனது தங்கை வருந்திப் பெற்ற பிள்ளையைத் தனக்குத் தந்ததை உணராது தனது மனைவி மேல் கொண்ட காம மயக்கத்தால் அவளை மதியாது புறக்கணித்து வந்தான். இதனால் மனம் நொந்த அவனது தங்கை: "நீ என்னை வேறாக நினைத்து ஒதுக்குகிறாய். நான் உனக்குப் பிள்ளையைத் தந்தேன் என்று நினைக்காது நீ பிள்ளையைப் பெற்றவன் போல நடந்து கொள்கிறாய். பிள்ளை இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்" என்று ஏசினாள். அதனால் மனம் வருந்திய தனபதி தனது சொத்தெல்லாவற்றையும் தனது மருமகனுக்குக் கொடுத்துவிட்டு மனைவியுடன் காட்டுக்குத் தவம் செய்யப்போனான்.

தனபதி நீண்ட காலம் திரும்பி வராமையால் தனபதியின் பெற்றோர் வழக்குப் போட்டு மருமகனின் சொத்தைக் கவர்ந்து விட்டார்கள். அதனால் தளபதியின் தங்கை தளர்வுற்று மகனையும் அழைத்துக் கொண்டு சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்திற்கு சென்று அழுதழுது முறையிட்டாள். அப்போது சிவபெருமானின் அருளினாலே அவளுக்கு நித்திரை வந்தது. அப்பொழுது சிவபெருமான் அவளது கனவிலே ஒரு பிராமணராக வந்து, "பெண்ணே, நீ நாளை தருமசபைக்குச் சென்று முறையிடு. நாம் அங்கு வருவோம்" என்றார். அதைக் கேட்டு அகமகிழ்ந்த தங்கை தருமசபைக்குச் சென்று முறையிடச் சபையோர் அவளது பேச்சைச் செவிமடுக்காது துரத்தினர்.

அப்போது சிவபெருமான் தனபதியின் வேடந்தாங்கி தருமசபைக்கு வந்தார். தனபதியைக் கண்ட தருமசபையினர் ஆச்சரியமடைந்து தாம் பிழையாகச் சொன்ன தீர்ப்பை அறிந்து மனக்கிலேசமடைந்தனர். தனபதியாக வந்த சிவபெருமான், "தருமசபையினரே, மதியிழந்து நேர்மையீனமாக நடந்தால் உலகம் எப்படி வாழும்.

இவன் எனது மருமகன். எல்லாச் சொத்தையும் நான் அவனுக்கு முறைப்படி எழுதிக் கொடுத்ததை எப்படி உங்களால் பறித்து இன்னொருவருக்குக் கொடுக்க முடியும். இது நீதியா…? நியாயமா முறையா. இதுவா பாண்டியனின் நீதி" என்று கோபங் கொண்டு ஏசினார்.

அதைக் கேட்ட எதிராளிகள், "தனபதிச் செட்டியார் இவரல்ல. இவர் யாரோ"? என்றார்கள். அப்பொழுது தனபதிச் செட்டியாராக வந்த சிவபெருமான் கைகொட்டிச் சிரித்து, அவர்களது தாய், தந்தையார், உறவினரின் பெயர்களையும், அவர்களது விபரங்களையும் விரிவாக எடுத்துரைத்தார். அதைக் கேட்ட தருமசபையினர்; "இவர் தான் உண்மையான தனபதிச் செட்டியார் என்று உணர்ந்து வழக்கை தனபதிச் செட்டியாரின்
மருமகனுக்குச் சார்பாகத் தீர்த்துவிட்டு பாண்டிய மன்னன் இதையறிந்தால் தண்டிப்பான் என்ற பயத்தில் ஒவ்வொருவராக வெளியேறினர். அப்போது, தனபதியாக வந்த சிவபெருமான் மறைந்தருளினார். அதை அறிந்த பாண்டிய மன்னன் சிவனது கருணையை உணர்ந்து கோவிலைப் பொன்னால் புதுப்பித்ததோடு தனபதியின் மருமகனை அழைத்துக் கௌரவப்படுத்தினான்.

சிவனடியார்க்குக் கேடு செய்யச் சிவன் அனுமதிக்கமாட்டான்.

## வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்

வரகுணபாண்டியன் ஒருநாள் வேட்டைக்குச் சென்று திரும்பும்போது இருண்டு விட்டது. அப்போது பாதை ஓரத்தில் படுத்துறங்கிய பிராமணனைப் பாண்டியன் ஏறி வந்த குதிரை மிதித்துக் கொன்று விட்டது. இதை அறியாத பாண்டியன் அரண்மனைக்குச் சென்றுவிட்டான். பிராமணன் இறந்த செய்தியைக் கேட்ட பிராமணனின் உறவினர்கள் பிராமணனது உடலை அரண்மனைக்கு கொண்டு சென்று நீதி கேட்டனன். பாண்டியன் அவர்களுக்கு வேண்டிய பொன்னைக் கொடுக்க அவர்கள் திருப்தியடைந்து பிராமணனது ஈமைக்கிரியை செய்து முடித்தனர். இருந்தபோதும் பாண்டியனைப் பிரமகத்தி பிடித்தது. அதனால் பாண்டிய மன்னன் துன்பப்பட்டான். அதை நீக்கும் வழிகளைப் பிராமணரிடத்துக் கேட்டான். அவர்கள்; "மகாராசாவே, நீ விரதம் நோற்று தினமும் சோமசுந்தரக்கடவுளை வணங்கி ஆயிரத்தெட்டு முறை அவரின் நாமத்தை ஓது. இவ்வாறு பத்துத் தினங்கள் செய்தால் அத்தோசம் நீங்கும்" என்றார்கள்.

வரகுணபாண்டியன் பிராமணரின் சொற்படி சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்தை அடைந்து பிராமணர் செய்யச் சொன்னவற்றை விதிமுறை தவறாது செய்து முடித்தான். அப்போது; ‘‘உனது வழிபாட்டின் மகிமையால் நாம் மகிழ்வடைந்தோம். சோழ அரசன் விரைவில் உன்னுடன் போர் தொடுப்பான். போரிலே தோற்ற அவன் புறங் காட்டி ஓடுவான். அப்போது அவன் எனது தலமான திருவிடை மருதூரை அடைவான். நீயும் அங்கு அவனைத் துரத்திக் கொண்டு வருவாய். அப்போது உனது பிரமகத்தித்தோசம் நீங்கும்.” என்ற அசரீரீ வாக்கு வானில் இருந்து அவனுக்குக் கேட்டது. அதைக் கேட்டு மகிழ்வடைந்த பாண்டியன் தனது அரண்மனைக்குத் திரும்பினான்.

சிலகாலம் செல்லச் சோழமன்னன் பாண்டிய நாட்டைக் கைப்பற்ற எண்ணிப் படையெடுத்தான். அதையறிந்த பாண்டியமன்னன் பெரும்படையுடன் சென்று சோழப்படையைச் சிதறடித்தான். படைகள் சிதறியோடச் சோழ மன்னன் தப்பியோடினான். அவனைத் துரத்திச் சென்ற பாண்டியன் அவன், திருவிடை மருதூரைச் சென்றடைந்தான். அங்கு சென்றதும் பிரமகத்தித்தோசம் தானாகவே நீங்கியது. அதனால் மகிழ்ந்த பாண்டியன் கோவிலுள்ச் சென்று சிவனை வணங்கினான். அப்போது; ‘‘பாண்டிய மன்னனே உன்னை விட்டு நீங்கிய பிரமகத்தித்தோசம் கிழக்கு வாசலில் நிற்கிறது. அதனால் மேற்கு வாசலால் சென்று மதுரையை அடை” என்ற அசரீரீ வாக்கு வானில் எழுந்தது. அதனால் மகிழ்ந்த பாண்டியன் சோமசுந்தரக்கடவுளை வணங்கி, “எம்பெருமானே சிவலோகத்தைப் பற்றி பலரும் பலவாறு கூறுகின்றனர். அதன் அழகை எனக்குக் காட்டியருளல் வேண்டும்” என்று பிராாத்தித்தான். அதனால் அவனது அன்புக்காட்பட்ட சிவபெருமான் அவனது ஆசையை பூர்த்தி செய்வதற்காகச் சிவலோகத்தை அங்கு வரவழைத்தார். பின்பு நந்திதேவரை அழைத்து, “எனது பக்தனாகிய வரகுணபாண்டியனுக்குச் சிவலோகத்தை சுற்றிக் காட்டு” என்றார்.

நந்திதேவர் அவனை அழைத்துச் சென்று சிவலோகத்தில் உள்ள நதிகளையும், ஓடைகளையும். அமுதவாவிகளையும், பொற்றாமரைத் தடாகங்களையும், திருக்கோபுரங்களையும், திருமாளிகைகளையும், திக்குப்பாலகரின் இடங்களையும், பிரமா விட்ணு உட்படத் தேவர்களின் இருப்பிடங்களையும் காட்டினார். பின்பு சிவனடியார் கூட்டத்தைப் பிரம்பினால் சுட்டிக் காட்டினார். பின்பு அவனை அழைத்துச் சென்று சிவபெருமானின் முன் விட்டார். பாண்டியன் சிவபெருமானையும் உமாதேவியாரையும் கண்குளிரக்கண்டு வணங்கினான். பின்பு சிவலோகம் மதுரையை விட்டுச் சென்றது.

சிவனடியார்களின் ஆசைகள் எதுவாக இருந்தாலும் சிவபெருமான் அதைத் தீர்த்து வைக்காது விடமாட்டார்.

## திருமுகம் கொடுத்த படலம்

பாணபத்திரன், வரகுணபாண்டியன் கூறியபடி அரசசபையில் இசை பாடாது சோமசுந்தரப் பெருமானது கோவிலிலேயே இசை பாடி வந்தான். அதனால் வருமானமில்லாததால் மிகவும் வறுமைப்பட்டடான். அவனின் வறுமையை அறிந்த சிவபெருமான் பாண்டியனது திரவியசாலையில் திரவியங்களைத் திருடி வந்து கொடுத்துக் கொண்டிருந்தார். சில காலஞ் செல்லச் செல்ல சிவபெருமான் பொருளேதும் கொடுக்காது விட்டு விட்டார். அதனால் அவன் பெரும் வறுமைப்பட்டுப் பசியோடு உறங்கிக் கொண்டிருந்தபோது சிவபெருமான் அவனது கனவிலே தோன்றி , "இதுவரை காலமும் நான் கதவு மூடப்பட்டு, உட்காப்பும், வெளிக்காப்பும், கயல்குறியும் இட்ட கதவுகளை நான் யாரும் அறியாமலும் இடப்பட்ட பொறிகளை அகற்றாமலும் எடுத்து உனக்குத் தந்து வந்தோம். அதனால் பாண்டியன் சந்தேகம் கொள்வான். தனது ஊழியர்களைச் சந்தேகிப்பான். அது தவறு. அதனால் என் மீது அன்பு வைத்திருக்கும் சேரமானுக்கு ஓர் கடிதம் எழுதித் தருகிறேன்" என்று சொல்லிக் கடிதத்தை எழுதி வைத்துவிட்டு மறைந்து போனார். அதைக் கண்டு அதிசயித்த பாணபத்திரன் அக் கடிதத்தை எடுத்துக் கொண்டு சேரமானிடம் சென்றான். அன்றிரவு சேரமானின் கனவில் தோன்றிய சிவபெருமான்; "எனது அன்புக்குரியவன் ஒருவனிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பியுள்ளேன். அவனுக்கு வேண்டியளவு பொருள் கொடுப்பாயாக" என்று கூறினார்.

விழித்தெழிந்த சேரமான் தான் கனவில் கண்டதை நினைத்து அதிசயித்துத் தனது ஏவலாளர்களை அழைத்து மங்கள வாத்தியங்களுடன் சென்று பாணபத்திரனை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். அரச ஊழியர்கள் மங்கள வாத்தியங்களுடன் வீதி வீதியாகத் தேடிச்சென்று ஒரு தண்ணீர்ப் பந்தலில் பாணபத்திரன் இருக்கக் கண்டு அவனை யானை மீது ஏற்றி மங்கள வாத்தியங்கள் முழங்க, அழகிய பெண்கள் ஆடிப்பாட, மக்கள் தம் வீடுகளுக்கு முன் பூரண கும்பம் வைத்து வரவேற்க அரண்மனைக்கு அழைத்து வந்தனர். மன்னன் அவனை ஆரத்தழுவி மாலைகள் அணிவித்து தனது பரிவாரம் புடைசூழ அவனைத் தனது திரவியசாலைக்கு அழைத்துச் சென்று, திரவியசாலையைத் திறந்துவிட்டு; "உமக்குத் தேவையான அனைத்தையும் எடுத்துக் கொள்ளும்" என்றான். பாணபத்திரன பேராசை கொள்ளாது திரவியங்களை எடுத்துக் கொண்டு சோமசுந்தரப்பெருமானின் சன்னிநிதிக்கு வந்து அவரை வணங்கினான்.

# பலகையிட்ட படலம்

முன்பு முப்பொழுது மட்டும் அதாவது காலை, மதியம், மாலைவேளைகளில் சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிய பாணபத்திரன் சேரமானிடம் வேண்டியளவு திரவியம் பெற்ற பின்பு கால நேரமின்றி பலமுறை திருக்கோவிலுக்குச் சென்று பதிகங்களைப் பாடி மகிழ்ந்தான். ஒரு நாள் இரவு சோமசுந்தரக்கடவுள் முத்துச் சிவிகையில் நள்ளிரவில் வலம் வந்தபோது அவ்வேளையிலும் சென்று பதிகம் பாட நினைத்துக் கோவிலுக்குச் சென்றான். அப்போது சிவன் பாணபத்திரனின் பக்தியை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காகப் பெருமழை பொழிவித்தார். கடுங்காற்றும் வீசியது. வெள்ளம் ஓடியது. அதற்குள் நின்று பாணபத்திரன் பதிகம் பாடினான். அவனது கைகளும் கால்களும் விறைத்தன. உடல் குளிரால் நடுங்கியது. அவனது கால்கள் சேற்றுள்ப் புதைந்தன. அப்படியிருந்தும் அவள் யாழை மீட்டிப் பாடிக் கொண்டிருந்தான். அதைக் கண்டு இரங்கிய சிவபெருமான், ஒரு பலகையை வானில் இருந்து நிலத்தில் போட்டு "பாணபத்திரா, இப்பலகை மேல் ஏறி நின்று பாடு" என்று அருளினார். அதன்படி பாணபத்திரன் அப் பலகையின் மேல் ஏறி நின்று பதிகத்தைப் பாடி முடிக்க மழை நின்றது. அதைக் கேள்விப்பட்ட மதுரையை ஆண்ட வரகுணபாண்டியன் பாணபத்திரனைச் சபைக்கு அழைத்து வந்து சிவபெருமான் கொடுத்த பலகையில் இருத்தி, "இவரே எனது சிவபெருமான்" என்று அவனை வணங்கினான்.

சிவபெருமான் அடியவர்களை உலகிற்கு இனங்காட்டுவதற்காக சோதனைக்குட்படுத்தி அவர்கள் தன் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துவான்.

# இசை வாது வென்ற படலம்

வரகுணபாண்டியன் இறந்த பின்பு அவனது மகனான இராச இராச பாண்டியன் முடிசூட்டப்பட்டான்.அவன் காம உணர்வுகள் அதிகம் உள்ளவன் அவனுக்கு மனைவியர் பல. அத்துடன் காமக்கிழத்திகளும் பலர். காமக்கிழத்திகளில் ஒருத்தி அவ்வரசனால் மிகவும் விரும்பப்படுபவள். அவள் பாடுவதில் வல்லவள். பாணபத்திரனது மனைவியும் பாடுவதில் வல்லவள். இதனால் யார் திறமையானவர் என்ற போட்டி இருவருக்குமிடையே நிலவியது. அதனால் காமக்கிழத்தி பாணபத்திரனின் மனைவியை வெல்லக்கூடிய ஒரு பாடகியைத் தேடி அவளைக் கொண்டு பாணபத்திரனின் மனைவியின் செருக்கை அடக்க எண்ணினாள். அதனைப் பாண்டியனுக்குத் தெரிவித்தாள்.

மன்னன் ஈழநாட்டில் இருந்து ஒரு பாடகியை அழைத்து வந்து; “நீ பாணபத்திரனின் மனைவியை போட்டிக்கு அழை. அவள் மறுத்தால் உனக்கே வெற்றி. அதனால் நாளைக்கு தயாராக வா” என்றான். பின் பாணபத்திரனின் மனைவியை அழைத்து, “என்னோடு இசைபாட இந்நாட்டில் யாராவது இருக்கிறார்களா? என்று சவாலிட்டுச் சென்றுள்ளாள். நீ அதை ஏற்றுப் பாடுவாயா?” என்று கேட்டான். அதற்குப் பாணபத்திரனின் மனைவி, “மன்னா, சோமசுந்தரக்கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடுவதே எனது விருப்பம். சோமசுந்தரக்கடவுளின் கிருபை எனக்கிருக்கிறது. அதனால் அவளை எதிர்த்துப் பாடச் சம்மதிக்கிறேன்” என்றாள்.

மறுநாள் அரசசபைக்கு வந்த இருவரும் நடுவர்கள் முன்நிலையில் பாடி முடித்தனர். “நடுவர்கள் பாணபத்திரனின் மனைவி தான் நன்றாகப் பாடினாள்” என்றனர். ஆனால் அரசன், ‘ஈழத்தில் இருந்து வந்த பாடகி தான் நன்றாகப் பாடினாள்’ என்றான்.

மறுநாள் சபையில் இருவரும் பாடினர். அப்போது பாண்டியனுக்காக நடுவர்கள் நீதிக்கு மாறாகக் கூறினர். அதைக் கேட்டு கவலையடைந்த பாணபத்திரனின் மனைவி; “நாம் இருவரும் ஒரு முறை சோமசுந்தரப்பெருமானின் சன்னிதியில் போய்ப் பாடுவோம்” என்றாள். அதற்கு அரசன் சம்மதித்தான். இருவரும் சோமசுந்தரப்பெருமானின் சன்னிதிக்கு வந்தனர். அவனும் நடுவர்களும், இசைவிற்பன்னர்களும் வந்தனர். சோமசுந்தரப்பெருமான் நடுவர்களில் ஒருவராக வந்திருந்தார். இருவரும் பாடி முடித்ததும் அரசன் சிவனின் அருளால் மனமாற்றமடைந்து, “பாணபத்திரனின் மனைவியே வென்றாள்” என்று அறிவித்தான். நடுவராக வந்த சிவபெருமான், “அற்புதம், அற்புதம்” என்றவாறு மறைந்து சென்றார். சிவபெருமான் திருவிளையாடலை எண்ணி மக்களும் மன்னனும் அதிசயித்தனர்.

## பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்த படலம்

வைகை ஆற்றுக்கு தெற்கே குருவித்துறை என்ற ஊரில் தேவகுருவான பிரகஸ்பதி தவம் செய்து கொண்டிருந்தார். அவ்வூரில் சகலன் என்றொரு வேளாளன் இருந்தான். அவனுக்குப் பன்னிரண்டு புத்திரர்கள். அவர்கள் செல்வச் செருக்கினால் ஒழுக்கமில்லாது வாழ்ந்தனர். சகலன் அவர்களைக் கண்டிக்காது அவர்களின் செயல்களை மெச்சி பாராட்டுவான். அதனால் அவர்களின் அட்டகாசங்களுக்கு அளவில்லாமல் இருந்தது. சிலகாலம் செல்ல அவர்களது தந்தையும் தாயும் இறந்து விட்டனர்.

அவர்களை ஆதரிக்க எவரும் முன்வராததால் அவர்கள் காடுகளில் அலைந்தபோது வேடுவர்களின் நட்பு ஏற்பட்டதால் அவர்களுடன் சேர்ந்து வசித்தனர். காட்டுள் தவம் செய்து கொண்டிருந்த பிரகஸ்பதியைக் கண்ட அவர்கள், அவரைக் கல் வீசித் தாக்கினர். அதனால் கோபமுற்ற பிரகஸ்பதி, "வேளாளராக நீங்கள் மண்ணை உழுவதை விட்டு வேட்டையாடித் திரிகிறீர்கள் . அதனால் பன்றியாகப் பிறந்துமண்ணை உழுவீர்கள்" என்று சபித்தார். அவர்கள் நடுநடுங்கி, "சுவாமி எமக்கு எப்போது இச்சாபத்திலிருந்து விடுதலை கிடைக்கும்" என்று இரந்து கேட்டனர்.

அதற்குப் பிரகஸ்பதி; "சோமசுந்தரக் கடவுள் பன்றியாகவந்து பாலூட்டும்போது நீங்கும்" என்றார்.

பன்னிருவரும் அக் காட்டில் வசிக்கும் பன்றிகளின் தலைவியின் மனைவியின் வயிற்றில் கருவாகிப் பிறந்தனர். ஒரு நாள் இராசராச பாண்டியன் அக்காட்டுக்குள் நுழைந்து மிருகங்களைக் கண்டபடி வேட்டையாடினான். அதனால் பன்றிகள் ஓடிச்சென்று தனது அரசனான பன்றியிடம் முறையிட்டன. தலைமைப்பன்றி பெரும் பன்றிப்படையுடன் வந்து பெரும்போர் செய்தது. அதை இராசராசனாலும் அவனது படைவீரர்களாலும் தடுக்க முடியவில்லை. அரசபடையினர் பலர் பன்றிகளின் தாக்குதலால் இறந்தனர். தலைமைப்பன்றி இராசராசனுடன் நேரடியாக மோதியது. அதை எதிர்க்க முடியாத அரச படைகள் இரும்புக்கம்பிகளால் பன்றிகளைத் தாக்கிக் கொன்றார்கள். தலைப்பன்றி உக்கிரமாகப் போராடியபோது அது இராசராசனைக் கடுமையாகத் தாக்கியது, இராசராசன் ஒரு யானையை அதன் மீது ஏவ, அவ் யானையை பன்றிகளின் அரசன் கொன்றது. பின் இராசராசனது குதிரையின் வாலை வாயால் கௌவக் குதிரை குப்புற விழுந்தது. இராசராசன் குதிரையில் இருந்து குதித்துத்தப்பி அருகில் இருந்த இரும்புக்கம்பியால் அதை அடித்துக் கொன்றான். அதன் பின் பன்றி அரசனின் மனைவி கோபங்கொண்டு அரசனின் படையை உக்கிரமாக எதிர்த்து அரசனுடன் போராடியது. பெண் பன்றியைக் கொல்லல் அரச தர்மம் அல்ல என்று எண்ணிய இராசராசன் அக்காட்டில் வாழும் வேடவர்களின் தலைவனான சருச்சரன் என்பவனை அழைத்து அப் பெண்பன்றியைக் கொல்லுமாறு கட்டளையிட்டான். அவன் நீண்ட நேரம் போராடி அப் பெண்பன்றியைக் கொன்றான். தலைமைப்பன்றி விழுந்த இடம் பன்றிமலை என அழைக்கப்படுகிறது. அவ்விடத்தில் சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும் முத்திபெறும் பொருட்டுத் தவம் செய்வது வழக்கம்.

இதை அறிந்த இருடிகள், அகத்திய முனிவரிடஞ் சென்று அவரை வணங்கி, "சுவாமி, இங்கு முனிவர்கள், யோகிகள், ஞானிகள் வந்து தவஞ் செய்வதற்கான காரணம் என்ன?" என்று வினாவினர்.

“ரங்க வித்தியாதரன் என்ற காந்தருவன் புலத்திய முனிவருடைய தவத்திற்கு இடையூறு செய்வதற்காக இசையுடன் பாட்டுப்பாட முனிவர் கோபங்கொண்டு அவனைப் பன்றியாக மாறும்படி சபித்தார். அவன் நடுநடுங்கிச், “சுவாமி, தெரியாத்தனமாகப் பாடி உங்கள் தவத்தைக் குலைத்துவிட்டேன். இதிலிருந்து மீள்வதெப்படி” என்று அழுதான். அப்போது புலத்திய முனிவர் சொன்னார்; “இராசராசன் வந்து உன்னைக் கொல்வான். அப்போது இச்சாபம் நீங்கும்” என்றார். இறந்து கிடந்த பன்றி அக்காந்தர்வனிடம் உடலைப் பெற்றது. அதனால் இவ்விடத்தைச் சோமசுந்தரக்கடவுள் மிகவும் விரும்புகிறார். அதனால்தான் முனிவர்களும், யோகிகளும், தவசிகளும் இவ்விடத்தில் தவம் செய்கின்றனர்” என்றார் அகத்தியமுனிவர்.

தாய்பன்றி இறந்தமையால் அது ஈன்ற பன்னிரண்டு குட்டிகளும் பசியால் வருந்தித் தவித்தன. அப்போது அக்காட்டில் மீனாட்சியம்மையுடன் கூடி விளையாடிக் கொண்டிருந்த சோமசுந்தரப்பெருமான் அவற்றின் அழுகுரல் கேட்டு இரக்கமுற்றுத் தாய்பன்றியாக மாறிவந்து பாலூட்டினார். பின்பு அவர்களது சாபத்தை நீக்கியருளி அவர்களது முகத்தைப் பன்றிமுகமாகவும், உடலை மனித உடலாகவும் மாற்றிவிட்டு மறைந்தருளினார்.

சிவனது திருவிளையாடல்கள் கணக்கில் அடங்காதவை அவற்றை எண்ணிப் பார்க்க எவராலும் முடியாது.

## பன்றிக் குட்டிகளை மந்திரியாக்கிய படலம்

பன்றிமுகக் குமாரர்கள் பன்னிரண்டு பேரும் சகல கலைகளிலும் வல்லவர்களாகிப் பன்றிமலையிலே வசித்து வந்தனர். சோமசுந்தரக்கடவுளின் பற்றற்றநிலையை உலகிற்கு உணர்த்த விரும்பிய மீனாட்சியம்மை, “பொல்லாத விலங்கும், மிகவும் அசுத்தமான விலங்குமான பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்ததன் காரணம் என்ன?” என்று கேட்டார்; “சகல உயிர்களும், சகல பொருட்களும் சமமானவை. உயர்ந்தவை. கீழானவைகளல்ல என்பதை உலகோர்க்கு உணர்த்தினோம். என்னிடம் பால் குடித்தமையால் அவர்கள் சகலகலாவல்லவர்கள் ஆவார்கள். அவர்கள் பாண்டிய மன்னனின் மந்திரிகளாகிப் பின் எமது கணங்களுக்குத் தலைவர்களாவர்” என்றார்.

அன்றிரவு சோமசுந்தரப் பெருமான் பாண்டியனின் கனவில் தோன்றி “பன்னிரு பன்றிமுகக் குமாரர்களையும் மந்திரிகளாக்கு” என்றார். அதைக்கேட்ட பாண்டியன்

அவர்களை அழைத்து வந்து மந்திரிகளாக்கிக் கௌரவித்தான். அவர்கள் பல காலம் பாண்டியனுடைய மந்திரிசபையில் இருந்து நல்ல பல சேவைகளையாற்றினர். அதன்பின் சிவலோகம் சென்று கணங்களுக்குத் தலைவர்களாகினர்.

சிவபெருமான் எல்லா உயிர்களையும் சமமாக நோக்கி, அன்பு செய்யும் தருமவான்.

## கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலம்

இராசராச பாண்டியனின் மறைவுக்குப் பின் அவனது மகனான சுகுணபாண்டியன் முடிசூட்டப்பட்டான். அவனது ஆட்சிக்காலத்தில் ஒருவன் தருமங்கள் பெருமளவு செய்தபோதும்சில பாவங்களையும் செய்தான். அதனால் அவன் கரிக்குருவியாகப் பிறந்தான். அக்கரிக்குருவியைக் காகம் முதலிய வலிய பறவைகள் கொத்தியும், தாக்கியும் கொடுமைப்படுத்தியமையால் அது வெகுதூரம் பறந்து சென்று ஒரு மரத்தில் இருந்தது. அப்போது அம்மரநிழலில் இருந்த துறவியொருவர் வருவோர் போவோருக்கு இவ்வாறு சொன்னார்; "மக்களே தலங்களில் சிறந்தது மதுரை. தீர்த்தங்களிலே சிறந்தது பொற்றாமரை வாவி. லிங்கங்களுள் சிறந்தது சொக்கலிங்கம். எல்லா மூர்த்திகளிலும் விசேட மூர்த்தி சோமசுந்தர மூர்த்தி. ஆதலால் அவனை வணங்கினால் நற்பேறு கிடைக்கும்" என்று போதித்தார்.

அதை அம்மரத்தில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த கரிக்குருவி பொற்றாமரை வாவிக்குச் சென்று அதில் நீராடிச் சோமசுந்தரப் பெருமானது சந்நிதிக்குச் சென்று அவரை வணங்கி, "எம்பெருமானே, எனக்கேன் இத்துன்பம்" என்று அழுதது. அதை இரக்கத்துடன் பார்த்த சிவபெருமான் இரங்கி மார்க்கண்டேயமுனிவருக்கு உபதேசித்த மரணத்தை அகற்றும் மிருத்தியுன்சய மந்திரத்தை உபதேசித்தார். அதனால் கரிக்குருவி மோட்சமடைந்தது.

## நாரைக்கு முத்தி கொடுத்த படலம்

பாண்டியநாட்டில் தென்திசையில் உள்ள ஊரொன்றில் தாமரைத்தடாகம் ஒன்று இருந்தது. பல மாதங்களாக மழைபெய்யாததால் அக்குளம் வற்றிப்போய் விட்டது. அக்குளத்தை நம்பி வாழ்ந்த நாரை ஒன்று குளம் வற்றியதால் அந்த நாரை இடம்பெயர்ந்து சென்று இன்னொரு குளத்தை அடைந்தது. அந்தக் குளத்தில் இருடிகள்

நீராடினர். அக்குளத்தில் இருந்த மீன்கள் இருடிகளின் சடையில் பாய்ந்து புரண்டு விளையாடுவதைப் பார்த்து இந்த மீன்கள் இருடிகளோடு விளையாட என்ன தவம் செய்தனவோ என நினைத்து அம்மீன்களைப் பிடித்து உண்ணக்கூடாது என்று எண்ணிப் பட்டினியாக இருந்தது. இருடிகள் சோமசுந்தரப் பெருமானது பெருமைகளைக் கூறுவதை நாரை கேட்டது. உடனே அது மதுரைக்குப் பறந்து சென்று பொற்றாமரை வாவியில் நீராடிவிட்டு சோமசுந்தரப் பெருமானின் கோவிலை அடைந்து அவரை அன்புடன் நினைத்துக் கொண்டிருந்தது. இவ்வாறு அந்நாரை பதினைந்து தினங்கள் பொற்றாமரை வாவியில் நீராடிவிட்டுச் சோமசுந்தரப் பெருமானை வணங்கியது. பதினைந்தாவது நாள் பசியின் கொடுமையால் பொற்றாமரை வாவியில் துள்ளி விளையாடும் மீன்களைப் பிடித்து உண்ண நினைத்தது. பின் அந்த எண்ணத்தை மாற்றி சோமசுந்தரப் பெருமானின் சன்னிதியை அடைந்து அவரையே தியானித்துக் கொண்டிருந்தது.

அதனால் மனம் இரங்கிய சோமசுந்தரக் கடவுள் நாரையின் வடிவாக அருகில் வந்து, "உனக்கு என்ன வரம் வேண்டிச் சோமசுந்தரரை வணங்குகிறாய்" என்று கேட்டது. நாரை சொன்னது, "இப்பிறவி நீங்க வேண்டும்" பொற்றாமரை வாவியில் மீன் இருப்பதால் எம் இனத்தார் அதைப் பிடித்து உண்டு பாவத்தைத் தேடுகின்றனர். அதனால் பொற்றாமரை வாவியுள் ஒருபோதும் மீன்கள் வாழக்கூடாது என்றது. உடனே அந்நாரை சிவபெருமானின் உருவெடுத்து, "உனது எண்ணம் நிறைவேறும். நீ விரைவில் சிவலோகத்திற்கு வந்து கணங்களோடு இருப்பாயாக" என்று சொல்லி மறைந்தார். அன்றிலிருந்து பொற்றாமரை வாவியினுள் எந்தவிதமான நீரில் வாழும் உயிரினங்களும் இருப்பதில்லை.

சிவன் மனிதர்களுக்கு மட்டுமல்ல. தன்னை வணங்கும் சிற்றுயிர்களுக்கும் வரமளிப்பவன்.

## திருவாலவாயான படலம்

சுகுணபாண்டியன் இறந்தபின் பாண்டியநாட்டை வழிவழியாக இருபத்திரண்டு பாண்டிய மன்னர்கள் அரசாண்டனர். அவர்களில் ஒருவனான கீர்த்தி விபூடணன் அரசாளும் காலத்தில் பிரளயம் ஏற்பட்டது. அதனால் சமுத்திரங்கள் யாவும் பொங்கியெழுந்து நாட்டிற்குள் வந்தன. நாடு அழிந்துவிட்டது. சேமசுந்தரக்கடவுளின் விமானமும், மீனாட்சியம்மனின் கோவிலும் இடபமனையும், யானைமனையும், நாகமலையும், பசுமலையும், பன்றிமலையும் அழியாதிருந்தன. வெள்ளம் வற்றியபின் சிவபெருமான் உலகத்தை முன்போலப் படைத்து, சந்திரன், சூரியன், அக்கினி எனற மூன்றையும் படைத்தருளினார்.

அப்போது வமிசசேகர பாண்டியன் சோமசுந்தரப் பெருமானின் திருக்கோவிலைச் சுற்றி ஒரு நகரமமைத்து நல்லாட்சி செய்து வந்தான். மக்கள் தொகை பெருக நகரை விஸ்தரிக்க எண்ணிய பாண்டியன் சோமசுந்தரக் கடவுளைப் பிரார்த்திக்க அவர் பாம்புடன் பிரசன்னமாக அதைப் பார்த்து, பாண்டிய நாட்டின் எல்லைக்களைக் காட்டு" என்று சொல்ல பாம்பு அவரை வணங்கி, "சுவாமி, நான் காட்டும் எல்லைக்குட்பட்ட பகுதியை எனது பெயரால் அழைக்க வேண்டும்" என்றது. அதைச் சோமசுந்தரக்கடவுள் ஏற்றுக் கொண்டார். பின் பாம்பு நகரின் எல்லைகளைக் காட்டிவிட்டுச் சோமசுந்தரக்கடவுளின் கையில் சேர்ந்தது. அதன் பின் பாம்பு காட்டியபடி தெற்குப்பகுதிக்குத் திருப்பரங்குன்றமும், கிழக்குப் பகுதிக்குத் திருப்பூவணமும், வடக்குப் பகுதிக்கு இடபமலையும், மேற்குப் பகுதிக்குத் திருவேடகத்தையும் எல்லையாகக் கொண்டு சுற்றுமதில் கட்டி அதற்கு ஆலவாய் பதியென்றும், நகரத்திற்கு ஆலவாய் என்றும் பெயர் வைத்து, மாடமாளிகைகள், கோபுரங்கள், குடியிருப்புக்கள் என்பவற்றைக் கட்டி நீதியாக அரசாண்டான்.

உலகம் அழியக்கூடியது. கடவுள் அழிந்த உலகை மீண்டும் கட்டியெழுப்புவார். பின் யாவற்றையும் படைப்பார்.

## சுந்தரபேதம் பெய்த படலம்

வமிசசேகரபாண்டியன் அரசாளும் காலத்தில் விக்கிரமசோழன் பாண்டியநாட்டைக் கைப்பற்றுவதற்காகப் பல தேசத்து அரசர்களின் படைகளையும், சேர்த்துக்கொண்டு பாண்டியநாட்டுக்குள் நுழைந்தான். அதனால் கவலை கொண்ட பாண்டியன் சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்திற்குச் சென்று அவனது பெரும் சேனையோடு எமது சிறிய சேனை மோதினால் நாடு கைப்பற்றப்பட்டுவிடும். அதை நடக்காது செய்யவும்" என்று வணங்கினான். அப்போது, "கலங்காதே மன்னா, துணிவுடன் போருக்குச் செல். உனக்கு வெற்றி உண்டாக வழிவகுப்போம்" என்றொரு அசரீரி வாக்கு வானில் எழுந்தது. மன்னன் மகிழ்ந்து துணிவுடன் போருக்குச் சென்றான். சோழனது பெரும்படை பாண்டியது சிறிய படையைச் சிதறடித்தது. அதனால் செருக்கடைந்த சோழன் வெற்றி முழக்கம் செய்து சங்கை ஊதினான்.

அப்போது சோமசுந்தரக்கடவுள் ஒரு வேடனின் வடிவம் பூண்டு வந்து பாண்டியனது சேனாதியாகிச் சுந்தரேசர் என்ற நாமத்தை அம்பில் பொறித்து சோழனின் படைமீது தாக்குதல் நடத்தினர். அவர் விட்ட ஓர் அம்பு நூற்றுக்கணக்கான வீரர்களைக் கொன்று குவித்தது. அதைக்கண்டு அதிசயித்த சோழன் அம்பு ஒன்றைத் தடுத்துநிறுத்தி அதில் பொறிக்கப்பட்டிருந்த சுந்தரேசர் என்ற பெயரைப் பார்த்துத் திகைத்து, இது சிவபெருமான் எய்யும் அம்பு. அவர் பாண்டியனின் சேனாதிபதியாக வந்தமையால் எம்மால் வெல்ல முடியாதென்று நினைத்துப் பின்வாங்கினான். அதைக்கண்ட வடதேசத்து அரசர்கள். “சோழனே, பின்வாங்காதே. நாம் வெற்றியடைவோம்” என்றனர். அதைக் கேட்டுத் தைரியமடைந்து சோழன் மீண்டும் போர்செய்தான். அதனால் கோபங்கொண்ட வேடவடிவில் வந்த சிவபெருமான் பலநூறு அம்புகளை விட்டார். அவை சோழதேசத்துப் படைகளை அழிக்க, சோழன் பயந்து ஓடிவிட்டான். வெற்றியடைந்த பாண்டியன் சோமசுந்தரக்கடவுளுக்கு நன்றி செலுத்தினான்.

நம்பிக்கைதான் சிவபெருமான். நம்பியவர்கள் துணிவுடன் செயலைச் செய்தால் அதில் வெற்றிபெறச் சிவபெருமான் முன்னின்று உதவுவார்.

## சங்கப்பலகை தந்த படலம்

வமிசசேகரபாண்டியனது ஆட்சிக்காத்திலே, பிரமதேவர் காசியில் பத்து அசுவமேத யாகம் செய்துவிட்டுத் தனது மனைவியார்களான சரசுவதி, சாவித்திரி, காயத்திரி ஆகிய மூவருடன் நீராடுவதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றார். அப்பொழுது இனிமையான ஒரு கீதம் கேட்டது. அதன் இனிமையில் மெய்மறந்த சரசுவதி அதைக் கேட்டு ரசித்தாள். பிரமதேவரும் ஏனைய இரு மனைவியரும் கங்கையில் குளித்துவிட்டு வெளியேறியபோது சரசுவதி வந்து; “என்னை விட்டவிட்டு எப்படி நீங்கள் கங்கையில் நீராடலாம்” என்று கடுங்கோபத்துடன் கேட்டாள்.

“உன்னில் குற்றத்தை வைத்துக்கொண்டு என்னைக் கோபித்தமையால் நீ எண்ணிக்கையில்லாத மனிதப் பிறவிகளை எடுக்கக் கடவாய்” என்று சபித்தார்.

அதைக்கேட்டுப் பயந்த சரசுவதி, “என்னை மன்னித்துச் சாபவிமோசனம் தாருங்கள்” என்று கெஞ்சினாள். அதனால் மனம் மாறிய பிரமதேவர், “உன்னுடன் நாற்பத்தெட்டுப் புலவர்கள் கூட இருப்பர். அவ்வேளை சோமசுந்தரக்கடவுள் ஒரு புலவராக வந்து அருளுவார்” என்றார்.

நாற்பத்தெட்டுப் புலவர்களும் பூமியில் பிறந்து சகல சாத்திரங்களையும் கற்று விற்பன்னராகி நாட்டுக்கு நாடு சென்று அங்குள்ள புலவர்களைத் தர்க்கித்து வென்று, மதுரையை நோக்கி வந்தனர். வழியில் சோமசுந்தரப்பெருமான் அவர்களைச் சந்தித்து, "மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சோமசுந்தரப்பெருமானைச் சென்று வணங்குங்கள்" என்று கூறி மறைந்தார்.

புலவர்கள் அதிசயித்துச் சோமசுந்தரப்பெருமானின் பெருமையை உணர்ந்து அங்கு சென்று வணங்கிவிட்டு அரசனான வம்சசேகர பாண்டியனைச் சந்தித்தனர். இவர் சோமசுந்தரப்பெருமானின் திருக்கோவிலுக்கு வடமேற்குத் திசையில் ஒரு மண்டபம் அமைத்து அவர்களை அதில் இருத்தினான். அது பாண்டிய நாட்டில் வாழ்ந்த புலவர்களுக்குப் பொறாமையை உண்டுபண்ணியது. அவர்கள் அகங்காரத்துடன் அவர்களை வாதிற்கு அழைத்துத் தோற்றனர். வேற்று நாட்டுப் புலவர்களும் வாதிட்டுத் தோற்றனர். அதனால் அம் மண்டபம் தமிழ்ச்சங்க மண்டபமாயிற்று.

சங்கப் புலவர்கள் வழங்கும் தீர்ப்பைப் பலர் விமர்சித்ததால் அவர்கள் சோமசுந்தரப்பெருமானை வணங்கி, "பெருமானே, புலமையை நாம் அளப்பதால் பிரச்சினைகள் வருகின்றன. அதனால் அதை அளக்க ஒரு கருவி தந்தருளல் வேண்டும்" என்று வணங்கினர். அப்பொழுது சிவபெருமான் ஒரு புலவரின் வடிவமெடுத்த அங்கு ஒரு பலகையுடன் வந்து; "இப்பலகை ஒரு முழுச் சதுரமுடையது. சந்திரனிலும் பார்க்கப் பிரகாசமானது. மந்திரவலிமை உடையது, தேவைக்கேற்றபடி வளர்ந்து இருக்கை கொடுக்கும் வல்லமை உடையது. இதை உங்கள் அளவு கோலாகப் பயன்படுத்துங்கள்" என்றார். புலவர்கள் அவரை வணங்கி ஆசிபெற்றுப் பலகையை வாங்கினர்.

அதன் பின்பும் ஒவ்வொரு புலவர்களும் தாம் தாம் எழுதிய செய்யுள்கள் தான் சிறந்தலையென வாதிட்டுக் கலகம் செய்தனர். அதையறிந்த சோமசுந்தரக் கடவுள் ஒரு புலவராக உருவமெடுத்து வந்து வாதிட்ட புலவர்களுக்கு மெய்ப்பொருளை உணர்த்திவிட்டுத் தாமும் ஒரு புலவராகச் சங்கப் பலகையில் அமர்ந்து தீர்ப்புக் கூறினார்.

ஆணவம்தான் எல்லாவற்றிற்கும் காரணம். பக்கச்சார்பு பெரும் கலகங்களை உருவாக்கும். பற்றற்ற நடுவுநிலைமையே சிறப்பானது. அது தவறும்போது உரியவர் தண்டிக்கப்படுவார்.

# தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்

வம்மிசசேகரபாண்டியன் வயோதிபமடைந்ததும், தனது மகனான வம்மிச சூடாமணி பாண்டியனுக்கு முடிசூட்டி வைத்தான். அவன் சோமசுந்தரக் கடவுளுக்கு விதம் விதமாக மாலைகளை அணிந்து அழகுபார்ப்பதற்காக நந்தவனம் அமைத்தான். அத்துடன் தனியாகச் சம்பகவனமும் அமைத்தான். தினமும் அவருக்குச் சம்பகமாலை அணிவித்து அழகுபார்த்து அவருக்குச் 'சம்பகசுந்தரர்' என்று பெயரும் சூட்டி வணங்கி வந்தான். அதனால் சம்பக பாண்டியன் என்ற சிறப்புப்பட்டப் பெயர் அவனுக்கு உண்டானது.

ஒரு நாள் சம்பக பாண்டியன் பட்டத்தரசியுடன் தனித்திருக்கையில் ஒரு நறுமணம் மூக்கைத் துளைத்தது. அந் நறுமணம் எங்கிருந்து வருகின்றதென்று ஆராய்ந்தபோது அது அரசியின் கூந்தலில் இருந்து வருவது தெரிந்தது. அதனால் ஆச்சரியமடைந்த பாண்டியன் அந்த நறுமணத்தின் இயல்புபற்றி புலவர்கள் செய்யுளில் பாடினால் ஆயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப்படுமென்று முரசுமூலம் அறிவித்தான்.

மதுரையில் தருமி என்றொரு வறிய சிவபக்தன் வாழ்ந்து வந்தான். அவன் சோமசுந்தரக் கடவுளின் சன்னிதானத்திற்குச் சென்று அவரை வணங்கி தான் மிகவும் ஏழ்மையுடையவன். அதனால் சண்பக பாண்டியன் அறிவித்த ஆயிரம் பொன்னைத் தனக்குப் பெற்றுத்தருமாறு வேண்டினான். அவனுக்கு இரங்கிய சோமசுந்தரப் பெருமான் மன்னனின் உளக்கருத்தை அறிந்து ஒரு செய்யுளை எழுதித் தருமியிடம் கொடுத்தார்.

தருமி தமிழ்ச்சங்கப் புலவர்களிடம் அச் செய்யுளைக் கொடுக்க அவர்கள் மிகவும் நல்ல செய்யுள் என்று மன்னனிடம் கொடுத்தார்கள். மன்னன் மனம் மகிழ்ந்து ஆயிரம் பொன்னையும் தருமிக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அதைச் சங்கப்புலவர்கள் தருமிக்குக் கொடுக்கும்போது நக்கீரர் என்ற புலவர் தடுத்தார். அதனால் மனம் வருந்திய தருமி சோமசுந்தரப் பெருமானின் சன்னிதிக்குச் சென்று நடந்தவற்றைக்கூறி; "எம்பெருமானே, நீர் எழுதிய செய்யுள் பிழையானது என்கின்றனர். அதனால் அவமானம் உமக்கன்றி எனக்கில்லை" என்று கவலையோடு முறையிட்டான்.

அதைக்கேட்ட சோமசுந்தரப் பெருமான் தருமியிடம் தான் கொடுத்த ஏட்டை வாங்கிக்கொண்டு தமிழ்ச் சங்கத்திற்குச் சென்று; "நான் எழுதிய செய்யுளைப் பிழையென்று சொன்னவர் யார்? என்ன பிழை என்று சொல்லு" என்றார்.

உடனே நக்கீரன் எழுந்து நான் தான் சொன்னேன். ஒரு பெண்ணின் கூந்தலின் வாசம் இயற்கையானது அல்ல, செயற்கையானது. நறுமணமுள்ள மலர்களாலும், வாசனைத் திரவியங்களாலும் வருவது" என்றார். அதற்குப் புலவர் சிவபெருமானின் ஒரு பகுதியாகிய அம்மையின் கூந்தலும் நறுமணமில்லாததா?" என்று கேட்டார்.

"அதுவும் அத்தன்மையது தான்" என்றார் நக்கீரர். உடனே புலவர் நெற்றிக் கண்ணைத்திறந்து காட்டினார். அதற்கும் அஞ்சாத நக்கீரர், "நீர் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் நீர் எழுதிய செய்யுள் பிழையானது. உலகில் உள்ள தெய்வப் பெண்களது கூந்தலும் செயற்கையான வாசனையுடையது. ஏன் சிவனின் அம்மையின் கூந்தலும் அத்தகையதே" என்றார். சிவபெருமான் மிக்க சினமடைந்து தனது நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதிலிருந்து வெளிப்பட்ட வெப்பத்தைத் தாங்கமுடியாது நக்கீரன் பொற்றாமரை வாவியில் சென்று விழுந்தார்.

சில சமயங்களில் நீதியை நிலைநாட்டச் சிவபெருமான் கொடிய தண்டனையையும் கொடுப்பார். இவை அவரின் திருவிளையாடலாகும்.

## கீரனைக் கரையேற்றிய படலம்

நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்பட்ட அக்கினியின் வெப்பத்தைத் தாங்க முடியாது பொற்றாமரை வாவியில் விழுந்த நக்கீரனது வெப்பம் குறையாமையால் அவர் பெருந்துயருற்று வருந்தினர். அதைக்கண்ட சங்கப்புலவர்கள் சோமசுந்தரப் பெருமானின் சன்னிதானத்தை அடைந்து, "எம்பெருமானே நக்கீரர் அறியாமையால் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று இரந்தனர்.

நக்கீரரும் தனது பிழையை உணர்ந்து, "கைலைபாதி காளத்திபாதி அந்தாதி" யைப் பாடினார். அதனால் மகிழ்ந்து இரங்கிய சிவபெருமான் பொற்றாமரை வாவிக்கரைக்கு மீனாட்சியம்மையுடன் சென்று நக்கீரனது கையைப் பிடித்துக் கரை சேர்த்தார். அதனால் நக்கீரர் கோபப் பிரசாதத்தையும், பெருந்தேவ பாணியுந், திருவெழுக்கூற் திருக்கையும் பாடிச் சிவபெருமானைத் துதித்தார். பின் நக்கீரர் பாண்டியன் அறிவித்த ஆயிரம் பொன்னையும் தருமிக்கு வழங்கினார்.

உலகநீதியைக் காக்கச் சிவனடியார்களையும் தண்டித்து உணர்த்துபவர் சிவபெருமான்.

# கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

சங்கப்புலவர்களது கூட்டத்தோடு மீண்டும் சேர்ந்த நக்கீரர் தினமும் பொற்றாமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரப் பெருமானை வணங்கி வந்தார். "நக்கீரனுக்கு இலக்கணம் சரியாகத் தெரியவில்லை. இது வாழா நிலைச்சொல். இது வழுச்சொல் என்பது புரியாதிருக்கின்றான். அதனால் நக்கீரனுக்கு இலக்கணம் கற்பிக்க வேண்டும். அதை யாரைக் கொண்டும் கற்பிக்கலாம்" என்று மீனாட்சியம்மையைக் கேட்டார் சிவபெருமான்.

"முன்பு, எமது திருமணத்தின்போது வடநிலம் தாழ்ந்தது. தென்நிலம் உயர்ந்தது. அப்போது உமக்குச் சமமானவன் அகத்தியன் என்று சொல்லி அகத்தியனுக்கு சகல இலக்கணங்களையும் கற்பித்து அனுப்பினீர்கள். அவன் இப்போது பொதிய மலையிலே வீற்றிருக்கிறான். அவனை அழைத்துக் கற்பியுங்கள்" என்றாள் மீனாட்சியம்மை.

அதைக்கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அகத்தியரை அழைத்து, "நக்கீரனுக்கு முறைப்படி இலக்கணத்தைக் கற்பித்துவிடு" என்று வேண்டினார். அகத்தியர் நக்கீரனுக்கு இலக்கணம் கற்பித்து முடித்த பின் அவரை ஆரத்தழுவி ஆசனத்தில் இருத்தி வேண்டிய வரங்களைக் கொடுத்தருளினார்.

அகத்தியர் சென்றபின் உமாதேவியார் சிவபெருமானைக் கேட்டார்; "சுவாமி, நக்கீரனுக்கு நீங்கள் கற்பிக்காது அகத்தியரைக் கொண்டு கற்பிப்பதன் காரணம் என்ன?"

"உமையே, எம்மை நித்தமும் வழிபடுவோருக்கும், நமக்குப் பொருளைக் கொடுப்போர்க்கும், நம்மிடத்துப் பொறாமை இல்லாதவர்களுக்கும் கற்பிப்பதே தருமமாகும். நக்கீரன் நம்மிடத்துப் பொறாமை கொண்டமையால் தான் அகத்தியரைக் கொண்டு கற்பித்தோம்" என்றார்.

அன்போடு உறவாடினாலும் மனம் சுத்தமில்லாதிருந்தால் கற்ற வித்தைகள் நினைவுக்கு வராமற் போய்விடும்.

# சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்

சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பது பேரும் தாம் தாம் வல்லவர்கள் என்று கூறித் தமக்குள்ச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். கலகத்தைத் தீர்க்கமுடியாமையால் அவர்கள் சோமசுந்தரப் பெருமானிடம் குறையிட்டுத் தமது கலகத்தைத் தீர்த்து வைக்குமாறு கோரினர்.

சிவபெருமான் அவர்கள் முன் ஒரு புலவராகத் தோன்றி வந்து, “புலவர்களே, இந்த நகரத்திலே தனபதி என்ற பெயருடைய வணிகன் ஒருவன் வாழ்கிறான். அவனது மனைவி குணசாலினி. அவர்கள் செய்த தவப்பயனாக அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்திருக்கிறான். அவனது பெயர் உருத்திரசர்மன். ஐந்து வயதுடைய அவன் ஊமை. அவனை அழைத்துச் சென்று சங்கப்பலகைகளில் இருத்தி உங்களது செய்யுள்களைக் கூறுங்கள். அவன் சிறந்த செய்யுள் எதுவென்று உணர்த்துவான். அதுவே சிறந்த செய்யுளாகப் பெரியோரால் மதிக்கப்படும்” என்றார். அதையறிந்த பாண்டிய மன்னன் “அவன் ஊமை என்கிறீர்கள். அவனால் எப்படி எமது பாடல்களுக்கான விளக்கத்தைப் பெற முடியும். அதைத் தெரிந்து கொள்வது எப்படி” என்று கேட்டான்.

அதற்குச் சிவபெருமான்; அந்த ஊமைப்பிள்ளை சொல்லாளமும், பொருளாளமுமுள்ள ஒரு செய்யுளைக் கேட்கும்போது மெய்சிலிர்த்து கண்களல் கண்ணீரைப் பெருக்கி, மகிழ்வுறும். அப்போது உங்கள் கலகம் தீரும்” என்றார்.

புலவர்கள் அந்த ஊமைச்சிறுவனை மேளதாளங்களுடன் அழைத்துச் சென்று சங்கப்பலகையில் இருத்தித் தத்தமது செய்யுள்களைச் சொன்னார்கள். நக்கீரரும், கபிலரும், பரணரும் தத்தமது செய்யுள்களைச் சொன்னபோது அப்பிள்ளை மகிழ்வுடன் மெய்சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து தனது தலையை அசைத்துப் பாராட்டுச் சைகைகளைச் செய்தது. அதனால் புலவர்களது கர்வம் அடங்கியது.

சிவபெருமான் புலமைமிக்க சிவனடியார்கள் செருக்குற்றால் அவர்களின் செருக்கை அகற்றப் புரிந்தும் புரியாத செயல்களைச் செய்வார். இது அவரது திருவிளையாடல்.

# இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

சம்பகபாண்டியன் சிவபதமடைந்த பின்பு அவனது வழிவந்த பதினைந்து பேர் பாண்டிய நாட்டை முறைப்படி ஆண்டனர். அவர்களின் பின் குசேலபாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டான். குசேலபாண்டியன் இலக்கண இலக்கியங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றவன். அதனால் சங்கப் பலகை நீண்டு அவனுக்கு இடங்கொடுத்தது. அவனது கல்வியின் பெரும் சிறப்பைக் கேள்விப்பட்ட கபிலரின் நண்பரான இடைக்காடர் தமிழ்ச் செய்யுள் ஒன்றை எழுதிவந்து அதை மன்னனிடம் வாசித்துக் காட்டினார். மன்னன் பொறாமையினால் அதைக் கண்டு கொள்ளாதவன் போல இருந்தான் அது இடைக்காடருக்கு அவமானமாக இருந்தமையால் அவர் கோபித்துக் கொண்டு சோமசுந்தரப் பெருமானின் சன்னிதிக்குச் சென்று மனம் வருந்த முறையிட்டுவிட்டு சோமசுந்தரப் பெருமானின் வடக்கே ஓர் ஆலயத்தைக் கண்டு அங்கே சென்று இருந்தார். இடைக்காடரது மனச்சோர்வைப் போக்க எண்ணிய சிவபெருமான் உமாதேவியாருடன் அங்கு வந்தார். சங்கப்புலவர்களும் அங்கு வந்தனர்.

பொழுது விடிந்ததும் திருப்பள்ளியெழுச்சி பாடவந்த அடியார்கள் மூலஸ்தானத்தில் சிவலிங்கத்தைக் காணாது அரசனிடம் அறிவிக்கச் சென்றபோது நகரம் தனது பொலிவை இழந்து காணப்பட்டது. இரண்டு விபரத்தையும் அடியார்கள் அரசனுக்கு அறிவித்தார்கள். அதைக்கேட்ட அரசன் திகைத்துத் திகிலடைந்து, “எம்பெருமானே, எங்கே சென்றீர்கள்?” என்று கண்ணீர்விட்டு அழுதான். அப்போது அங்கு வந்த சிவனடியார் ஒருவர், “மன்னா, வைகை ஆற்றுக்குத் தென்கரையிலே சங்கப் புலவர்களோடு சோமசுந்தரக் கடவுளும் மீனாட்சியம்மையும் எழுந்தருளியிருக்கிறார்கள்.” என்று சொன்னார். அதைக்கேட்ட பாண்டியன் அங்கே சென்று சோமசுந்தரப் பெருமானையும் மீனாட்சியம்மையையும் தரிசித்தான். “மன்னா, நீ இடைக்காடன் எழுதிய செய்யுளைப் படிக்கும்போது அதில் அக்கறைப்படாது அவனை அவமானப்படுத்தினாய். அதனால் கோபம் கொண்டு வெளியேறினோம்” என்று அசரீரி வாக்கினால் சொன்னார். அதுகேட்ட பாண்டியன்; “எம்பெருமானே, பிழை செய்துவிட்டேன். தயவுசெய்து பொறுத்தருள்க என்றான். அதன் பின் சிவபெருமான் மீனாட்சியம்மையாருடனும், புலவர்களுடனும் திருக்கோவிலுள்ப் புகுந்தார். அதன்பின் இடைக்காடரை அழைத்து அவருக்குரிய மரியாதையைச் செய்து, பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தனுப்பினார். இடைக்காடரும், புலவர்களும், மக்களும் மகிழ்ந்தனர்.

# வலை வீசிய படலம்

சோமசுந்தரக்கடவுள் மீனாட்சியம்மைக்கு வேதப்பொருளை உபதேசித்தார். அதை மீனாட்சியம்மையார் விருப்புடன் கேட்கவில்லை. அதனால் கோபங் கொண்டு, “நீ நான் உபதேசித்த வேதத்தின் பொருளை விருப்புடன் கேட்காது அலட்சியம் செய்தமையால் நீ மீன்பிடிக்கும் பரத்தவர் குலத்தில் பிறக்கக் கடவாய்” என்று சபித்தார். அதனால் பயந்த மீனாட்சியம்மை, “சுவாமி, நான் விருப்புடன் கேட்காதது குற்றம்தான். இச்சாபத்தில் இருந்து மீள்வது எவ்வாறு?” என்று கேட்டாள்.

“நீ பரதவ மன்னனுக்கு மகளனாகப் பிறந்து மங்கைப் பருவம் அடைந்ததும் நாம் வந்து உன்னைத் திருமணம் செய்வோம்” என்றார். இதை அறிந்த விநாயகப் பெருமான் கோபம் கொண்டு அங்கு வந்து அங்கிருந்த வேதநூல்களையெல்லாம் தூக்கிக் கடலில் வீசினார். அவருடன் வந்த முருகன் சிவபெருமானின் கையில் இருந்த வேதநூலைப் பறித்துக் கடலில் வீசினார். அதனால் கோபங் கொண்ட சிவபெருமான் நந்தியை அழைத்து; “நீ எனது அனுமதியின்றி பிள்ளைகளை உள்ளே விட்ட குற்றத்திற்காச் சுறாவாக மாறி கடலை உழுது கலக்குவாயாக” என்று சாபமிட்டார். விநாயகருக்குச் சாபமிட்டால் அது தன்னை வந்தடையும் என்பதால் முருகனுக்கு; “நீ மதுரையில் வணிகர் குலத்தில் ஊமைப்பிள்ளையாகப் பிறக்கக் கடவாய்” என்று சாபமிட்டார்.

பாண்டிய நாட்டின் கிழக்குப் பகுதியான சமுத்திரக்கரையில் ஒருவன் முற்பிறப்பில் கடுந்தவம் செய்தபோதும், சிறிது தீமையும் செய்தமையால் அவன் பரதவர் குலத்தில் பிறந்தான். அவன் சிவபெருமான் மீது பேரன்பு கொண்டவன். அவனே அங்கு வாழ்ந்த மீனவர்களது தலைவன். அவனுக்குப் பிள்ளை இல்லாமையால் அவன் தினமும் பிள்ளை வரம் வேண்டிச் சிவனை வணங்குவான். ஒரு நாள் அவன் மீன்பிடிக்கச் சமுத்திரத்திற்குச் சென்றபோது, சமுத்திரக்கரையில் நின்ற ஒரு புன்னை மரத்தடியில் உமாதேவியார் ஒரு குழந்தையாக மாறி அழுதுகொண்டிருந்தார். பரதவராசன் அக்குழந்தையைக் கண்டு மகிழ்ந்து சிவபெருமான் தனது வேண்டுகோளுக்கிணங்க அக்குழந்தையைத் தந்துள்ளார் என்று எண்ணி அக் அக்குழந்தையை எடுத்துச் சென்று அன்புடன் வளர்த்து வந்தான்.

சுறாவாக மாறிய நந்தி எம்பெருமான் கடலில் வரும் மரக்கலன்களைப் புரட்டியும் மீனவர்களது வலைகளை அறுத்தும், மீனவர்களைக் காயப்படுத்தியும் பெரும்

அட்டகாசம் செய்து வந்தார். மீனவர்களால் அதை அடக்க முடியவில்லை. பரதவராசன் பல ஆயிரம் மீனவர்களுடன் சென்று வலை வீசியும் அதைப் பிடிக்க முடியவில்லை. அதனால் பரதவராசன் அச்சுறா மீனைப் பிடிப்பவருக்குத் தனது மகளை திருமணம் செய்து வைப்பதாக அறிவித்தான்.

சிவபெருமான் தனது கணத்தில் ஒன்றை மீனவ உருவில் வரச் செய்து அவர் முன்னே சென்று பரதவராசனைச் சந்தித்தார். பரதவராசன்; “நீர் யார்?” என்று கேட்கச் சிவபெருமான் சென்று “நான் மதுரையில் உள்ள வலைஞர்களின் தலைவனின் புத்திரன்” என்றார்.

பரதவராசன் மகிழ்ந்து; “எமக்குப் பல காலமாகப் பல துன்பங்களை ஒரு சுறா மீன் செய்து வருகிறது. எம்மால் அதைப் பிடிக்க முடியவில்லை. நீர் அதைப் பிடித்தால் எனது மகளை உமக்குத் திருமணம் செய்து தருவேன்” என்றான்.

அதைக் கேட்ட சிவபெருமான ஒரு படகில் சென்று சமுத்திரத்தில் மீனவரைத் துன்புறுத்திய சுறா மீனை பிடித்துக் கொண்டு வந்து தரையில் போட்டார். மீனவமக்கள் மிக்க மகிழ்வடைந்தனர். பரதவராசன் தனது மகளைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அதன்பின் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் தோன்றிய சிவபெருமான் பரதவராசனை வாழ்த்திப் பொன்னும் பொருளும் வழங்கிவிட்டு நந்திதேவரையும் அழைத்துக் கொண்டு திருஉத்தரகோச மங்கை என்னும் திருத்தலத்தை அடைந்தார்.

சிவன் பெரியவர், சிறியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனப் பாகுபாடு காட்டாதவர். அவர் எக் குலத்திலும் பிறப்பார். அவருடன் அதே குலத்தில் உமாதேவியாரும் பிறப்பார். சாதி வேறுபாடுகளை அவர்கள் கண்டு கொள்வதில்லை.

## திருவாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

பாண்டிய நாட்டிலே திருவாதவூரிலே அமர்த்திப் பிராமண குலத்தில் ஒரு சற்புத்திரர் பிறந்தார். அவருக்குத் திருவாதவூரர் எனப் பெயரிட்டனர். அவர் வளர்ந்து சகல கலைகளையும் கற்று வல்லவரானார். அவரது திறமையை உணர்ந்த மதுரையின் அரசன் அரிமர்த்தன பாண்டியன் அவரை அழைத்து உபசரித்து மந்திரிப்பதவி வழங்கிக் கௌரவித்தான். சில காலம் மந்திரியாக மக்களைக் கவர்ந்த வாதவூரருக்கு உலக வாழ்க்கை வெறுத்தது. அதனால் அவர் சிவனை வணங்கி அவரது திருவடி நிழலில் வாழ விரும்பினார்.

ஒரு நாள் அரச சபை கூடியபோது குதிரைப் படைத்தளபதி அங்கு வந்து; "மன்னா, எமது குதிரைகளில் பல வயது முதிர்ந்து விட்டன. சில நோய்வாய்ப்பட்டு விட்டன. நல்ல ஆரோக்கியமான குதிரைகள் குறைவாகவே உள்ளன. இந்நிலையில் போர் வந்தால் எமது குதிரைப்படை வலுவிழந்ததாகவே இருக்கும். அதனால் புதிய குதிரைகள் வாங்குதல் வேண்டும் என்றான்.

அதைக்கேட்ட பாண்டிய மன்னன் திருவாதவூரரை அழைத்து, "சமுத்திரக்கரையில் சிறந்த இனக் குதிரைகள் விற்பனைக்கு வந்துள்ளன. நீர் திரவியசாலைக்கு சென்று வேண்டியளவு திரவியங்களைப் பெற்று தேவையான அளவு குதிரைகளை வாங்கி வாரும் எனப் பணித்தான்.

திருவாதவூரர் பொற்றாமரை வாவியில் நீராடி விட்டுச் சோமசுந்தரப் பெருமானையும் மீனாட்சியம்மையையும் வணங்கி விட்டு அரச பரிவாரங்களுடன குதிரைகளை வாங்குவதற்காகச் சென்றார். திருவாதவூரர் தினமும் சோமசுந்தரப் பெருமானை வணங்கும்போது தன்னை ஆட்கொண்டருளுமாறு வேண்டுவார். அதனால் சோமசுந்தரப்பெருமான் ஓர் ஆசாரியராகித் திருப்பெருந்துறையில் உள்ள குருந்தமர நிழலில் தனது மாணவர்களுக்கு வேத உபநிடதங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவ்வழியாக வந்த திருவாதவூரர் குருந்தமரநிழலில் குருவாக எழுந்தருளியிருந்த சோமசுந்தரப்பெருமானைக் கண்டு மெய்சிலிர்த்து தம்மை மறந்து அவரின் அருகில் சென்று அவரின் அனுமதியோடு மாணவர்களோடு சேர்ந்து இருந்தார். அவரால் அவ்விடத்தை விட்டு வெளியே செல்ல முடியவில்லை. தன்னையும் தான் வந்த காரியத்தையும் மறந்து அங்கேயே தங்கிவிட்டார். அத்துடன் குதிரைகளை வாங்கக் கொண்டு வந்த திரவியங்களையெல்லாம் சிவனடியார்க்கும், கோவில் கட்டவும் கொடுத்தனால் அவர் கொண்டு வந்த திரவியம் முழுவதும் செலவாயிற்று. நடந்தவற்றை திருவாதவூரருடன் வந்தவர்கள் சென்று பாண்டியனுக்கு அறிவிக்கப் பாண்டிய மன்னன் குதிரைகளை கொண்டு வருமாறு திருவாதவூரருக்குக் கட்டளையிட்டான்.

செய்வதறியாது திகைத்த திருவாதவூரா் அதைக் குருவுக்குத் தெரிவிக்க குரு சொன்னார்; "வருகின்ற ஆவணி மூலத்திருநாளில் குதிரைகள் வந்து சேருமென்று மதுரைக்குச் சென்று பாண்டியனுக்கு அறிவி" என்றார். அதன்படி திருவாதவூரர் அரச சபைக்கு வந்து குதிரைகள் ஆவணி மூலத்திருநாளன்று அறிவிக்க மன்னன் மிக்க மகிழ்வு கொண்டு திருவாதவூரரைப் பாராட்டினான்.

## நரியைப் பரியாக்கிய படலம்

சோமசுந்தரப்பெருமான் திருநந்திதேவருடன் சிவகணங்களையும் அழைத்து, “நீங்கள் காட்டில் உள்ள நரிகள் யாவற்றையும் பிடித்துப் பரிகளாக்கி அவற்றில் ஏறி மதுரையை அடையுங்கள். நான் உடன் வருகிறேன்” என்றார்.

மதுரையை நோக்கிக் குதிரைகள் வந்தன. அவற்றின் குளம்பொலி திருவாதவூரரினதும் பாண்டிய மன்னனினதும் காதுகளுக்குக் கேட்டது. மங்கள பேரிகைகள் முழங்கக் குதிரைகள் மதுரை நகரில் அணிவகுத்து நின்றன. ஒவ்வொரு குதிரையினதும் அழகையும், அதன் திடமான தோற்றத்தையும் கண்ட பாண்டிய மன்னன் பெருமகிழ்ச்சியுற்றுத் திருவாதவூரரைப் பாராட்டிக் கௌரவித்தான். குதிரைகளின் அணிவகுப்பைப் பார்த்துப் பிரமித்த பாண்டியன் ; “உங்கள் தலைவன் யார்?” என்று ஒரு குதிரை வீரனைக் கேட்க அவர்கள் சந்திரசேகரைக் காட்டி, ‘இவர்’ என்றார்கள். கணங்களாக வந்த குதிரை வீரர்கள் தமது குதிரைகளின் சாகசத்தைக் காட்டினார்கள். பின் அவற்றைப் பாண்டியனிடம் ஒப்படைத்துப் பாண்டியன் அவற்றைப் பந்தியில் கட்டுமாறு பணித்தான். குதிரையில் தலைவனாக வந்த சுந்தரேசருக்கும் குதிரை வீரர்களாக வந்த கணங்களுக்கும் மன்னன் பரிசளித்துக் கௌரவப்படுத்தினார். அனைவரும் கலைந்து மறைந்தனர். மன்னரும் மந்திரி பிரதானிகளும் தத்தமது இருப்பிடத்தை அடைந்தனர்.

சிவனடியார்களுக்காக அதிசயங்களைச் செய்வது சிவனது இயல்பு.

## பரிகள் நரிகளாகிய படலம்

சூரியன் மறைந்தான். நடுச்சாமமாகியது. மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். அப்போது குதிரைகளாக மாற்றப்பட்ட நரிகள் தமது சுயரூபத்தைப் பெற்று ஊழையிட்டன. பந்தியில் கட்டியிருந்த குதிரைகளைக் கடித்துக் குதறின. பின் தப்பி ஓடி வீடுகளுக்குள் புகுந்து வீட்டாரையும், வளர்ப்பு மிருகங்களையும் கடித்துக் குதறின. அதை அறிந்த மன்னன் மிகக் கோபம் கொண்டு தண்டலாளர்களை வரவழைத்து திருவாதவூரைக் கைது செய்து துன்புறுத்தி அவரிடம் கொடுத்த திரவியங்களை வசூலிக்கும்படி கட்டளையிட்டான். தண்டலாளர்கள் திருவாதவூரைக் கைது செய்து தண்டனைகள் பலவும் வழங்கித் திரவியத்தைத் தருமாறு வற்புறுத்தினர். திருவாதவூரர் எதுவும் பேசாது சிவபெருமானை நினைத்தபடி இருந்தார். ஆனால் கோபங் கொண்ட

தண்டலாளர்கள் திருவாதவூரைக் உச்ச வெயிலில் நிறுத்தி அவரது நெற்றியில் கல்லை வைத்தனர். கையை நீட்டச் சொல்லிக் கையிலும் கல்லை வைத்தனர். திருவாதவூரர் எதுவும் பேசாது சிவபெருமானைத் தொழுது கொண்டிருந்தார். திருவாதவூரரின் மகிமையை வெளிப்படுத்த விரும்பிய சிவபெருமான் வைகை நதியை அழைத்து ஊழிக்கால வெள்ளம் போலப் பெருகி மதுரையை அழி என்றார். வைகை பெருகி ஊழிக்கால வெள்ளம் போலப் பெருகி ஓடியது. அதனால் திருவாதவூரரைத் தண்டித்துக் கொண்டிருந்த தண்டலாளர்கள் வெள்ளத்திற்கு அஞ்சி ஓடினர். அதனால் விடுவிக்கப்பட்ட திருவாதவூரர் சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்திற்கு சென்று அன்போடு அவரைப் பூசித்தார். அவரது உடல் சிலிர்த்தது. ஆனந்தக் கண்ணீரில் பெருகியது. தன்னை மறந்த அவர் சித்திரம் போல அசையாது இருந்தார்.

எதையும் மாற்றும் வல்லமை சிவனுக்குண்டு.

## மண் சுமந்த படலம்

வைகை நதி கரையை உடைத்துப் பாய்ந்தமையால் உடனடியாக வைகையின் அணையைக் கட்டுமாறு பாண்டியன் முரசு மூலம் அறிவித்து, ஒவ்வொருவருக்கும் உரிய பங்கை அளந்து விட்டான். மக்கள் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியைக் கட்டத் தொடங்கினர்.

அந்நகரில் வந்தி என்றொரு மூதாட்டி வாழ்ந்து வந்தாள். அவள் பிட்டு அவித்து விற்று வாழ்பவள். அவள் பெரும் சிவபக்தை. தான் அவிக்கும் பிட்டில் முதல் அவிக்கும் பிட்டைச் சோமசுந்தரப்பெருமானுக்குப் படைத்து வணங்கிவிட்டே விற்பனை செய்வாள். அவளுக்கென்றும் ஒரு பகுதி மன்னனால் ஒதுக்கப்பட்டது. அதை அறிந்த அவள் சோமசுந்தரப்பெருமானது சன்னிதியை அடைந்து, “எம்பெருமானே, எனக்கு உறவு என்று சொல்ல உன்னைத் தவிர வேறு யாருமில்லை. எல்லோருக்கும் அணை பகிர்ந்தளித்தமையால் கூலியாட்கள் யாரையும் வேலைக்குப் பிடிக்க முடியாது. மாலையாகு முன் அணையைக் கட்டி முடிக்காவிட்டால் தண்டனை வழங்கப்போவதாக மன்னன் அறிவித்துள்ளான். அதனால் எனக்கு உதவி செய்” என்று கேட்டு வணங்கிவிட்டு வீட்டுக்குத் துயரத்துடன் வந்தாள்.

சோமசுந்தரக்கடவுள் ஒரு கூலியாள் போல வேடமிட்டு வந்தியின் வீட்டுக்கு முன்னால் செல்லும் தெருவில்; “கூலியாள் தேவையா……?” என்று கேட்டுக் கொண்டு திரிந்தார். வந்தி மகிழ்ந்து இது சிவனின் அருள் என்று நினைத்து அவனை அழைத்து

வந்து ; "மகனே, நான் பிட்டு விற்றுப் பிழைப்பவள். இப்போ பிட்டு விற்கச் செல்கிறேன். விற்று முடிந்ததும் உனது கூலியைத் தருகிறேன்" என்றாள். அதற்குச் சிவபெருமான் சொன்னார்; "பாட்டி, எனக்குக் கூலி வேண்டாம். நீ பிட்டு அவிக்கும்போது உலிரும் பிட்டை எனக்குக் கூலியாகத்தா?" என்று கூறிப் பிட்டை வாங்கி உண்டுவிட்டு அணை கட்டுமிடத்திற்குச் சென்று விளையாடி விளையாடி அணையைக் கட்டிவிட்டு ஒரு மரநிழலில் படுத்துறங்கினான்.

மாலைவேளை அணை கட்டும் வேலையைப் பாாவையிட வந்த மன்னன் அணையின் ஒரு பகுதி கட்டப்படாதிருப்பதைக் கண்டு; "இது யாரின் பகுதி" என்று கேட்க அங்கு நின்றோர்; "இது வந்தி என்ற மூதாட்டிக்கு ஒதுக்கப்பட்ட பகுதி. மூதாட்டி கூலிக்கு ஆளை அமர்த்த அவன் வேலை செய்யாது படுத்துறங்குகிறான்" என்றனர். அதனால் கோபம் கொண்ட பாண்டியன் கையில் கொண்டு வந்த பிரம்பால் அக்கூலியாளுக்கு அடித்தான். அவ் அடி பாண்டியன் மீதும் உலகில் உள்ள எல்லா உயிர்கள் மீதும் பட்டது. கூலியாக வந்த சிவபெருமான் மறைந்துவிட்டார். பாண்டியன் திகைப்படைந்து சோமசுந்தரப்பெருமானை வேண்ட; "பாண்டியா, எனது பக்தனான திருவாதவூரன் என்ற மாணிக்கவாசகரைக் கொடுமைப்படுத்தியமையால் இது நடந்தது" என்று ஓர் அசரீரி வானில் இருந்து ஒலித்தது. அதை நினைத்து வருந்திய பாண்டியன் சோமசுந்தரக்கடவுள் சன்னிதானத்தை அடைந்து தனது பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டிப் பின் மாணிக்கவாசகரிடம் மன்னிப்புக் கேட்டான்.

சிவனடியார்களைத் துன்புறுத்தினால் சிவன் நாட்டையே துன்புறுத்துவான்.

## பாண்டியனது சுரம் தீர்த்த படலம்

பாண்டிய நாட்டைக் கூன்பாண்டியன் நீதியாக ஆண்டு வந்தான். அவன் சேரனையும் சோழனையும் வென்று பலம் மிக்க அரசனாகத் திகழ்ந்தமையால் சோழ மன்னன் தனது மகளான மங்கையற்கரசியை அவனுக்குத் திருமணம் செய்து வைத்துத் தனது நாடான சோழதேசத்தையும் பெற்று ஆண்டு வந்தான். தனது மகளுக்குத் துணையாகச் சோழ மன்னன் கல்வியிலும் ஞானத்திலும் சிறந்த குலச்சிறையார் என்பவரையும் அனுப்பி வைத்தான். குலச்சிறையாரின் திறமையைக் கண்ட பாண்டியன் அவரைத் தனது மந்திரியாக்கி நல்லாட்சி புரிந்து வந்தான். குலச்சிறையார் சிவபெருமான் மீது பேரன்பு கொண்டவர். சிவனடியார்களைப் போற்றுபவர்.

இந்நாளில் சமணர்களின் துர்ப்போதனையால் கவரப்பட்ட கூன்பாண்டியன் மிகத் தீவிரமாகச் சமண சமயத்தை விரும்பி அதில் தன்னை இணைத்துக் கொண்டான். அதனால் குடிமக்களும் சமணசமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர். அதனால் கவலை கொண்ட மங்கையற்கரசியாரும் குலச்சிறையாரும் சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்தை அடைந்து மிகவும் கவலையோடு முறையிட்டனர்; "எம்பெருமானே நானும் என் குடும்பத்தினரும் மெய்ப்பொருளான உன்னையே கடவுள் என்று நினைத்து வணங்கி வருகிறோம். ஆனால் எனது கணவன் சமண சமயத்தைத் தழுவியதால் மக்களும் சமணராகினர். இப்போ என்னையும் மந்திரியான குலச்சிறையாரையும் விட ஏனைய எல்லோரும் சமணராகி விட்டனர். அது எனக்கு மிகுந்த கவலையைத் தருகிறது. தயவு செய்து எனது கணவனுக்கு நல்லவைகளை உணர்த்தி மீண்டும் சைவசமயத்தைப் போற்ற வழிசெய்" என்று மங்கையற்கரசி அழுதாள்.

அப்போது சோழநாட்டில் உள்ள சீர்காழி என்ற ஊரில் இருந்து வந்த சிவனடியார் ஒருவர் வந்து; "அம்மையே, சீர்காழியில் சிவபாதவிருதயர் என்னும் சிவனடியார் மக்களெல்லாம் சமணசமயத்திற்கு மாறுவது கண்டு பொறுக்காது சீர்காழியில் உள்ள தோணியப்பனை வணங்கி சைவத்தை வளர்க்கும் பொருட்டுத் தனக்கு ஓர் ஆண்மகவு வேண்டும் என்று வேண்ட, தோணியப்பர் சம்பந்தர் என்ற ஞானக்குழந்தையைக் கொடுத்து மூன்று வயதில் தேவாரம் பாடச் செய்ததோடு உமாதேவியாரைக் கொண்டு ஞானப்பாலூட்டியவர். அவர் ஊரூராகச் சென்று சமணரை விரட்டிச் சைவத்தை மேலோங்கச் செய்து வருகிறார். அவர் தற்போது மதுரைக்கு அடியார்களுடன் வந்து மடத்தில் தங்கியிருக்கிறார். அவரைச் சந்தித்தால் உங்கள் குறைகள் யாவும் தீரும்" என்று கூறினார்.

மங்கையற்கரசியாரின் வேண்டுகோளுக்கிணங்க குலச்சிறையாரும் சிவனடியார்களும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைச் சந்தித்து மங்கையற்கரசியாரின் எண்ணத்தை வெளிப்படுத்தினர். அதைக் கேட்ட சம்பந்தர் அரண்மனைக்கு வருவதாகக் கூறினார். இதை அறிந்த சமணர்கள் சம்பந்தரின் வரவைத் தடுக்க அவர் தங்கியிருந்த மடத்திற்கு தீ வைத்தனர். அதைக் கண்ட சம்பந்தர்; "செய்யனே திருவாலவாய்" என்ற திருப்பதிகத்தைப் பாட, அத்தீ அணைந்து, வெப்பு நோயாக மாறிப் பாண்டியனை வருத்தியது. அரசனது நோயைத் தீர்க்கச் சமணர்கள் தம்மாலான மட்டும் முயன்றனர். அவ்வேளை பாண்டியனுக்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் கொண்டிருந்தது. நோயின் தாக்கத்தைத் தாங்க முடியாத பாண்டியன் மங்கையற்கரசியாரின் விருப்பப்படி சம்பந்தரை அழைப்பித்தான். "யார் எனது நோயைத் தீர்த்து வைப்பார்களோ அவர்களின் சமயமே மெய்ச்சமயம்" என்று பாண்டியன் கூறினான்.

சமணர்கள் தமது கடவுளை வணங்கி மந்திரமோதி பூசை செய்து மன்னனின் உடலை மயிலின் இறகால் தடவினர். மன்னன் நோயால் பெருந்துன்பப்பட்டுச் சம்பந்தரை வேண்ட, சம்பந்தர் மந்திரமாவது நீறு என்ற தேவாரப்பதிகத்தைப் பாடி நீற்றை இட மன்னனது வலப்பக்கத்து நோய் நீங்கியது. இடப்பக்கம் முன்பை விட அதிகரித்தது. அதனால் மன்னன் இடப்பக்க நோயையும் குணமாக்குமாறு வேண்டினான் சம்பந்தர் திருநீற்றிட்டு திருநீற்றுப்பதிகம் பாடினார். அப்போது இடப்பக்க நோய் தீர்ந்தது. மன்னன் மிகுந்த மகிழ்வடைந்து சைவசமயத்தைப் போற்றி அது தான் மெய்ச்சமயமென்று அறிவிக்க மக்கள் எல்லோரும் சைவர்களாயினர்.

மக்களதும் மன்னனதும் அறியாமையைச் சிவன் போக்குவான்.

## சமணரைக் கழுவேற்றிய படலம்.

பாண்டியனது வெப்புநோயைத் தீர்க்க முடியாது திகைத்த சமணர்கள் சம்பந்தரை வாதத்திற்கு அழைத்தனர். சமணர்கள் பெருந் தீ மூட்டி அதில் இரு சமய உண்மைகளையும் ஏட்டில் எழுதித் தீயில் போட்டால் எரியாத ஏட்டுக்குரிய சமயமே மெய்ச்சமயமாகும் என்று சொல்ல அதைச் சம்பந்தர் ஏற்றார். சமணர்கள் தமது சமயத் தத்துவத்தை எழுதித் தீயில் இட்டவுடன் அது எரிந்து சாம்பலானது. சம்பந்தர் “தளிர் இறைவனரொளி'' என்ற பதிகத்தை எழுதித் தீயில் இட்டார். பல மணி நேரம் கழித்தும் அவ் ஏடு எரியாதிருந்தது. அதனால் பயந்த சமணர்கள் இன்னொருமுறை முயன்று பார்ப்போமென நினைத்து புனல்வாதத்திற்கு அழைத்தனர். சம்பந்தர் அதற்கும் சம்மதித்தார். சமணர்கள் ‘அத்திநாத்தி’ என்ற சமணமந்திரத்தை எழுதி கரைபுரண்டோடி வந்த வைகைநதியில் விட அது தள்ளிக் கொண்டோடியது. உடனே சம்பந்தர் ‘‘வாழ்க அந்தணர்” என்ற பதிகத்தை எழுதி வைகை நதியில் விட அது படகுபோல நீரைக் கிழித்துக் கொண்டு எதிர்த்திசையாக ஓடியது. சம்பந்தர் ஏட்டில் ‘‘வேந்தனும் ஓங்குக” என்று எழுதியமையால் பாண்டியனது கூன் நீங்கியது. அதனால் மன்னன் பெருமகிழ்வுற்றான்.

தோற்ற சமணர்களில் சிலர் தாமாகச் சென்று கழுவில் ஏறினார்கள். பலரை மன்னன் பிடித்துக் கழுவேற்றினான்..

# வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

மதுரையில் சமுத்திரக்கரையில் ஒரு பெருஞ்செல்வந்தன் வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பலகாலம் மகப்பேறில்லாததால் சிவனை வணங்கி ஒரு பெண்பிள்ளையைப் பெற்றான். அவளைத் தனது மருமகனுக்கு விவாகம் செய்து வைப்பதென்று முடிவு செய்து அதை எல்லோருக்கும் அறிவித்தான். திடீரென்று அவன் நோய்வாய்ப்பட்டு இறந்தமையால் அதை இனத்தவர்கள் அவனது மருமகனுக்கு அறிவித்தனர். அவன் வந்து மாமனுக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்துவிட்டு அவளை அழைத்துக் கொண்டு தனது ஊரிற்குச் செல்லும்போது இருட்டிவிட்டதால் புறம்பயம் என்ற சிவத்தலத்தை அடைந்து அக்கோவிற்கிணற்றில் நீராடி அங்கு நின்ற வன்னிமரத்தின் அடியில் சமையல் செய்து உணவை உண்டு விட்டு இருவரும் தனித்தனியாக உறங்கினர். அப்போது அங்கு வந்த நாகம் ஒன்று அவனைத் தீண்டியதால் அவன் மரணமானான்.

காலையில் விழித்தெழுந்த பெண் தனது மாமனின் மகன் இறந்ததை அறிந்து அழுது புரண்டாள். அப்போது தலத்தைத் தரிசிக்க வந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அப்பெண்ணின் துயரை அறிந்து இரங்கி அவளின் அருகே வந்து அவனது உடம்பு அமிர்தமாக மாறும்படி நினைத்துச் சிவனைத் தொழுதார். உடனே அவன் நித்திரை விட்டெழுபவன்போல எழுந்தான். அப்போது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்; "உன்னைத் தவிர வேறு துணையில்லாத இவள், உன் நினைவாகவே இருக்கிறாள். அதனால் அவளைத் திருமணம் செய்" என்று சொல்லித் திருமணத்தை நடத்தி வைத்தார். அவன் பெரும் வர்த்தகன். அவனது மாமனது சொத்தும் சேர்ந்தமையால் அவன் குபேரன் போலத் தனவந்தனானான். அவன் இதற்கு முன் திருமணம் செய்து பல பிள்ளைகள் இருந்தார்கள். அதனால் மூத்த மனைவி இவளை ஏற்றுக் கொள்ளாது; "சிவனது திருத்தலத்தில் திருஞானசம்பந்தர் உனது திருமணத்தை நடத்தி வைத்ததாகக் கூறுகிறாய். அதற்கு சாட்சி என்ன?" என்று கேட்டுத் துன்புறுத்தினாள்.

“புறப்பயமென்னும் ஊரில் உள்ள சிவன்கோவிலில் எமது திருமணம் நடைபெற்றது. அதற்குச் சாட்சியாகச் சிவலிங்கமும், வன்னிமரமும், கிணறும் தான் உள்ளன” என்றாள். அதைக் கேட்டுக் கடுங்கோபங் கொண்ட மூத்தவள், “அவற்றை அழைத்து வா கேட்டுப் பார்ப்போம்” என்றாள்.

செய்வதறியாது திகைத்த இளைய மனைவி சோமசுந்தரப்பெருமானது சிவத்தலத்தை அடைந்து; “எம்பெருமானே என்னைக் காப்பாற்று” என்று அழுதாள். திருஞானசம்பந்தர் நடத்தி வைத்த திருமணத்தில் குழப்பம் ஏற்பட்டதை அறிந்த சோமசுந்தரப்பெருமான் வன்னிமரத்தையும், சிவலிங்கத்தையும், கிணற்றையும் அங்கு வரவழைத்தார். அவை அக்கோவிலின் ஈசான மூலையை வந்தடைந்தன. அதைக் கண்ட மூத்தவள் கதிகலங்கி சிவனோடு முரண்பட்டால் சோமசுந்தரப்பெருமான் எதையும் செய்வாரென நினைத்து இளையவளிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு சோமசுந்தரப் பெருமானை வணங்கி அறியாமையால் செய்த தனது பிழையை மன்னிக்குமாறு வேண்டினாள்.

அடியவர்களுக்கு அடியவன் சிவன். இதை உணராதவர்களுக்கு அதை உணர்த்துவான்.

## அருச்சனைப் படலம்

சோமசுந்தரக்கடவுளுடைய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் சொன்ன அகத்திய முனிவரையும் அவரது மனைவியாகிய உலோபாமுத்திரையையும் முனிவர்கள் அனைவரும் அர்ச்சித்து வணங்கி, “இச்சரித்திரத்தைக் கேட்டமையால் பெரும் பயனைப் பெற்றோம். முழுப்பயனையும் பெற வேண்டுமாயின் நாம் சிவபெருமானைக் கண்டு தொழவேண்டும்” என்றனர். அதைக் கேட்ட அகத்திய முனிவர்; “நீங்கள் சொல்வது உண்மை. சிவபெருமானைக் கண்டு வணங்காவிட்டால் மோட்சம் கிடைக்காது” என்றார். நல்லதொரு நாளில் முனிவர்கள் அனைவரும் கங்கையில் நீராடி சோமசுந்தரக்கடவுளை வணங்கி பஞ்சாட்சரமந்திரத்தை உச்சரித்தவாறு விமானங்களில் ஏறி ஆகாயமார்க்கமாக சென்றனர். பின் அவர்கள் பொற்தாமரை வாவியில் நீராடி மூலமந்திரத்தைக் கூறி விநாயகரை வணங்கிய பின் சோமசுந்தரக்கடவுளின் சன்னிதானத்திற்கு சென்று அவரை வணங்கினார்கள். அப்போது சோமசுந்தரக்கடவுள்

சிவலிங்கத்தில் இருந்து வெளிப்பட்டு அவர்களது தலையில் தனது கையை வைத்து ஆசீர்வதித்துவிட்டு மறைந்தார். அதன்பின் அகத்தியர், வசிட்டர் முதலாய முனிவர்கள் தம்தம் பெயர்களில் சிவலிங்கம் தாபித்து பூசை செய்து வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

**திருவிளையாடற் புராணம் முற்றிற்று**

**திருச்சிற்றம்பலம்**